Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 05 | 25 - 31 - மார்ச் - 2005



## காலத்தை உணர்ந்து...

## கிழக்கை இழக்க முடியாது

## நினைவுகளை மறக்க...

## குளங்கள் குட்டிபோடாது...

## படித்ததில் பிடித்தது

### ஒரு கணம்...

இரண்டாயிரம் வருடங்கள்
செத்துக் கிடந்தது
எபிரேயம் *
தாயகம் நோக்கி நடந்தோர்
உயிர்ப்பித்தார்.

அம்மண் நடுவே
ஒரு கற்சிலை
"தேசத்துக்காய் மரிப்பது உன்னதம்.
மரிக்க ஒரு தேசமிருப்பதும் உன்னதமே"
என்கிறதாம் அதன் பீடம்

தேசத்துக்காய் மரித்தவர்க்கும்
மரிப்பதற்காய் தேசம் மீட்டவர்க்கும்
முதுகு சொறிதல் வேண்டா
முகஸ்துதிகள் வேண்டா

ஒருகணம்....
திசை நோக்கித் தொழுதுவிட்டு
கருவிகளை மீள மெருகிடுங்கள்
கடமைகள் காத்திருக்கின்றன- நிறையவே
தேசம் ஒன்று செய்யவேண்டும்.
இஸ்ரேல் *

வின்சென்ற் புளோறன்ஸ்

### நாய்கள்

கைகளில் விளக்கெடுத்து~பூமியில்
சாம்பலைக் காணுகிறோம்
கன்னத்தில் கண்ணீரை
நடக்கவிட்டு~மனதுக்குள்
கனவுகள் தேடுகிறோம்.

குயில்களை பாடவிட்டு
மௌனத்தில் வாழுகிறோம்
கோடையில் பூவெடுக்க
சோலையாய் மாறுகிறோம்.

விஷங்களை குடித்துவிட்டு
வசந்தங்கள் கொண்டு வந்தோம்
புதையலை புதைக்க வந்தோம்
மண்ணிலே பொன்வயல்
கண்டுவிட்டோம்.

முடவனின் கால்களிலே
புயல்களைச் சேர்த்து வைத்தோம்
முத்துச்சிப்பிக்கெல்லாம்
முத்தாரம் சூட்டுகிறோம்.

நிலவினில் தேனெடுத்து
இருளினில் ஊற்றுகிறோம்
கங்கையை பார்த்தபடி
காற்றிலே நீந்துகிறோம்.

மனங்களை தேவர்கள்
மாடத்தில் ஏற்றிவைத்தோம்
மரணத்தை மனிதத்தின்
ஜனனத்தில் புதைத்துவிட்டோம்.

ஆங்கிலத்தில் – சக்கீர்
தமிழில் – இ.றஜித்

## காரசாரம்

## நாங்க மாத்திரைகளுக்குள் கரைந்து போகிறோம்

வேப்பமரத்தினின்றும் தயாரிக்கப்படும் மருத்துவப் பொருட்களுக்கான விற்கவும் தயாரிக்கவுமான தனி உரிமத்தை அமெரிக்கா தனக்கேயுரியது என அறிவித்தது. இது (Patent) பேட்டனற் உரிமம் எனப்படும். உண்மையில் வேம்புக்கு மட்டுமல்ல மஞ்சளுக்கும் இவ்வித உரிமம் தனக்கே உரியது என்று அமெரிக்கா அறிவித்ததையடுத்து மூன்றாம் உலக நாடுகளின் இவ்வகை மூலிகைகளையும் தாவரங்களையும் தமது நாட்டில்வளராவிட்டாலும்கூட உரிமை கோரும் வளர்முக நாடுகளின் செயலை எதிர்த்து வேம்பு எங்கள் தேசத்தில் நாகரிக வளர்ச்சிக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மருந்தாகவும், கிருமி நாசினியாகவும் பாவிக்கப்பட்டு வந்தது. எனவே அதன் உரிமையை விட்டுக்கொடுக்கமுடியாது என்று இந்தியாவின் சுற்றுப்புறச் சூழல் தாவரவியல் அறிஞரும் நிபுணருமான வந்தனா என்ற பெண்மணி சர்வதேச நீதிமன்றில் அமெரிக்காவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். இது ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு நடந்தது.

இந்த வழக்கு இம் மாதம் பிரித்தானிய நீதிமன்றில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு வேம்பின் உரிமை தென்னாசியாவுக்கே உரியது என்றும் மூன்றாம் உலக நாடுகளின் உற்பத்திகளை சூறையாடமுயலும் வளர்முக நாடுகளின் செயல் கண்டிக்கத்தக்கது எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இது பற்றி வந்தனா அம்மையாரிடம் கேட்டபோது; மூன்றாம் உலக நாடுகள் தமது அரிய மருத்துவ மூலிகைகளின் பாவனை, உற்பத்தி போன்றவற்றைக் கைவிட்டுவருகின்றன. இதுவே எமது சொத்துக்களான மருத்துவ தாவர விலங்கினங்களின் உரிமையை வளர்முக நாடுகள் உரிமை கோர வழிசெய்கின்றன. நாம் எமது மருத்துவ முறைகளை புனரமைக்க வேண்டும் என்றார்.

இப்ப என்னத்துக்கு இதையெல்லாம் அவுட்டு விடுறன் என்றால் காரணமுண்டு. புரையோடிப்போன புண் உடலில் இருந்தால் புரையோடிய அளவு உறுப்பை வெட்டி எறிந்து விட்டு வைத்தியம் செய்வது ஆங்கில வைத்தியமுறை. இந்தப் புரையோட்டத்துக்கு திரிவைக்கும் முறை ஆயுர்வேதத்தில் உண்டு. புரைக்கு ஊதும் முறை சித்த வைத்தியத்தில் உண்டு. காட்டாமணக்குக்குருத்தில் சிவந்த குருத்தினை தேங்காய்ப்பாலில் வதக்கி மாற்றுச் செய்து புரையோடிய புண்ணில் வைக்க நீரை உறிஞ்சிக் காய வைத்துவிடும். அல்லது புங்கம் வேர் சீவிப் பாலில் வதக்கிப் புண்ணில் வைத்து ஊதி உள்ளடைப்பதும் உண்டு. வேலிப்பருத்தி என்றொரு கொடி அநேகமாக எல்லா வேலியிலும் இயற்கையாகவே முளைக்கும். பெண்களுக்கான நோய்களுக்கு முக்கியமான மருந்து இதேபோன்று வேலியில் பயிரிடப்படும் ஆடாதோடை அல்லது பாவட்டை எனப்படும் செடி இதன் சருகைப் புகைத்திழுக்க ஆஸ்துமா எனப்படும் தொய்வு குணமாகும். இலையை கஷாயமிட்டுக் குடிக்க சளி நீங்கும். தீராக் கண்வலிக்குப் பாவட்டம் பூவை கண் மீது வைத்துக் கட்டி இரவு நித்திரை செய்து காலையில் எழுந்து பார்த்தால் கண் நோய் இருந்த சுவடே இருக்காது. சீமைக் கிழுவை இன்று விவசாயத்தில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் மரம், இது கிருமிநாசினி, பசளை, கால்நடை உணவு முருங்கைய்ய வேலியில் வைப்பதே வழக்கம். முருங்கை பற்றி நான் சொல்லத் தேவையேயில்லை. இப்படி நாற்புறமும் உள்ள வேலியையே பயனுள்ளதாக வைத்திருப்பது எமது மரபு.

அண்மையில் ஒரு (புரை) ஓடு வைத்த புண்ணுக்கு மருந்து செய்ய ஆமணக்குக் குருத்துத் தேவைப்பட்டது. கிளிநொச்சியிலிருந்து இரத்தினபுரம் புகையிரத வீதி, கனகபுரம், திருநகர், மருதநகர், கணேசபுரம், கோவிந்தன் கடைச்சந்தி, துயிலுமில்லத்தடி எனப் பல இடங்களில் அலைந்தும் ஆமணக்குத் தடி (செடி) காணப்படவில்லை. பூவரசு, பூவரசு எங்கும் பூவரசு. பூவரசின் மீதே கோபம் வந்தது. எனக்கு நினைவிருந்து இவர்கள் வீட்டு வேலியில் கண்டனான் என நினைத்துக் கொண்டு போனால் அருமையான வேலித் தாவரங்கள் வேரோடு கிளறி எறியப்பட்டு அங்கு சிமெந்து மதில்கள் எழுந்து நின்றன. தாவரங்கள் மட்டுமல்ல மனிதர்களே உட்புகாதவாறும் எட்டிப்பார்க்க முடியாதவாறும் கூட மதில்கள் உயர்ந்துள்ளன. கோணாவில், முறிகண்டி ஆகிய பகுதிகளிலிருந்து மிகச் சில துளிர்கள் சேர்க்க முடிந்தது. நொச்சி, வாதமடக்கி போன்றவை கூட இந்தப் பகுதியில் யார் வீட்டிலுமில்லை. (ஜீவா மருந்தகத்தைத் தவிர) நாங்கள் எங்கே போகின்றோம் எம்மிடமிருக்கும் அரிய மூலிகைகளின் பயன்பாட்டை விடுத்து மாத்திரைகளில் கரைந்து போகின்றோம். இதே மூலிகைகளிலிருந்துதான் மாத்திரைகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை நினைவிற்கொள்வோமா.

மாயா


## பாவம் அவர்களும் மக்கள்

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தியேழில் இலங்கையில் நடந்த இனப்படுகொலைகளின் விளைவாக மலையகத்திலிருந்து தமிழர்கள் இங்கு வந்தார்கள். என்றாலும் இவர்களது உழைப்பைச் சுரண்டி தம்மை வளர்த்துக்கொள்ள இங்குள்ளவர்கள் முயன்றார்களேயொழிய அவர்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதை யாரும் எண்ணவில்லை. ஆனால் ஆற்றலுள்ள சிலர் மட்டும் அடர்காட்டினிடையே தம் சொந்த முயற்சியில் காடுகளை அழித்து யானைகளை விரட்டியும் ஏனைய வனவிலங்குகளுடன் போராடியும் காணிகளை உருவாக்கினார்கள். அந்நிலங்களின் அமைப்புக்கேற்ப நெற்செய்கை, தென்னை, மா, பலா போன்ற பயிர்களையும் உருவாக்கி வளர்த்துள்ளனர். இவை தவிர பெருமளவு நிலங்களைக் கொண்டுள்ள மத்தியதர வகுப்பார் இவர்களை ஊக்குவித்துத்தமது நிலங்களைச் சுற்றியுள்ள காடுகளைத் துப்புரவாக்கி குடியிருத்தியும் உள்ளனர். காரணம் அவர்களுடைய கமங்களில் வேலை செய்வதற்கான மலிவான கூலிகளாகவும், இவர்களது கமங்களை அழிக்கவரும் வனவிலங்குகளுக்கு ஒரு தடுப்பாகவும் இக்கமங்களைச் சூழ்ந்ததாக காடுகளிலேயே குடியிருத்தப்பட்டனர். ஆக சிங்களக்காடையராலும், அரசின் அராஜகத்தாலும் தப்பிவந்த மக்கள் புகலிடமாக்கினாலும் இது ஒரு அந்தரநிலையே. ஏராளமானவர்களுக்குப் பிறப்புப்பதிவு கூட இல்லை. திருமணப்பதிவுகள் இல்லை. அத்துடன் தாம் கஷ்டப்பட்டுத் திருத்திய நிலத்தைத் "பெற்றதுக்கு பெற" உள்ளூர் வாசிகளுக்கு தத்தம் செய்தும் உள்ளனர் மீதம் உள்ள நிலத்தை தற்போது அரசாங்கக் காணி ஆணையாளரின் சிபாரிசுப்படி காணிக்கச்சேரி வைத்து ஒவ்வொரு ஏக்கர் நிலத்தை குடியிருப்பவர்களுக்கு வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் காணி அதிகாரிகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

எனவே தற்போதைய நிலையில் இவர்கள் ஏதோ தம்மைவிட அதிகாரமுள்ள வர்கள் யாருமேயில்லை என்ற நிலைக்கு வந்துள்ளார்கள் போலத் தெரிகிறது. மக்களுக்கான அலுவல்களை சட்டபூர்வமாகப் பார்க்க மக்களுடைய வரிப்பணத்தில் ஊதியம் கொடுத்து நியமிக்கப்பட்ட வேலையாள்தான் தான் என்ற நிலையை அறவே மறந்துபோன ஒருடியெல்லோ காணிக்கச்சேரி நடத்தவந்தார். வந்தவுடனேயே அங்குமிங்கும் பாய்ந்தார். எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு ஏதோ இரண்டெழுத்து எழுதத் தெரிந்தவர்கள் மனு எழுதிக் கொண்டிருந்தார்கள். ஆரது என்னே யிறாய் நட வெளியால, இதுக்க ஒண்டுஞ்செய்யேலா முதல் வெளியால போ.... போண்டாப்போ......... என்று ஆரம்பித்தார். நல்லாக் கேட்டுக்கொள்ளுங்கோ ஆர் காணிக் குழு அவை மட்டும் இருங்கோ. இஞ்ச பிசகுள்ள காணியள் வழக்குள்ள காணியள் இருந்தா சொல்லவேணும் என்றவர் தன் மேசைக்கு முன்பாக இருந்த கதிரைகளைப் பார்த்ததும் சன்னதம் ஆடினாா. " ஆரப்பா இதில கதிரை போட்டது உதைமுதல் எடங்கால" என்றவர் மனதில் தனக்கு முன் யாரும் உட்கார்ந்து கதைத்து விடக்கூடாது என்ற ஆணவம் இருந்தது. பெரும்பாலும் கூலித் தொழிலாளர்களைக்கொண்ட கிராமப்பகுதி அது. படிப்பறிவுள்ளோர் குறைவு. பொதுவாகவே காற்சட்டை உத்தியோகத்தருக்கும் பயந்து வாழ்ந்த மரபு.

(19 ஆம் பக்கம் பார்க்க)

தமிழருடைய "போரும் சமாதானமும்" யதார்த்தமான திசைகளில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன் அது ஒரு முன்னோக்கிய நகர்வையும், தீர்வுக்கான நகர்வையும் கொண்டு நகர்த்தப்படுகின்றது என்பதைத் தனது ஐந்து அத்தியாயங்களுக்கு ஊடாகவும் வெளிக்கொணர்ந்துள்ளது. தமிழர்களின் வரலாற்றை பக்கச்சார்பற்ற விதத்தில் பதிவு செய்துள்ள இந்நூல் இலங்கையின் திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றை மாற்ற முயன்றுள்ளது. உண்மையான நிர்ணயமான வரலாற்றை பதிவு செய்வதில் ஆசிரியர் கவனம் செலுத்தியதுடன் மட்டும் நின்றுவிடாது அதனை புலமைசார் நோக்கிலும் நியாயத்தன்மை பொருந்தியதாகவும் ஆக்குவதில் வெற்றி கண்டுள்ளார். தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை நியாயப்படுத்தும் விதம் கலாபூர்வமானது. மிக நேர்த்தியானது. மிகச்சரியானது. அகிம்சை மரபுக்குள் நின்று தோற்றுப்போன ஓர் இனத்திற்கும் ஏமாற்றப்பட்ட ஓர் இனத்திற்கு அழிவுக்குள்ளாக்கப்பட்ட ஓர் இனத்திற்கு மாற்றுவழி ஆயுதம் என்பதை நாகரீகமாக எடுத்து நகர்த்தும் ஆசிரியர் சமூக வரலாற்று மாறுதலை மார்க்சிய பொறிமுறைக்கூடாகவும் சிந்திக்கத் தவறவில்லை.




# தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் 'போரும் சமாதானமும்' நூல் தமிழரின் அரசியல் ஏடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் "War and Peace" என்ற ஆங்கிலப்பதிப்பு வெளிவந்து கடந்த வாரங்களில் பல நாடுகளில் அறிமுகமாகி வருகின்றது. இங்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் கடந்தவாரம் அறிமுகமானது. கலாநிதி அன்ரன்பாலசிங்கம் தமிழீழ விடுதலைப்போராட்டத்துடனும் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்துடனும் கால்நூற்றாண்டுகளுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டவர். அவர் ஒரு புலமையாளர், தத்துவாசிரியர், பல நூல்களை வெளியிட்ட படைப்பாளி. அவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நெருக்கடியான காலங்களில் நெளிவு சுழிவுகளை இனங்கண்டு தந்திரமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இணைந்து செயற்படுத்தியவர். அந்தவகையில் "போரும் சமாதானமும்" என்ற நூல் அதிக சிறப்புகளையும், தமிழர்களின் வரலாற்றில் ஏற்பட்ட பதிவுகளையும் , தடங்களையும் மிகத் துல்லியமாக வெளிக்கொணர்ந்ததில் நூலாசிரியரின் பங்கு ஒரு வரலாற்றுப் பணியாக உள்ளது. தமிழர்களின் அரசியல் வரலாற்றை ஆங்கிலம் தெரிந்த வெள்ளை இனத்தவருக்குப் புரியவைப்பதில் இந்நூல் கணிசமான வெற்றியை அடையும். அது தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில் தனித்துவமான அத்தியாயமாக அமையும்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் பிரித்தானியாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட "போரும் சமாதானமும்" ஐந்து பிரதான அத்தியாயத்தையும் ஐந்து பின்னிணைப்பையும் உள்ளடக்கியுள்ளது. தமிழர்களின் நிலத்தில் தமிழர் மறவர்களின் போர் உபாயத்தைக் காட்டும் அட்டைப் படத்துடன் 514 பக்கத்தைக் கொண்ட ஒரு பாரிய வரலாற்று ஆவணமாக அமைந்திருக்கின்றது. நூலின் அமைப்பு ஒவ்வொரு அத்தியாயங்களும் தயார் செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள முறைமை மிகச்சிறப்பு. நூலாசிரியரின் தேர்ச்சியையுமே காட்டுகின்றது.

தமிழருடைய "போரும் சமாதானமும்" யதார்த்தமான திசைகளில் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன் அது ஒரு முன்னோக்கிய நகர்வையும், தீர்வுக்கான நகர்வையும் கொண்டு நகர்த்தப்படுகின்றது என்பதைத் தனது ஐந்து அத்தியாயங்களுக்கு ஊடாகவும் வெளிக்கொணர்ந்துள்ளது. தமிழர்களின் வரலாற்றை பக்கச்சார்பற்ற விதத்தில் பதிவு செய்துள்ள இந்நூல் இலங்கையின் திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றை மாற்ற முயன்றுள்ளது. உண்மையான நிர்ணயமான வரலாற்றை பதிவு செய்வதில் ஆசிரியர் கவனம் செலுத்தியதுடன் மட்டும் நின்றுவிடாது அதனை புலமைசார் நோக்கிலும் நியாயத்தன்மை பொருந்தியதாகவும் ஆக்குவதில் வெற்றி கண்டுள்ளார். தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்தும் விதம் கலாபூர்வமானது. மிக நேர்த்தியானது. மிகச்சரியானது. அகிம்சை மரபுக்குள் நின்று தோற்றுப்போன ஓர் இனத்திற்கும் ஏமாற்றப்பட்ட ஓர் இனத்திற்கும் அழிவுக்குள்ளாக்கப்பட்ட ஓர் இனத்திற்கும் மாற்றுவழி ஆயுதம் என்பதை நாகரிகமாக எடுத்து நகர்த்தும் ஆசிரியர் சமூக வரலாற்று மாறுதலை மார்க்சிய பொறிமுறைக்கூடாகவும் சிந்திக்கத் தவறவில்லை. ஆரவாரிப்பின்றி மிக அமைதியாக இயக்கவியல் மார்க்சிய கருத்தியலை ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் சார்பில் நின்று வெளிப்படுத்திய தன்மையை உணரமுடிகின்றது.

காந்தியத்தையும் சுபாஸ் சந்திரபோஸின் விடுதலைப் போராட்ட அணுகுமுறையையும் முன்னுதாரணமாகக்கொண்ட தமிழீழ விடுதலைப்போராட்டத்தையும் அதன் தலைமையையும் முதன்மைப்படுத்தும் இந்நூல் ஒரு தனித்துவமான செய்தி ஒன்றை இந்திய ஆளும் வர்க்கத்திற்கு உணர்த்தியுள்ளது. இந்திய ஆளும் வர்க்கம் தமிழர்களையும் தமிழர்களது விடுதலைப் போராட்டத்தையும் தமிழர்களின் தலைமையையும் எதிரிகளாகப் பார்க்கும்போது இந்தியர்களே வெட்கித்தலைகுனியுமளவிற்கு இந்தியர்களின் இரண்டு போராட்ட வழிமுறைகளையுமே முன்னுதாரணமாக தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்ப்து புலமைசார்பிலும் உணர்வு சார்பிலும் மெய்சிலிர்க்கவைக்கும் விடயமாகும். தமிழர்களின் பலமும், திமிரும், யதார்த்தத்தை உணர்த்தும் பக்குவமும் இந்தியர்களுக்கு முன் தமிழர்கள் சமமானவர்கள் என்பதையுமே காட்டுவதாக உள்ளது.

இதனை மட்டுமல்ல இந்நூல் தமிழர்களை எதிரிகளாக எதிர்கொள்ள முயலும் இனங்களின் அரசியல் தலைமைகளின் கடந்தகால பங்களிப்பை சொல்லத் தவறவில்லை. இந்தியர்களை சிங்கள இனத்தை முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கடந்தகால அரசியல் வரலாற்றை நூலாசிரியர் மிகத்தெளிவாகவே பதிவு செய்துள்ளார். அவர்களால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும், விளைவுகளையும் மதித்ததுடன் எந்த வரலாற்றுச் சம்பவத்தையும் பதிவுசெய்யத்தவறவில்லை.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் நூலில் இந்தியத்தலையீடு பற்றிய விபரணம் நீண்டதாகவும் கருத்துப் பரிமாணம் மிக்கதாகவும் அமைந்திருப்பதற்கும் பிராந்திய சக்தியாக இந்தியா இலங்கை இனப்பிரச்சினையில் எடுத்துள்ள எடுத்துவரும் முடிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்திய அரசின் தலையீடு பற்றி நூலாசிரியரும் தேசியத்தலைவரும் எடுத்துவரும் முறியடிப்பு நடவடிக்கைகள் காத்திரமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்தியாவும், ஈழவிடுதலைப் போராட்டமும் பின்னிப்பிணைக்கப்பட்டிருந்ததுடன் வியக்கத்தக்க மாற்றங்களை நூலாசிரியரே தனது அனுபவம் சார்ந்த நிலையிலிருந்து வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூலுக்கும் நூலாசிரியர்க்கும் உள்ள சிறப்பு எதுவென்றால் நூலாசிரியர் தானே அனுபவித்த தானே தலைவருடன் சேர்ந்து முடிவெடுத்த ஒரு விடுதலைப்போராட்டத்தையும் தமிழ் மக்களின் விடுதலையையும் ஒன்றாக வெளிப்படுத்தியிருப்பதாகும்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஏற்படுத்தியுள்ள புதிய தளமாக தமிழரின் இராஜதந்திரம் என்பது சுவையான அதேநேரம் தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு அவசியமானதொன்றாகவும் உள்ளது. இது பற்றி திரு.மு. திருநாவுக்கரசு அவர்களும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த நூல் அறிமுகவிழாவில் குறிப்பிட்டிருந்தார். தமிழர்களுக்கென ஓர் இராஜதந்திரத்தினை இந்தியா பொறுத்த கொள்கையிலும் மேற்குலகம் விதைத்த அரசியல் பொறிகளுக்குள்ளிருந்தும் விடுதலைப் போராட்டத்தை தமிழர் சார்பு நிலையிலிருந்து மீட்டெடுப்பதில் தலைமையோடு பாலசிங்கம் இணைந்து முழுமூச்சாக ஈடுபட்டு வெற்றிகண்டதுடன் மீண்டும் மீண்டும் தந்திரமாக இடப்பட்டு வரும் அரசியல் பொறிகளுக்குள் விடுதலைப்போராட்டத்தைக் காத்துக்கொண்டு செல்கிறார் என்பதே அவரது இராஜதந்திரப் பணியாக உள்ளது. தனித்து இந்திய உபாயத்தையும், தந்திரத்தையும் வஞ்சகத்தனமான அணுகுமுறையையும் பாலசிங்கம் தோற்கடித்தவரல்ல. இந்தியாவுடன் மேற்குலகம் விதைத்த உபாயங்களையும் உடைத்துத் தகர்த்து தமிழர்களின விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாத்து வருகின்றார் என்பதே இந்நூலினை மெருகூட்டும் இன்னோர் விடயமாகும்.


கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தனது நூலினை "Tex book" க்குரிய தரத்துடன் வெளிக்கொணர்ந்துள்ளார். வரலாற்றுச்சம்பவங்களை அப்படியே விமர்சனங்களோ கருத்துக் கூறல்களோ அன்றி வெளிப்படையாக எதிரியையும், நண்பனையும் ஒன்றாகவே வரலாற்றுப் பாரம்பரியத்துக்குள் நின்று அப்படியே வெளிப்படுத்தியுள்ளார். எந்த வரலாற்றுச் சம்பவத்தையும் நிரா கரிக்காது உண்மையை உண்மையாகவே பதிவு செய்துள்ளார். இது வரலாறு கூறும் சமூகத்திற்கும், புலமை யாளர்களுக்கும் சமூகத்தை, தனிமனிதனை விமர்சிக்கும் வசைபாடும் புத்திஜீவிகளுக்கும் சிறந்த அனுபவமாகவும், பாடமாகவும் அமையும்.

எனவே இந்நூல் தமிழன் வரலாற்றை சர்வதேசமயப்படுத்தும் என்பதோடு இந்நூலை ஆங்கிலத்தில் சர்வதேச மயப்படுத்த வேண்டும். அவ்வாறு நிலை ஏற்படுவதே இந்நூலின் பிரதான இலக்காகவும் அமையும். நூல் அறிமுக விழாவில் கருத்துரை ஆற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.வே.பாலகுமாரனும் அதனையே சூசகமாகக் குறிப்பிட்டிருந்தார். யாரும் ஆங்கிலத் தில் பதியாததை திரு. பாலசிங்கம் பதிவு செய்துள்ளார் என்றார், திரு.வே.பாலகுமாரன் இலகுவான மொழியாளுகை.சுவையான சொற்கள இணைவு என இந்நூல் மிக உற்சாகமான உணர்வையும், அறிவையும் நுட்பத்தையும் இணைத்து தயார்செய்யப்பட்டு வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது.

கே.ரீ.கணேசலிங்கம்

# நறுக்கென...

## கனவில் மிதக்கும் கதிர்காமர்



அடுத்த சனாதிபதி வேட்பாளருக்காக யாரை நிறுத்தலாம் என்று சர்வதேச வானொலி ஒன்று நடாத்திய கருத்துக்கணிப்பீட்டில் லக்ஷ்மன் கதிர்காமரின் பெயருக்கு அதிக வாக்குக் கிடைத்து வருவதாக செய்தி வந்ததோ இல்லையோ-

கதிர்காமர் மீண்டும் காற்றில் மிதக்க... கனவில் மிதக்க தொடங்கிவிட்டார் போலும்.

இப்போது அவர் தானே சனாதிபதி என்ற தோரணையில் கருத்துக்களையும் அறிக்கைகளையும் விடத் தொடங்கிவிட்டார்.

நாளுக்கு ஒரு நாடாகச் சென்று வேளைக்கொரு அறிவிப்புக் களை செய்துதான் சொன்னாலென்ன... சனாதிபதி சொன்னாலென்ன... எல்லாம் ஒன்று தான் என்ற தொனிப்பட வாயில் வருவதையெல்லாம் உளற வரும் கதிர்காமர்.

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வொன்றினை மேற்கொள்ளுமாறு எவரும் எம்மை நிர்ப்பந்திக்க முடியாது என்றுள்ளார்.

அதுமட்டுமல்ல ஒரு நாட்டில் இரு இராணுவம், இரு கடற்படை இருக்கவே முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரு விடயங்களும் சில செய்திகளை சொல்வதாகவே உள்ளன.

அதாவது இலங்கையரசு சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வுக்கு தயாரில்லை. எனவே அதனை யாரும எம்மீது•திணிக்க வேண்டாம் என்றே கதிர்காமர் எச்சரிக்கை சமிக்ஞையை முதலாவது கருத்தில் தெரிவித்துள்ளார்.

அடுத்தது, ஒரு நாட்டில் இரு இராணுவம் இரு கடற்படை (இரு விமானப்படை என்றும் அவர் சேர்த்திருக்கலாம்...) இருக்க முடியா தென்றால் விடுதலைப் புலிகளை போரில் தோற்கடிக்க வேண்டும் என்ற கருத்து நிலைப்பாட்டிலேயே அரசு இன்னமும் உள்ளது என்பதை அவர் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

அது மட்டுமல்ல இந்தியா முன்வைக்கும் தீர்வையே அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதை உணர்த்த விரும்பிய இவர் இலங்கையில் எந்த வகையான இறுதித் தீர்வை இந்தியா எதிர்பார்க்கின்றதென்பதை அது கூறுவதற்குரிய நேரம் இதுவாகும் என்ற கூற்றின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆகமொத்தம் தமிழ்மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கியதாக ஒரு நியாயமான அரசியல் தீர்வுக்கு அரசு தயாரில்லை என்ற செய்தியை எதிர்காலச் சனாதிபதிக் கதிரைக் கனவில் காற்றில் பறக்கும் கதிர்காமர் லண்டனில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

சரி அது அவரின் வழமையான எஜமான விசுவாச 'ஊளை' என ஒதுக்கிவிடுவோம்-

ஐயா கதிர்காமரே முன்னர் இப்படித்தான் பிரதமர் கதிரைக்கனவில் நீங்கள் இருந்த போது எல்லோரும் காலை வாரி விட்டது நினைவிருக்குத்தானே...! கவனம்... ஜாக்கிரதையாக காற்றில் மிதவுங்கள்...

## ஊடகத்துறை பறிப்பு! மங்களவுக்கு மங்களம்...!



கடைசியாக மங்கள சமரவீரவுக்கே 'மங்களம்' பாடி வேண்டிய நிலைக்குச் சந்திரிகா அம்மையார் வந்துவிட்டார். முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் சந்திரிகாவுக்கு மிகமிக நெருக்கமானவராகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவரா கவும் இருந்தார் மங்கள சமரவீர.

அந்தக்காலத்திலேயே ஜே.வி.பியினருடன் இரகசியமான தொடர்புகளைக் கொண்டிருந்த ஜே.வி.பியுடனான மறைமுக நடவடிக்கைகள் அப்போதே சண்டேலீடர் வார இதழில் அம்பல மாக்கப்பட்டபோதிலும் மங்களவின் செல்வாக்குக் குறைய வேயில்லை. அது மட்டுமல்ல மங்களசமரவீரவுக்கும், சந்திரிகா அம்மையாரின் தம்பியும் கோமாளி இளவரசர் என வர்ணிக்கப்படுபவருமான பண்டாபரம்பரையின் வாரிசு அநுராபண்டாரநாயக்கவுக்கும் இடையேயான உறவும் இறுக்கமானது.

எல்லாவற்றையும் விட கடந்த பொதுத்தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் அதிருப்திகளைப் புறந்தள்ளி விட்டு அக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே தேர்தல் உடன்பாடொன்றை ஏற்படுத்த சந்திரிகாவைச் சம்மதிக்க வைத்ததில் மங்களவின் பங்கு மகத்தானது. அதுவே இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளான அனைத்துக் குழப்பங்களினதும் மூலகாரணியாகிவிட்டது.

சந்திரிகா- ஜே.வி.பி உறவு ஒட்டவும்- வெட்டவும் முடியாத நரக உறவாகி சந்திரிகாவினதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரதும் அரசியல் எதிர்காலத்திற்கு அச்சமூட்டும் ஆபத்தாகப் மாற மங்களவும் அநுராவுமே காரணம்.

இது சந்திரிகாவுக்கும் இப்போது நன்கு புரிந்துவிட்டது. மங்களவின் கையில் ஊடகத்துறை அமைச்சு சிக்கியது முதல் இதுவரை அதனை முறையாகவும் முழுமையாகவும் பயன்படுத்தி ஆதாயம் பெற்றுக்கொள்பவர்கள் ஜே.வி.பியினர் தான்.

அதனால் பாதிப்படைந்தது சந்திரிகாதான். இதனால் தான் மங்களவிடமிருந்து ஊடகத்துறை பறிக்கப்பட்டுள்ளது. மங்களவின் காலத்தில் ஊடகத்துறை ஜே.வி.பியினரின் ஆதிககமே மேலோங்கியிருந்தது.

இப்போது அதற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மங்கள வெளிநாடுகளிலிருந்த வேளையில் அதிரடி நடவடிக்கையாக ஊடகத்துறையை நிர்வகிக்கும் பொறுப்பை விசேடகுழு ஒன்றின் கீழ் கொண்டுவந்துவிட்டார். இது மங்களவுக்கு மட்டுமல்ல ஜே.வி.பியினருக்கும் அதிர்ச்சியளிக்கும் நடவடிக்கையென்பது நோக்கர்களின் கருத்து.

## எங்கப்பன் குதிருக்குள்



எங்கப்பன் குதிருக்குள் ஒளிந்திருக்கவில்லை. அவர் அங்கேதான் ஒளிந்து கொண்டிருக்கிறார் என்று தானே அர்த்தம்.

சனாதிபதியும், அரசும் படைத்தரப்பும் கருணா குழு என்று எந்தக்குழுவையும் தாம் ஆதரிக்கவுமில்லை, மறைத்து வைத்திருக்கவுமில்லை. தமது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அத்தகையோரின் முகாம் எதுவும் கூட கிடையாது என அரசமைக்கப்பட்ட நாளில் இருந்து இன்றுவரை மறைமுக அறிக்கை விட்டு உள்ளூர் மக்களையும் சர்வதேச சமூகத்தவரையும் நோர்வே நாட்டின் சமாதான அனுசரணையாளர்களையும் பேய்க்காட்டி வந்த விடயம் இப்போது சம்பவத்திற்கு வந்துவிட்டது.

கருணாவின் சகாக்களான தேசவிரோதிகள் சிலரை அரசே பாதுகாக்க இராணுவமே போஷித்து அவர்களுக்கு முகாமமைத்துக் கொடுத்து கைக்கூலிகளாகப் பயன்படுத்திவரும் சமாதானவிரோத போர்நிறுத்த மீறல் துரோக நடவடிக்கையைத் தென்பகுதி ஆங்கில வார இதழ் ஒன்றும் தீவுச்சேனை முகாம் பகுதி மோதல் சம்பவமும் வெளிச்சத்திற்கு கொண்டுவந்துவிட்டது.

இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள வெலிக்கந்தப் பகுதியில் அமைந்திருந்த தீவுச்சேனைமுகாம் கருணாவின் கையாலாகாத காட்டிக்கொடுத்துப் பிழைப்பு நடத்தும் சகாக்களுடையது என்பது முற்றிலும் இந்த மோதல் சம்பவத்தின் மூலம் நிரூபணமாகியுள்ள நிலையில் அரசு வழக்கம் போல அந்த முகாம் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இல்லை எனக் கையைவிரித்துவிட்டு அந்தக் கும்பலைப்பாதுகாக்க அப்பகுதிக்கு பெருமளவில் சென்றுள்ளமைதான் கோமாளித்தனத்தின் உச்சக்கட்டம்.

எமது கட்டுப்பாட்டில் இல்லாத-அதாவது புலிகளின் பகுதிக்கு அந்த முகாம் இருந்திருக்கிறதென்றால் அவர்களைத்துரத்தியடிக்க புலிகளுக்கு இவ்வளவு காலம் சென்றிருக்காது.

அதுசரி அந்த முகாம் புலிகள் பிரதேசத்துள் இருக்கிறதென்றால் இராணுவ முகாமும் பொலிசாரும் அங்குள்ள தமது எடுபிடிப்படையினரைப் பாதுகாக்க நுழைவதென்பது அப்பட்டமான போர்நிறுத்த மீறலல்லவா? யாருக்குக் காதில் பூச்சுற்ற முனைகின்றனராம்? கடந்த சில மாதங்களாக வெலிக்கந்த பகுதியை அண்டியுள்ள பிரதேசங்களில் விடுதலைப்புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களில் சூத்திரதாரிகள் யார் என்பதை தீவுச்சேனை முகாம் மோதல் தெட்டத்தெளிவாகி விட்டது.

இனியென்ன சொல்லப்போகிறாராம் அதிகார அம்மணியார் முழுப்பூசணிக்காயை சோற்றுள் புதைக்க முயன்ற அம்மணியார் முழிமுழியென்று முழிக்கத் தொடங்கியுள்ளார்.

அரசோடு துணைப்படையாக மட்டுமல்ல காட்டிக்கொடுப்போராகக் கைக்கூலி வேலை செய்வோராக "வாலாட்டிச்சேவகம்" செய்யும் தமிழின விரோதிகள் யார் எவரென இது நாள்வரை தமிழ் மக்களே அறிவர். இப்போது சர்வதேச சமூகமும் அறிய வாய்பேற்பட்டுள்ளது.

மாப் புளிக்கிறது அப்பத்துக்கு நல்லதென்று சொல்வார்கள் புரிகிறதா?

## அறிக்கைகளும் மறுப்பறிக்கைகளும்...



சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான நிவாரணப் பணிகளுக்கென வழங்குவதாக உலகநாடு கள் உறுதியளித்த நிதியில் ஐந்து சதம் கூட தனக்குக் கிடைக்கவில்லை அதிர்ச்சி அறிவிப்பு விடுத்து சர்வதேசத் தையே விழிபிதுங்க வைத்த சிறிலங்காவின் அதி உத்தம சனாதிபதி சந்திரிகா அம்மையார் அவ்வாறு கூறி இரண்டு மூன்று நாட்களிலேயே எல்லாரும் எதிர்பார்த்தது போன்று- அதாவது வழக்கம் போல் தான் அப்படி எதனையும் கூற வில்லை. சனாதிபதி செயலகத்தின் மூலமாக அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

சந்திரிகா அம்மையாரின் அரசியல் அறிந்தோர் அவர் முன்னுக்குப்பின் முரணாக அறிக்கைவிடுவதிலும், செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் வல்லவர் என்பதனை நன்கு அறிவர்.

மேடையில் பகிரங்கமாகக் கூறியவற்றையே மறுத்து தான் அப்படி எதையும் கூறவில்லை கேட்பவர்தான் மதிமயக்கத்திலோ மதுமயக்கத்திலோ கேட்டு தப்பாகப் புரிந்து கொண்டுவிட்டார் என்று மற்றவரை மடையராக்கிவிடுவதில் சந்திரிகா அம்மையாருக்கு நிகர் எவருமேயில்லை.

இந்த முறை மடையராக்கப்பட்டுள்ளவர் அவரின் முன்னாள் நெருங்கிய சகாவும் ஆலோசகருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களே தான்.

நான் சொன்னது, சர்வதேச அமைப்புகள் மற்றும் உலகநாடுகள் எமக்கு தருவதாக உறுதிவழங்கிய நிதியை தரவில்லை என்று மட்டுமே என விளக்கும் சனாதிபதி இதுவரை கிடைக்கப்பட்டுள்ள நிதி விபரம் பகிரங்கப்படுத்தப்படும் எனச் சமாளித்துள்ளார்.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து இது வரை 900 கோடி ரூபாவரை அரசுக்குக்கிடைத்துள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளமையானது சனாதிபதியின் கூற்றின் பொய்மைத்தன்மையை பகிரங்கமாக்கிவிட்டுள்ளது.

சமாதான கிரியா ஊக்கியாகச் செயல்படுவோரே...

சர்வதேச சமூகமே....

இலங்கைக்கு நிதிவழங்கும் அமைப்புகளே...

இந்த நாட்டின் சனாதிபதி உங்களிடம் எதையும் வெளிப்படையாகக் கூறினால் அதனை நம்பி ஏமாந்து போகாதீர்கள்....!

பொறுத்திருங்கள்

மறுநாளோ, மறுவாரமோ, மறுமாதமோ, மறுவருடமோ அல்லது மறு தேர்தலின் போதோ கூட அவர் அதனை மறுத்து அறிக்கைவிடலாம்.

அது அவரது சுபாவம்...

அறிக்கை விடுவதும் பின் மறுப்பறிக்கையை அவரே வெளியிடுவதும் அவரது அரசியல் மூலோபாயமே...!

செங்குட்டுவன்







# வேதனையான நினைவுகளை மறக்க நினைக்கிறோம்

ஆழிப்பேரலை அனர்த்தம் அடங்கி இரண்டு மாதங்களைக் கடந்து நாட்கள் ஓடிக்கொண்டிருக்கின்ற இந்நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களது மனங்களை வெல்ல ஆற்றுப்படுத்தல்கள் ஒருபுறமும் அதேவேளை அவர்களின் வாழ்வை ஓரளவேனும் வழமைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் மறுபுறமும் பல அமைப்புச் சார்ந்தவர்களாலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் வடபகுதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இடமான முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் தற்போதைய செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதனை அறியும் நோக்குடன் அப்பாடசாலை தற்போது இயங்குகின்ற இடத்திற்குச் சென்றோம். வெட்டவெளியில் மூன்று தற்காலிகக் கொட்டில்கள் அதன் நடுவே பிளாஸ்ரிக் கூரைவிரிப்பினால் நான்கு தடிகளுடன் ஆக்கப்பட்ட அதிபரின் அலுவலகத்தோடு தனது செயற்பாட்டை மேற்கொண்டுவருகின்றது.

கடந்த டிசெம்பருக்கு முன் கிட்டத்தட்ட ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்ற இப்பாடசாலையில் தற்போது 750 மாணவர்கள் அளவிலேயே கல்வி கற்கின்றனர். அதைவிட சுனாமியின் போது நூறு மாணவர்கள் வரை இறந்துள்ளதாகவும் கூறுகின் றனர். வழமையான செயற்பாட் டிற்குத் திரும்பவில்லையென்றாலும் வழமையை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதாக அதிபர் கூறுகின்றார்.

ஒருசில அடிப்படை வசதிகளை மட்டும் பூர்த்திசெய்துகொண்டு இயங்குகின்ற இப்பாடசாலை எதிர் வரும் யூன்மாதம் உயர்தரப்பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டியும் உள்ளது. மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களது வீடுகளில் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக வாழ ஒழுங்கின்மை, கல்வியில் கவனம் செலுத்துவதில் பின்நிற்றல் போன்ற பிரச்சினைகள் காணப்படுவதாகக் கூறுகின்றனர். ஆய்வு கூட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் அற்ற நிலையில் எமது செயற்பாட்டினை முடிந்தவரை கொண்டு செல்ல வேண்டியுள்ளது என்கிறார் வித்தியாலய முதல்வர்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை உறவுகள் உடமைகளை இழந்திருப்பதால் மனசூரீதியாகப் பாதிக்கப்பட்டு இருந்தாலும் தங்களது செயற்பாடுகளை ஓரளவேனும முழுமையாகச் செய்கின்றனர்.

மாணவர்களை ஆற்றுப் படுத்தல் மூலம் அவர்கள் மனங்கள் வெல்லப்படுவதுபோல ஆசிரியர்களிற்கும் ஆற்றுப்படுத்தல்களை மேற்கொண்டால் நன்றாக இருக்கும் என நினைக்கின்றேன். இங்கு எல்லா ஆசிரியர்களும் ஏதோ ஒரு வகையில் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

அதாவது நேரடியாக சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களும் மனதளவில் தாக்கப்பட்டிருக்கும் அதேவேளை ஏனைய ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தங்களிடம் கற்ற பிள்ளைகளை இழந்திருப்பது மற்றும் வசதிகளுடன் கூடிய நல்ல சூழலை இழந்திருப்பது எல்லாம் ஒரு தாக்கமாகவே உள்ளது என கூறுகிறார் அதிபர் அல்பிரட் அவர்கள்.

இதைவிட இப்பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர் தேவானந்தா கூறும்போது ஆற்றுப்படுத்துகை என்பது பல வழிகளில் மேற்கொள்ளலாம். என்னைப்பொறுத்தவரை பாதிகப்பட்டவர்கள் அனைவரும் அதன் தாக்கத்திலிருந்து மீண்டும் வந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் பழைய வேதனையான மறக்க நினைக்கின்ற சம்பவங்களை மீள நினைவுபடுத்தி ஆற்றுப்படுத்துகை என்பது தேவையற்றது. இதிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் மறக்க நினைக்கின்ற சம்பவங்களை நாம் அவர்களிடம் மீண்டும் நினைவுபடுத்தி கடந்த காலத்திற்கு அழைத்துச்செல்வதாகவே அமையும். அது தவிர்க்கப்படல் வேண்டும். புகைப்படங்களைக் காட்டி மற்றும் சுனாமி நிகழ்வை நினைவுபடுத்தி அந்தக்கோரச் சம்பவங்களை நினைவுபடுத்தினால் நாம் அவர்களின் மனங்களை வெல்லமுடியாது. எனவே இவ்வாறான ஆற்றுப்படுத்தல்களைத் தவிர்த்து ஏனைய வழிகளில் ஏதேனும் நடவடிக்கைகளின் மூலம் வழமையான செயற்பாட்டிற்குப் பாதிக்கப்ப்பட்டவர்களை அழைத்துச் செல்லவேண்டும். அதுவே விரும்பத்தக்கது என தனது கருத்தைக் கூறுகின்றார் இவ் ஆசிரியர்.

மேலும் ஒரு ஆசிரியையிடம் பாதிக்கப்பட்ட சக ஆசிரியர்களிடம் கற்பித்தலில் ஏதேனும் மாற்றத்தைக் காண்கின்றீர்களா என கேட்டபோது பெரிசா ஒரு மாற்றமும் இல்லை எனவும் சில நேரங்களில் ஏதேனும் நினைவுகளில் ஆழ்ந்திருப்பதனை மட்டுமே காண்பதாகவும் கூறினர்.

இதைவிட பாடசாலைவிட்டு வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்த சில மாணவர்களைச் சந்தித்த போது அவர்களின் கருத்து இவ்வாறு அமைந்தது. படிப்பினம் பிரச்சினை இல்லை. ஆனால் முந்தி மாதிரி இல்லை. பொதுவாக எல் லோரும் வழமைக்கு வந்திட்டம் என்று தான் நினைக்கிறன் என்றார்கள்.

பரீட்சைக்கு எவ்வாறு தயார் படுத்தலில் ஈடுபட்டுள்ளீர்கள் எனக் கேட்டதற்கு வீடுகளில் படிக்க முடியாது தெரியுந்தானே சின்ன கொட்டில்களில்தான் எல்லா வேலையும். இதனால் நாங்கள் சில பொதுவான இடங்களில் சேர்ந்து படிப்பதற்கு முயற்சிக்கின்றோம்.

மேலும் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை முதல்வர் அருட்சகோதரி கில்டா சிங்கராஜா கூறும்போது;

சில வசதிகள் குறைபாடுகளோடு செயற்பாடுகள் தொடர்ந்தாலும் ஓரளவு திருப்தியாக உள்ளது. அதைவிட ஆற்றுப்படுத்தலில் மனங்கள் செல்லப்படுதல் வீரும்பத்தக்கது என்றாலும் பழைய நிகழ்வுகளை மீள் நினைவுக்கு உட்படுத்தி ஆற்றுப்படுத்துகை ஆரோக்கியமாக இருக்காது என நான் நினைக்கிறன் என்றார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் அனைத்தும் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. இவ் வேலையில் அவர்களின் எதிர்கால வளமான வாழ்வுக்குக் கரம் கொடுப்பது பொறுப்பு வாய்ந்தவர்கள் அனைவரதும் கடமையாகும். சுனாமி தொடர்பாக தவறான அச்சமூட்டுகின்ற தகவல்களை விடுத்து அவர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிசமைப்பதே நன்மைதரும்.

— சூழியன்

---

# 'றோ'வை அதிரவைத்த அதிகாரி...

ச.கௌசல்யன்

இந்[illegible]யா பெரும்[illegible] வல்லரசு தொழில்நுட்ப[illegible]லும் உள[illegible]லைகளிலும் பொருளா[illegible] அணு[illegible]வியல[illegible]ும் உலகலாவிய அள[illegible]வில் வள[illegible]துவருகின்ற வல்லரசு என்பது அமெரிக்க அரசுக்கு தெ[illegible]யும். இந்தியா மேலும் மேலும் வளர்ந்துவருவதனை அமெரிக்கா விரும்பவில்லை. இந்தியாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கும் அதிநவீன தொழில் நுட்ப தகவல்களை- சேகரிப்பதற்கும் அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ திட்டத்தை தீட்டியது.

சி.ஐ.ஏ உளவு நிறுவனமானது நீண்டகாலமாக இந்தியா உளவுத்துறை நிறுவனமான றோவை அதில் உயர் பதவிகளை வகிக்கும் அதிகாரிகளை தனது கழுகுப்பார்வைக்குள் உட்படுத்திவந்தது. அதன் பார்வைக்குள் றோவின் உயர் பதவி வகித்த உயர்நிலை அதிகாரி மாட்டிக் கொண்டார். கழுகுப் பிடிக்குள் மாட்டிக்கொண்ட அதிகாரியால் விடுபடமுடியாமல் போய்விடவே.

சி.ஐ.ஏ யின் சுகபோக நலனுக் குள் கட்டுண்டு போகவே தன்னிடம் இருக்கும் தகவல்களையும் தனது உயர் பதவியின் பயனை பயன்படுத்தி தனது நாட்டின் அதிமுக்கிய தகவல்களையும் அயல் நாடுகளில் றோவினால் சேகரிக்கப்படும் தகவல்களையும் இந்தியாவின் அதிமுக்கியமான அணுகுண்டுத் தொழில் நுட்பம் நவீன ஆயுத உற்பத்தி அதிசக்தி வாய்ந்த ஏவு கணைகள் போன்ற தகவல்களை தனது இரும்பு பீரோக்களில் பூட்டி வைக்கவேண்டியதை எல்லாம் சி.ஐ.ஏ க்கு வழங்கினார். மாறாக இவருக்கு சி.ஐ.ஏ அமெரிக்காவின் சுக போகங்களையும் பரிசில்களையும் பணத்தினையும் வழங்கியது. அமெரிக்காவின் புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ இந்தியாவின் புலனாய்வு நிறுவனத்திற்குள் ஊடுருவி இந்தியாவின் அதிஉயர் இரகசிய தகவல்களை அறிந்து வெற்றியடைந்துள்ளது. இந்தியா வெளிப் படையாக அமெரிக்காவிடம் உளவியல் போரில் தோற்றுப் போய்விட்டது. இந்திய அரசாங்கத்தில் உளவு நிறுவனங்களில் ஒன் றின். செயலர் வெளி நாட்டு புலனாய்வு SECRTRY EXTEPNAL INTLLIGCE இதன் கீழ் மிக முக்கியமான பணியினைத்தான் RAW றோ செயற்படுகின்றது. றோவின் பணிதான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்திய வல்லரசுக்கு நடந்தது வேறு தலைமைக்கு விசுவாசமாக தன்னைக் காட்டிக் கொண்டு எதிரி நாட்டுக்கு உளவு வேலைகளில் முழுமையாக ஈடுபட்டார். தனது மேலதிகாரிகளுக்கு சந்தேகம் எழாத முறையில் தடயங்கள் இன்றி மிகவும் சாமர்த்தியமாகச் செயற்பட்டவர்தான் றோவின் முக்கிய பொறுப்பில் இருந்த உயர் அதிகாரி.



இவரால் இருபது வருடங்களாக இந்தியாவின் அதிமுக்கியமான இரகசிய தகவல்களை எல்லாம் அமெரிக்காவின் உளவுத்துறைக்கு இரகசியமான முறையில் அனுப்பிவைக்கப்பட்டது. இவர் தனது கைக்குக் கிடைக்கும் தகவல்களை எல்லாம் தனது அலுவலக போட்டோக் கொப்பி இயந்திரத்திலே பிரதி எடுத்து சாதுரியமான முறையில் எடுத்துச் சென்று தனது நண்பர் ஒருவர் ஊடாக இந்தியாவின் உளவு நிறுவனங்களது கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அமெரிக்க உளவுத்துறை தகவல்களை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தியா 1998 ஆம் ஆண்டு அணுகுண்டை வெடிக்கவைத்து பரிசோதித்தது. இதனை தனது றோ உளவுத் துறை கூட அறிந்திராத வகையில் வெற்றிகரமாக பரிசோதித்து முடித்தது. இந்த நடவடிக்கையினை இந்தியா மேற்கொள் வதற்கு முன்பு அறிந்திருக்கவில்லை என்று அதிர்ச்சியடைந்த அமெரிக்க உளவுத்துறை இந்தியாவின் மீது உளவுபார்த்த சில அதிகாரிகளை குற்றம் சாட்டி பதவி நீக்கம் செய்தது இந்தியா. இப்பொழுது அமெரிக்கா மீது பாசாங்குப் பாசம் என்னதான் காட்டினாலும் சந்தேகக் கண்ணோடுதான் இந்தியாவை பார்க்கிறது அமெரிக்கா. றோ அமைப்புக்குள் ஊடுருவிவிட்டால் போதும் றோவினால் உளவு பார்க்கப்படும் நாடுகளை சுலபமாக தனது கழுகுப் பார்வைக்குள் கொண்டுவந்துவிடமுடியும் என்று தான் றோவிற்குள் தீவிரமாக ஊடுருவுகின்றது. சி.ஐ.ஏ ஒரு தந்திரத்தை வைத்திருக்கிறது. றோ உயர் அதிகாரிகளின் வாரிசுகளை தேடிப் பிடித்து அமெரிக்காவில் உயர் படிப்பை மேற்கொள்ளவோ உயர் பதவியில் வேலைபார்க்கவோ வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்து உடனடியாகவே விசாக்கொடுத்து நிரந்தரமாகக் குடியமர்த்தி விடுகின்றது. இவர்களை வைத்து அப்பாக்களை வளைத்து சதிவலைக்குள். அப்பாக்களை விழுத்தி விடுகின்றனர்.

றோவின் தலைமையகத்தில் கடுமையான சோதனை நடவடிக்கை இருந்தாலும் இணைச் செயலாளர் அந்தஸ்துக்கு மேல் இருக்கும் எந்த அதிகாரிகளையும் சோதிப்பதில்லை. உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் தப்புச்செய்ய மாட்டார்கள் என்ற எண்ணமும் மேல் மட்டத்தை சந்தேகப் படுவது சரியில்ல என்ற நாகரிகமும்தான் காரணமாக அமைந்துவிடுகின்றது. இதனை பயன்படுத்தி றோவின் உளவுத்துறை அதிகாரி இரவிந்திர கிங் போன்றவர்களுக்கு இதுவே வசதியாகிவிட்டது. இதனால் இவர் றோவின் தலைமைப் பீடத்துக்கு எந்த சந்தேக வலையிலும் சிக்காமல் தப்பி வந்திருக்கிறார்.

றோவின் அனைத்து உளவு வேலைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்தியாவிற்கு அயல் நாடுகளில் நிலவும் அரசியல் நெருக்கடிகள் பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சிகள் போன்றவற்றை தகவல் சேகரிப்பது இந்தியாவின் பாதுகாப்பு நலனை கருதி சதி வேலையில் ஈடுபடுவதும் இதனது செயற்பாடு

(20பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 25 . 03 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# மாணவர் சக்தி...!

மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவது குறித்து கல்வியதிகாரிகளை விளக்கங்கோரி யாழ்ப்பாணத்தில் இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அரசுக்கு எதிராகவும், படையினருக்கு எதிராகவும் நடைபெற்ற போராட்டங்களில் பெருமளவான மாணவர்கள் பங்குகொண்டு வருகின்றமையையடுத்தே இராணுவத் தளபதியால் இக்கடிதம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

கல்வித்துறை சார்ந்த அமைச்சும் திணைக்களங்களும் இருக்கக்கூடியதாக ஒரு சிவில் கட்டமைப்புக்குள் படையினர் தமது அதிகாரத்துக்கு மீறிய வகையில் மூக்கை நுழைக்கும் ஒரு செயற்பாடாகவே இதனைக் கொள்ள வேண்டியுள்ளது.

படையினர் யாழ்ப்பாணத்தில் மாணவர்களின் போராட்டத்தின் வீச்சை மதிப்பீடு செய்ததன் ஒரு விளைவாகவே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது.

அத்தோடு மாணவர்களுக்கேயுரிய சனநாயக ரீதியிலான உரிமைகளையும், உணர்வுகளையும் இராணுவக்கரம் கொண்டு நசுக்க முனையும் ஒரு முயற்சியாகவுமே இதனை நோக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மட்டுமன்றி தமிழர் தாயகம் எங்கும் படரத்தொடங்கியுள்ள இந்த மாணவர்களினது விழிப்பு நிலையானது படையினரை அதிகமாகவே அச்சம் கொள்ளவைக்கிறது.

இத்தகைய போராட்டங்களானது தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள படையினரின் இருப்பு நிலையையே கேள்விக்குள்ளாக்கிவிடும் என அச்சமடையத் தொடங்கியிருப்பதன் ஒரு விளைவாகவும் இதனை நோக்கலாம்.

அத்தோடு படையினரின் இந்த செயற்பாடானது மாணவர் சக்தியின் உச்சத்தின் அச்சம் காரணமானதே.

இந்த நிலையில் மாணவர்கள் தமக்கிருக்கும் உரிமைக்கும் உணர்வுக்கும் அப்பாலான காரியங்களில் ஈடுபடவில்லை.

தமது இனத்திற்கும் தமது தாயகத்திற்கும் எதிராக, எவர் தலையீடுகள் செய்தாலும் அவர்களின் உணர்வுகள் அவர்களுக்கு எதிராக திரும்பவே செய்யும்.

இது இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் இந்த வரலாற்றுப்பாடம் வியாபித்துக் கிடக்கிறது.

எந்த நியாயமான போராட்டங்களாயினும் அது மாணவர்களுக்குள் முதலில் தீயை மூட்டியிருக்கிறது. அந்த வகையில் எமது மாணவர்களுக்குள் அந்த உணர்வு எழுகிறது.

இந்த நிலையில் கல்விசார் சமூகத்தின் மத்தியில் படையினர் தமது மூக்கை நுழைப்பதானது அவர்களை மேலும் மேலும் போராடும் குணத்துக்கு தூண்டுமேயொழிய அவர்களை அடங்கிப்போகச் செய்யப்போவதில்லை.

ஏனெனில் எமது இன்றைய விடுதலைப்போராட்டமானது மாணவர்களுக்குள் தான் முதலில் முகிழ்ந்தது.

எமது மாணவர்கள் மீதுதான் முதலில் அரச அடக்குமுறைகளும் முதலில் நீண்டன. அந்த வகையில் தாயகத்தில் தமிழர்களுக்குள் முதலில் எத்தகைய இடர்களை எவர் திணித்தாலும் அங்கு மாணவர்கள் கிளர்ந்தெழவே செய்வார்கள்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மாணவர்களின் போராட்டங்கள் குறித்து படைத்தரப்பு கேள்விகளை கேட்பதும் தமது மூக்கை நுழைப்பதும் கண்டிக்கத்தக்கதோடு இதனைக் கல்விசார் சமூகம் உரிய முறையில் தமது எதிர்ப்பை வலுவாகவே காட்டவேண்டும்.

# சோற்றுக்கு வெளியில்; தெரியும் பூசணிக்காய்...




சிறிலங்கா அரசும் இராணுவமும் இதுவரைகாலமும் ஒப்புக்கொள்ள மறுத்த தமிழின விடுதலைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்வது அம்பலமாகியிருக்கின்றது. அதன்மூலமாக சமாதானத்துக்கு அடிப்படையான புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணாக அதுநடந்துகொள்வதும் அம்பலமாகி இருக்கிறது.

இதுவரை காலமும் விடுதலைப்புலிகள், தமக்கெதிராக ஆயுதக் குழுக்களை சிறிலங்கா படையினர் கையாண்டுவருவது குறித்து கண்டனம் தெரிவித்திருந்தனர். முன்னாள் தமிழ்க்குழுக்களின் உதிரிகளைச் சேர்த்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தாக்குதல்களில் ஈடுபடுத்திவருகின்றனர்.

2000 ஆம் ஆண்டு நோர்வே சமாதான முயற்சிகளை நேரடியாக ஆரம்பிக்கும்போதே படைகளின் இந்த ஊடுருவல் தாக்குதல்களும் தொடங்கியிருந்தன. இவை புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்தும் 'மிலேனியம் சிற்றி' சிறிலங்கா பொலிசாரினால் தெரியாத்தனமாக முற்றுகையிடப்பட்டதைத்தொடர்ந்தும் வெளித் தெரிந்தன.

இவற்றில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களாவர். இடைக்காலத்தில் இவர்களின் செயற்பாடுகள் முடங்கிப் போயிருந்தன. ஆனால் கிழக்கில் கருணாவின் பிரச்சினை தோன்றியதும் அதனை வாய்ப்பாகக்கொண்டு சிறிலங்கா படைகள் மீளவும் தாக்குதல்களை ஆரம்பித்தன.

கருணாவையும் ஓரிரு சகாக்களையும் தமது கட்டுப்பாட்டினுள் வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களைத் தொடர்கின்றன. பலமேதும் இன்றித் தனித்துப்போன கருணாவை மிகப் பிரமாண்டமான சக்தியாக பிரசாரப்படுத்துவதன்மூலம் தாக்குதல்களில் உள்ள தமது பின்னணியை மூடிமறைக்க படைகள் முற்பட்டன.

அதன்படி புரிந்துணர்வு உடன்பாட்டை அரசு தரப்பும் படைகளும் ஒருபோதும் மீறவில்லை என்று சாதிக்கவும் தலைப்பட்டன. ஆனால் கருணாவை கைப்பொம்மையாகக் கொண்டு உடன்படிக்கையின் சரத்துக்களை அப்பட்டமாக மீறும் ஆயுதக்குழுக்களை வளர்க்கும் செயற்பாடுகளை படைகள் மேற்கொண்டன.

இதற்கென பெருந்தொகைப் பணம் இறைக்கப்பட்டு முன்னாள் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள் இந்த ஆயுதப்படைகளில் சேர்க்கப்பட்டனர்; சேர்க்கப்படுகின்றனர். கருணாகுழு என்றபெயரிலான விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்ளும் அணிக்குச் சேர்க்கப்படும் தமிழ்க்குழு உறுப்பினர்களுக்கு இருபதாயிரம் ரூபாவரை மாதாந்தம் வேதனமாக-கைக்கூலியாக வழங்கப்படுகின்றது.

சிறிலங்கா இராணுவத்தில் இணையும் சாதாரண சிங்களச் சிப்பாய்க்கு வழங்கப்படும் வேதனத்தைவிட இந்தக்கைக்கூலிகளுக்கு அதிகமானது. விடுதலைப்போராட்டத்துக்கு எதிராக தமிழ் ஆயுதக் குழுவொன்று உள்ளது என்பதைக் காட்டுவதற்கு சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் பகீரதப் பிரயத்தனங்களில் இந்தக்கைக்கூலிக் கொடுப்பனவும் ஒன்றாகும்.

இதற்கு சிறிலங்கா பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கப்படும் நிதியில் இருந்து கணக்கு காட்டப்படாமலே ஒரு தொகை செலவிடப்படுகின்றது எனத்தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்கா அரசின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைப்பின் நிதியில் இருந்தும் இதற்கென பணத்தை வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

இவற்றுக்கு மேலாக கருணாவின் பெயரால் சிறிலங்கா படைகள் வளர்த்து வரும் தமிழ்விரோத குழுவுக்கு பலவந்தமாக எல்லையோரக் கிராமங்களில் இருந்து சிறுவர்களும் சேர்க்கப்படுகின்றார்கள். ஆனால் அவற்றை விடுதலைப்புலிகளே சிறுவர்களைக் கடத்திச் செல்வதாக தென்னிலங்கை ஊடகங்கள் பிரசாரப் படுத்தின.

இந்தப் பின்னணியில்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் சிறிலங்கா படைகளால் முன்னெடுக்கப்பட்டன. கிழக்கில் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகள் பலியெடுக்கப்பட்டார்கள்; பலர் காயப்படுத்தப்பட்டார்கள்.

இதனால் சிறிலங்கா படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையவேண்டும் என போர் நிறுத்தம் நெருக்கடிக்குள்ளான தருணத்தில் விடுதலைப் புலிகள் நோர்வே ஊடாகக் கேட்டிருந்தனர். அதற்கு கடந்த மாதம் பதிலளித்த சிறிலங்கா சனாதிபதி தம்மிடமோ இராணுவத்திடமோ அப்படி எந்த ஆயுதக்குழுக்களும் இல்லை எனக் கூறியிருந்தார். அதனை தென்னிலங்கை ஊடகங்களும் முக்கியப்படுத்தியிருந்தன.

ஆனால் கடந்தவாரம் தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வெலிக்கந்தை, தீவுச்சேனையில் தமிழ் ஆயுதக் குழுவின் முகாம் இருப்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. கருணா குழுவின் பெயரில் சிறிலங்கா படையினரால் நிர்வகிக்கப்படும் அந்த முகாம, கடந்த ஒருமாத காலமாக செயற்பட்டு வருகின்றது என இப்பத்திரிகை தெரிவிக்கின்றது. மட்டக்களப்பு- பொலநறுவ வீதியில் செவனப் பிடியவிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் இந்த முகாம் அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக என்று சிறிலங்கா இராணுவம் வளர்த்துவரும் இந்த ஆயுதக் குழுவினால் அப்பகுதியில் வாழும் தமிழ்- முஸ்லிம் மக்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. இதனைக் கண்டித்து கடந்தவாரம் வெலிக்கந்த பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். தீவுச்சேனையில் உள்ள ஆயுதக் குழுவை வெளியேற்றவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

சிறிலங்கா அரசும் படைகளும் பிரயத்தனப்பட்டு தமது கைகள் வெளியே தெரியாதபடி வளர்த்தெடுத்த தமிழ் ஆயுதக்குழுவின் முகாம் அம்பலமாகிவிட்டது. ஆனால், வழமைபோன்றே இராணுவம் அதனை அப்படி எதுவும் இல்லை என்று மறுத்தது. இராணுவப் பேச்சாளர் தயாரத்னாயக்கா அதனோடு இராணுவத்தினருக்கு எந்தத் தொடர்பும் கிடையாதெனக் கூறினார்.

ஆனால், மறுநாளே படையினரும் பொலிசாரும் அந்த முகாமில் உள்ள ஆயுதக் குழுவினரோடு தொடர்புபடுவதைக் காட்டும் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மறுநாள் அதிகாலை அம்முகாம் மீது இடம் பெற்ற தாக்குதலில் காயமடைந்த தமிழ்க்குழு மீது உறுப்பினர்கள் நான்கு பேரை மீட்டுச் சென்று பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். பின்னர் மேலதிகசிகிச்சைக்காகக் கொழும்புக்குகொண்டு சென்றுள்ளனர்.

காயமுற்ற அந்த ஆயுததாரிகள் சிறிலங்கா பொலிசாரின் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இது வரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் இயங்கியதற்காக அவர்கள் மீது வந்த சட்டநடவடிக்கையும் இல்லை அதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுவதாகவும் தெரியவில்லை. இதன்மூலம் அவர்கள் படையினரோடு சேர்ந்து இயங்கும் குழுவினர் என்பதுதான் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் போர் நிறுத்தத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகக் கண்காணிப்புக்குழு-கூறியுள்ளது. உண்மையில் இராணுவத்தினர் அல்லாத இராணுவத்தினருடனோ அவர்களுடன் சேர்ந்தியங்கும் குழுவினருடனோ அல்லாதவர்கள் மீதான இத்தகைய தாக்குதல்களை போர்நிறுத்தத்துக்கு அச்சுறுத்தலாக கண்காணிப்புக் குழு கருதியதில்லை.

இப்போது கண்காணிப்புக் குழு அவ்வாறு கருதியதன்மூலம் படையினருக்கும் அக்குழுவினருக்கும் உள்ள தொடர்பை உறுதி செய்திருக்கின்றது. இந்தத் தாக்குதல் இடம்பெற்று இரண்டு நாள்கள் கடந்த நிலையிலும் இராணுவம் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கவில்லை. இது தொடர்பாக விசனமும் கண்காணிப்புக்குழுவினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிறிலங்கா இராணுவமும் இதுவரையும் மிகப் பெரிய போர் நிறுத்த மீறலில் ஈடுபட்டு வந்திருப்பதனாலேயே, முறைப்பாடு செய்யவில்லை என்று கருதலாம்.

**ஞாபகன்**

தங்க வேலாயுதபுரம்
அழகான பெயர்
அழகான கிராமமும்தான்.

கடந்த 27.02.2005 நாள் முழுவதும் அங்கேயே நின்றிருக்க கிடைத்தது. மலைகள் போன்று சிறுசிறு குன்றுகள், பெருங்கற்பாறைகள் காணப்பட்டன.

சேனைப் பயிர்ச்செய்து அறுவடை முடிகிற காலம். அறுவடையின் போதான மணம் வீசிக்கொண்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் பிரிவின் ஒழுங்கமைப்பில் இங்கு கிராமிய எழுச்சிப் பாசறை ஒன்று ஏற்பாடு செய்யப்ப ட்டிருந்தது.

அம்பாறை மாவட்டம்-அக்கரைப்பற்று பிரதேசம்-திருக்கோயில் தம்புலுவில் கிராமங்கள் கடந்து தங்கவேலாயுதபுரம் புறப்பட்டோம். வழியின்



# கிழக்கை நாங்கள் யாருக்கும் தாரை வார்க்க முடியாது...

இருமருங்கிலும் தங்கமான வயல்கள், தங்கம் விளைகிற வயல்கள். இடையிடையே நீர்த்தடாகங்கள். அதனுள்ளே கருமைச்சுடர் விடும் எருமையினங்கள். வயல்வெளியெல்லாம் நிறைந்து காணப்பட்ட பசுக்கூட்டங்கள்.

அம்பாறை மாவட்டத்தில் பயணம் செய்யும் நீண்ட நெடுவழி எங்கும் இந்த அழகிய அமிர்தமான வளம் நிறைந்த காட்சிகள் குவிந்து கிடந்தன.

சிறிலங்காவின் பேரினவாதிகள் கிழக்கு மாகாணத்தை கூறுபோட வேண்டும் என்று வயிறுநோகக் கத்துவதில் காரணம் நன்றாகப் புரிகிறது. இவ்வளவு வளமான நிலத்தை தமிழ் மக்களின் சொந்த நிலம் என்று ஏற்றுக்கொள்ள பேரினவாத மனம் இடம்கொடுக்க வில்லைப்போலும். பரந்து விரிந்த அந்த வயல்வெளிகளில் விளைந்து குலுங்கும் நெல்மணிகள், கறவையினங்கள், கடல்மடியில் விளைந்து குவியும் மீனினங்கள் எல்லாமே கிழக்குப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவன. சுனாமி எனும் இயற்கைப் பேரனர்த்தம் வந்து தாக்கியதால் கடற்பரப்பு சோபை இழந்து காணப்படுவது உண்மையே எனினும் அம்பாறைத் தமிழ் நிலத்தின் வளம் வளமே இத்தகைய அழகுக்குள்ளாலும் வளங்களுக்குள்ளாலும் தான் தங்கவேலாயுதபுரம் போனோம். தங்கமான மனிதர்களைக்கண்டோம். தங்க வேலாயுதம் என்ற பெயரிலேயே 78 வயது நிரம்பிய பெரியவர் இருந்தார். போராளிகள் அவரை அன்போடு "பெரிசு" என்று அழைத்தார்கள். 35 வருடங்களுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட தன் ஊரின் கதை சொன்னார்.

மிகவும் அருகாமையிலேயே உள்ள உடும்பன் குளம் கிராமத்துப் படுகொலையைப்பற்றி உணர்ச்சி முறுக்கேற கூறினார். 126 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட கோரத்தின் கதையை நேரில் கண்ட அந்த மக்கள் சொன்னபோது நெஞ்சு கொதித்தது.

தங்கவேலாயுதபுரம் இன்றைக்கு விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசம். அரசாங்கத்தின் அரச அதிகாரிகளின் பார்வைக்கு இந்தக் கிராமம் சரியாகப்படவில்லை போலத்தெரிகிறது. ஒரு பாடசாலை உண்டு 5ஆம் வகுப்புவரை படிக்கமுடியும். 6ஆம் வகுப்பு போக வேண்டுமென்றால் இங்கிருந்து கிட்டத்தட்ட 30 கிலோ மீற்றர் தூரம் போகவேண்டும். 26 பிள்ளைகள் இருந்தார்கள். அடுத்த வகுப்புக்கு ஓரிருவர் தவிர எல்லோருமே இடை விலகி விடுவார்கள் எனக் கூறுகின்றனர். நீண்ட தூரத்திற்கு வீதி சரியாக இல்லை. வீதியில் பஸ் போக்குவரத்து அப்பிடி ஏதும் கிடையாது. பத்துவருடமாக இந்தப்பாடசாலையில் அதிபராக இருப்பவர் மிகவும் கவலைப்பட்டார்.

சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் இந்தக் கிராமத்தில் குடிதண்ணீர் ஒரு பெரும் பிரச்சினை சில இடங்களில் 'பூவல்' எனப்படும் சிறு கிணறுகள் தோண்டியுள்ளனர். இது போதுமானதேயல்ல.

இத்தனைக்கும் இந்தக்கிராமத்தில் இருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காய் பலபோராளிகள் இணைந்துள்ளனர். தளபதிகளாகவும் உள்ளனர். மாவீரர்களின் பட்டியல் நீண்டது. ஓரிருவர் வெளியூர்களில் சென்று படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாகவுள்ளதாகவும் கூறினர்.

சேனைப்பயிரோடு வேட்டையாடுதலும் இவர்களது தொழில்களில் முக்கியமானது. நாம் நின்றிருந்த அன்றைய மாலைப்பொழுதில் ஒரு காட்சி கண்டோம். ஆறுபேர் கொண்ட வேட்டைக்குழுவொன்று வந்து கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட 10 வேட்டைநாய்கள் அவர்களுடன் அணிவகுத்துவந்தன. இவர்களுடைய கைகளில் கத்தி, தோள்களில் கோடரி, மண்வெட்டி இவற்றோடு ஒருவரின் தோளில் ஈட்டி ஒன்று காணப்பட்டது. வேட்டையாடிய மிருகங்கள் தோளில் உள்ள மண் வெட்டிப்பிடிகளில் தொங்கிக் கொண்டிருந்தன. கள்ளம் கபடமற்ற அந்த மனிதர்கள் தமது வேட்டைப் பொருட்களை நியாயமான விலையிலேயே விற்றனர். வீடுகளுக்குச் சென்றனர்.

இரண்டு நாட்களாக அந்தக் கிராமத்தில் போராளிகள் நின்றிருந்தனர். பாடசாலை வளவைத் துப்புரவு செய்வதிலும் பாடசாலைக்குத் தேவையான சிறு மண்டபம் கொட்டில் ஒன்றைப் போடுவதிலும் போராளிகளும் மக்களும் இணைந்து நின்ற காட்சி முக்கியமானது. "மக்களின் சுமைகளில் பங்குகொண்டு பணியாற்றுவதே சிறந்த அரசியல் வேலை" என்ற எமது தேசியத் தலைவரின் கனவு. அந்தக்கிராமத்தில் அன்றையபொழுது நனவாகியது கண்டோம். இடர்வரும்போதெல்லாம் போராளிகள் மக்களுடன் நின்றனர். எனினும் இயல்பாகவே கிராமங்க ளில் இப்படி வேலைசெய்யவேண்டியது மிகவும் அவசியமானது.

இதனால் விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையில் கட்டி வளர்க்கப்படும் உறவு புனிதமானது. வலுவானது.

ஒன்றாகவே வேலை செய்தனர். முழுக்கிராமமும் போராளிகளும் அன்றைக்கு அழைக்கப்பட்டிருந்த அரச ஊழியர்களும் ஒன்றாகவே அமர்ந்திருந்து உணவு உண்டனர். கருத்துக்கள், தேவைகளைக் பகிர்ந்து கொண்டனர். பொறுப்புக்களை எடுத்தனர். எல்லாமே ஆரோக்கியமாக இருந்தது. கிராமம் கிராமமாக இத்தகைய நடைமுறைகள் வரும்போது எமது மக்களின் வாழ்வு முன்னேற்றமடையும். அதனூடே விடுதலைப்போரின் பாதை வீரியமடையும். எங்கள் தேசியம் பலம்பெறும். விடுதலை விரைவாகும் என்ற உணர்வு மேலோங்கியது.

மாலைப்பொழுதில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் கிராமிய தேசிய எழுச்சிக்கான ஆற்றுப்படை அரங்கு" இடம்பெற்றது. சிறு பிள்ளைகளுடன் விளையாடத் தொடங்கி படிப்படியாக பெரியவர்களை அரங்கில் இணைத்து வளர்ந்தது அரங்கு. அங்கு நின்ற பலபோராளிகளும் இளைஞர்களும் வயோதிபர் பெண்களும் பேதமின்றி அரங்காடலில் இணைந்து நின்ற அருமையான காட்சியைக் கண்டோம்.

காட்சியின் இடையில் கதையாடலின்போது,

"உங்கள் கிராமம் ஏன் இன்னும் முன்னேறவில்லை"

என்று கேட்கப்பட்டபோது அவர்கள் தெளிவாகச்சொன்னார்கள்.

"சிங்களவர்கள் எங்களை அடக்கியாளுறதாலதான் எங்களால முன்னேற ஏலாமல் கிடக்கு"

"அப்ப என்னசெய்யலாம்?"

எங்களுக்கு தமிழற்றை அரசாங்கம் வேணும் புலியள்தான் எங்கட அரசாங்கம் அவை வந்தால் தான் நாங்கள் சந்தோசமாய் வாழலாம்"

"அந்த நம்பிக்கை இருக்கா உங்களுக்கு?"

"ஓம் எங்கடை பிள்ளைகள் கன பேரை அதுக்காகத்தான் போராட அனுப்பினனாங்கள் என்று உணர்ச்சி மேலிடக் கூறினர்.

நவீன வசதிகள் எதுவும் அற்ற எத்தனையோ விதத்தால் பின் தங்கி நிற்கும் இந்தக்கிராம மக்களின் மனங்களில் உள்ள வெளிச்சம் எங்களுக்கு ஆச்சரியம் தந்தது. தேசியத் தலைமையின் மீதும், போராளிகள்மீதும் விடுதலையின் மீதும் அவர்கள் கொண்டிருந்த விசுவாசம் மெய்சிலிர்க்கவைத்தது.

"ஊரூராய் பொங்குதமிழ் வண்டிவருகுது" என்று பாடினோம்.

இடையில் "விடுதலையின் வாசல் வரை சுமந்து வந்த எம் தலைவன் பேர் சொல்லி நாம் ஆட" என்ற வரிகளின் பின்னால் "சூரியதேவன்" என்று சொல்ல அவர்கள் தலைவரின் பேர் சொல்லி துள்ளிக்குதித்து மகிழ்ந்ததைக் கண்டு நெஞ்சு நெகிழ்ந்து போனோம்.

அவர்களிடம் இயல்பாகவே கனன்றுகொண்டிருக்கும் விடுதலைத் தீயை சுவாலித்து எரியச்செய்ய வேண்டும். கைவிடப்பட்டுக்கிடக்கும் எத்தனையோ கிராமங்களில் இந்த விடுதலைத் தீ மூட்டலைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொண்டோம்.

"இரண்டு நாட்கள் இந்தக் கிராமத்தில் நின்று மக்களோடு வேலை செய்ததில் ஒரு போராளி என்றமுறையில் உங்களிடம் என்ன யோசனைகள் உணர்வுகள் தோன்றுகின்றன?" என்று தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி அவர்களிடம் கேட்டிருந்தோம்."இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் அம்மக்கள் விடுதலையின் மூலமே எமது சந்தோசமான வளமான வாழ்வைக் கட்டியமைக்க முடியும் என்று தெளிவாக இருப்பதும், எமது தேசியத் தலைமையின் மீது இவ்வளவு நம்பிக்கையும் பாசமும் கொண்டிருப்பதும் நெஞ்சை நெகிழ்த்தியது. மகிழ்ச்சியைத் தந்தது. அது மட்டுமல்ல இந்த மக்களோடு நாங்கள் போராளிகள் இன்னும் எவ்வளவு நெருங்கி அவர்களின் சுமைகளில் பங்கு கொண்டு தேவைகளை அறிந்து நிறைவேற்றப் பாடுபட வேண்டும் என்றும் யோசிக்கக் கூடியதாய் இருக்கு. இதன் மூலம் எங்களது மக்களை தேசிய விடுதலைக்காய் மேலும் அணிதிரட்ட முடியும் என்ற நம்பிக்கையும் அதிகரிக்கின்றது" என்றும் தெளிவாக உறுதிபடச்சொன்னார்.

எமது தேசத்தில் படித்தவர்கள் அரச அலுவலர்கள் எல்லோருமே ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். எமது கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தேசியத்தின் உயிரைச் செழுமைப்படுத்த எல்லோரும் இணைந்து பாடுபடவேண்டும். கிராமங்கள் தோறும் படையெடுத்துச் சென்று அவர்களின் வாழ்வை மேம்படுத்த கற்பனையுடன் கடுமையாக உழைக்கவேண்டும். இது எங்கள் எல்லோரினதும் கடப்பாடு.

"எங்கள் நிலம் எமக்கு வேண்டும்" என்று தங்கவேலாயுதபுர மக்கள் எம்மோடு இணைந்து உரத்த உணர்ச்சி மிக்க குரல்கொடுத்த அந்த நினைவுகளை நெஞ்சு நிறையச் சுமந்தபடி இரவு 7.00 மணிக்கு அவர்களிடம் விடைபெற்று காட்டு யானைகள் பயமுறுத்தும் அந்தப் பாதை வழி போராளிகளும் நாமும் திருக்கோயில் வந்தடைந்தோம்.

வழி நெடுக அந்த மக்களின் வாழ்வு பற்றி, மனசுபற்றி அறிவு பற்றி நிறையக் கதைக்கக் கூடியதாக இருந்தது. தங்கவேலாயுதபுரம் தந்த அனுபவமும் கிழக்கு நோக்கிய அந்தப் பயணமும் நெஞ்சில் நிறையவற்றைத் தேக்கிவைத்திருக்கிறது. கிழக்கை நாங்கள் யாருக்கும் எப்போதும் தாரை வார்க்கமுடியாது என்ற உண்மையையும் உணர வைத்தது.

**செ. விந்தன்**




01.ஒரு நாட்டில் இரண்டு ராணுவமோ இரண்டு கடற்படையோ இருக்க முடியாது. -லக்ஸ்மன் கதிர்காமர்-

*"அப்பாடா அப்ப இலங்கை ரெண்டு நாடெண்டு கண்டு பிடிச்சிட்டியள்."*

2. இஸ்ரேல் கடற்படைத்தளபதி இலங்கைக்குத் திடீர் விஜயம் - செய்தி.

*"மீண்டும் வேதாளம் முருங்கையில"*

3. அமெரிக்கப் பிரசைகளைக் கிழக்குக்குச் செல்லவேண்டாமென அமெரிக்கத்தூதரகம் எச்சரிக்கை - செய்தி-

*"சாம்பலுக்கால புகைவருது"*

4. ஊடகவியலாளர்கள் டொலர் களை வாங்கி நாட்டைப்பிரிக் கிறார்கள். -விமல்வீரவன்ச-

*"எங்களப்போல வாயாலேயே பிரிக்கலாம் எண்ணுறியளோ."*

5. அடுத்த சனாதிபதியாக அநுராவா ராஜபக்சவா சந்திரிகா தடுமாற்றம் -செய்தி-

*"அடுத்த அதிகாரி- சனாதிபதியா பிரதமமந்திரியா எங்கட தடுமாற்றம்"*

6. உதவி வழங்குவதாக வாக்களித்த நாடுகள் எதையும் வழங்கவில்லை.-சந்திரிகா-

*"உங்கட கணக்குக்கு மட்டும் எண்டு 110 கோடி தந்தவை சரியே"*

மட்டக்களப்பில் நடக்கும் கொலைகளுக்கும் தமது படையினருக்கும் தொடர்பில்லை அது கருணா குழு செய்தது என கைகாட்டி விட்டு தான் தப்பிக்கொண்டு போர் நிறுத்த மீறலை செய்து வந்த சிறிலங்கா அரசுக்கு சண்டேலீடர் வைத்தது பெரும் பொறியை. கடந்த 16ஆம் திகதியன்று மட்டக்களப்பு எல்லை பொலநறுவையின் வெலிக்கந்தை செவனப்பிட்டி கிராமம் அயற் கிராமமக்கள் இரு இளைஞர்கள் அப்பகுதி ஆயுதகுழுவினால் கொல்லப்பட்டதை யடுத்து, அதற்கு முன்னர் தமிழ், முஸ்லிம் சிங்களவர் உட்பட 7பேர் கொல்லப்பட்டதை யடுத்து அந்த ஆயுதக்குழு தீவுச்சேனை கிராமத்தை விட்டு வெளியேற வேண்டும் என போராட்டம் நடத்தினர்.

பின்பு கொல்லப்பட்ட இருவரும் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் என தெரியவந்தது.இந்த வகையில் அந்த ஆயுதக்குழுயாராக இருக்கும் என்பது தெளிவாகிவிட்டது.

இதனை உறுதி செய்ய கொழும்பில் வெளியாகும் சன்டேலீடர் வார ஏடு தன் செய்தியாளர் குழுவை அனுப்பியது.குறித்த ஆயுதக்குழு இயங்கிய கிராமம் தீவுச்சேனை. இது பொலநறுவை மாவட்டத்தின் கிராமம் ஆகும். இது பொலநறுவை- மட்டக்களப்பு வாழைச்சேனை நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. வரைபடத்தில் அதனை பார்க்கலாம்.இதனருகே தெற்காக முத்துகல,செவனப்பிட்டிய, மேற்கே கட்டுவன் வில,வடகிழக்காக ஓமடியாமடு ஆகிய கிராமங்கள் உள்ளன.

ஒரு காலத்தில் மட்டக்களப்புக் குரியதாகவிருந்த இக்கிராமங்கள் பின்னர் ஆக் கிரமிப்பு மூலம் பொலநறுவைக்கு மாற்றப்பட்டன. இவற்றில் தமிழ் முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்கின்றனர். இந்தப்பிரதேசத்துக்குக் கிழக்காக காடும் குறிப்பாக கண்டல் காடும் அதற்கடுத்ததாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான வாகரையும் உள்ளன. தீவுச்சேனை பாரம்பரிய தமிழ்க்கிராமம் ஆகும். இந்த தீவுச்சேனைக்கான சாலை (படத்தில் மஞ்சள்கோடாக உள்ளது.) இந்தச்சாலை பொலநறுவை மாவட்டத்துக்குரிய பகுதியின் றொட்டவேவ வரை செல்கின்றது. இது வேறு சாலைகளுடன் இணைந்து பொலநறுவை திருகோண மடு மற்றும் மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசத்துக்கும் செல்கின்றது. பொலநறுவை-வாழைச்சேனை பிரதான சாலையில் வெலிக்கந்தைக் கருகாக செவனப்பிட்டிய அருகாக தீவுச்சேனைக்கான வீதி ஆரம்பமாகின்றது.

இந்த தீவுச்சேனைக்குள் சிறிலங்கா படைமுகாம்கள் இல்லை. ஆனால் இதனைச்சுற்றி படைமுகாம்கள் காவலரண்கள் இருக்கின்றன.தீவுச்சேனைக்குத் தெற்காக கடைசி சிறிலங்கா படை முகாம் முத்துகல சந்தியில் உள்ளது. முத்துகலவில் இருந்து தீவுச்சேனை 3 கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது. சண்டே லீடர் குழுவினர் இந்த அரணைத்தாண்டித்தான்

# இன்னும் எதனை மறைக்க முடியும்...




தீவுச்சேனைக்குச் சென்றனர். அங்கு கிராமத்தின் நுழைவாசலில் ஒரு காவலரண் இருந்துள்ளது. அதனருகே கோல்சர் கட்டி துப்பாக்கியுடன் ஒரு சிறுவன் நின்றிருந்தான். அவனிடம் இக்குழுவினர் மங்களன் மாஸ்ரரைச்சந்திக்க கேட்டன் மங்களம் மாஸ்ரர் கருணாவின் நெருங்கிய சகா. அவர் தலைமையில்தான் அங்கு ஆயுதக்குழு இருப்பதாக முதலில் மக்கள் தகவல் சொல்லினர். அதனை வைத்துத்தான் மங்களம் மாஸ்ரரை அவர்கள் கேட்டனர். அதலிருந்தவர் சிங்களம் பேசத்தக்கவராக இருந்தார். மிதிவண்டியில் சென்ற அவர் சிறிது நேரத்தில் மங்களம் மாஸ்ரர் வேலையாக இருப்பதாகத் தகவல் சொன்னார். இதன் மூலம் அங்கு மங்களம் மாஸ்ரர் இருப்பதாக உறுதி செய்யப்பட்டது.

இப்பகுதி சிறிலங்கா இராணுவ 23-1ஆம் பிரிகேட் தளபதி பிரிகேடியர் .எச்.எம.எச்.ஏ.ஹேரத்திடம் செய்தியாளர்கள் இந்த ஆயுதக்குழு வெளியேற்றப்படவேண்டும் எனக் கேட்டபோது இந்த ஆயுதக்குழுவை இந்த மக்களே வரவேற்றனர் என்றும் இப்பொழுது அவர்களே வெளியேற்றக்கேட்கிறார்கள் என்று அசட்டை யாகப்பதில் சொன்னார். இந்த ஆயுதக் குழுவின் முகாம் 7 மாதங்களின் முன்பதாக அமைக்கப்பட்டது. இதனை தளமாகக் கொண்டு 60பேர் இயங்கி வருகின்றனர் என்றும் அம்பலமாகியுள்ளது. வெலிக்கந்தையில் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளராகவிருந்து லெப்டினன்ட்கேணல் கௌசல்யன், மற்றும் 3 போராளிகள்,மாமனிதராகக் கௌரவிக்கப்பட்ட அரியநாயகம் சந்திர நேரு ஆகியோர் இவர்களாலேயே கொல்லப்பட்டனர் என்பதும் வலுவாகியுள்ளது. வாகரைப்பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல்களை நடத்தி வருபவர்கள் இவர்களே என்பதும் அம்பலமாகியுள்ளது. இந்த தகவல் சன்டேலீடரால் அம்பலமானபோது சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க இதனை மறுத்து அறிக்கை விட்டார். இப்படிப்பட்ட முகாம் எதுவும் அங்கு இல்லை என அவர் தெரிவித்தார்.இதைவிட வடமத்திய மாகாண சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் ஜயந்தகமகே தீவுச்சேனை இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதி இல்லை என்றார். தீவுச்சேனை முத்துகலவிற்கு 12 கிலோமீற்றருக்கு அப்பாலேயே உள்ளது என்றும் அது முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.ஆனால் இதனைச் சுற்றி படைமுகாம்கள் உள்ளதும் உறுதியான ஒன்று. இது வடக்கு கிழக்கிற்கு அப்பால் பொலநறுவை மாவட்டத்துக்குரிய பகுதி. இராணுவப்பேச்சாளரின் அறிவிப்புக்கும் பொலிஸ்மா அதிபரின் அறிக்கைக்கும் முற்றும் முழுதான வேறுபாடுகள் உள்ளன.இதில் இருவரும் தாம் தப்பிக்க விட்டுள்ள பொய் அறிக்கைகள் என்பது வெளிப்பட்டுள்ளன.தமக்கு பாதகமாகப் போகின்றது என்ற வுடன் தமது பகுதியையே தமது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி என அவர்கள் அறிக்கை விடுகின்றனர்.

இந்த முகாம் அம்பலமான பின்னர் மறுநாள் திங்களன்று இந்த முகாம் மீது தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.இதில் தாக்குதலை நடத்தியவர்கள் தரப்பில் இருவர் இறந்ததாகவும் கருணாகுழுவில் மங்கள மாஸ்ரர் உட்பட மூன்று பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா அரசு படைத்தரப்பில் தகவல் வெளியிடப்பட்டது. இதில் இதுவரை வெளியாக சில தகவல்கள் இங்கு அப்பகுதி மக்களிடமிருந்து கிடைத்துள்ளன. கடந்த ஞாயிறன்று (2005.3.20)அன்று பஜரோ வகையிலான வாகனங்கள் அதிக பாதுகாப்புடன் சென்றன எனவும் அவற்றில் சென்றவர்கள் உயர் நிலையினராகத்தான் இருக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட தாக்குதலில் காயமடைந்த மங்கள மாஸ்ரரை சிறிலங்கா படையின் தொடக்கத்தில் பொலநறுவை மருத்துவமனையிலும் தொடர்ந்து கொழும்புக்கும் கொண்டு செல்லபட்டார் கொழும்பில் அதி கூடுதல் பாதுகாப்பு மருத்துவமனையில் பொலிசாரால் வழங்கப்பட்டது. அவரை படமெடுக்க பார்க்க செய்தியாளர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. லண்டன் தீபம் தொலைக்காட்சிக்கு மட்டும் படமெடுக்க அனுமதிக்கப்பட்டது. இன்னொரு சிங்கள செய்தியாளருக்கு அனுமதிக்கப்பட்ட போதும் அவரது முகத்தை பட மெடுக்க அனுமதிக்கவில்லை. அந்த படம் பிபிசி இணையத்தளத்தில் வெளிவந்தது.

இந்தத் தாக்குதல் நடந்த போது இராணுவப்பேச்சாளர் இந்த தாக்குதல்கள் இப்பகுதியில் நடப்பது வழமையான ஒன்று என்று அறிக்கைவிட்டார். வழமையாக எடுத்ததுக்கும் போர் நிறுத்த கண்காணிப்புக்கு முறைப்பாடு செய்யும் அரச படைகள் இதில் மௌனம் சாதித்து வருகின்றது. கண்காணிப்புக் குழு இந்த விவகாரம் தமது கவனத்துக்கு கொண்டு வரப்படவில்லை என்ற குற்றத்ததை சுமத்துகின்றது. இந்த அம்பலப்படுத்தல் சிறிலங்கா அரசுக்கு பெரும் பொறியாகி விட்டது. ஆயுதக் குழுக்களிடம் ஆயுதங்கள் களையப்பட்டு அவை செயலிழக்கச் செய்யப் படவேண்டும் என்பது போர்நிறுத்த உடன்பாடு.

ஆனால் சிறிலங்கா அரசு புதிதாதக ஒரு ஆயுதக்குழுவை உருவாக்கியிருக்கின்றது அம்பலமாக்கியிருப்பது இதனை சிக்கலுக்குள் மாட்டியள்ளது. கண்காணிப்புக்குழு இதில் எந்த நகர்வை மேற்கொள்ளவுள்ளது என்பதையே அனைவரும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.கருணா குழு என்ற பேரில் மட்டக்களப்பில் தொடரும் கொலைகளின் சூத்திரதாரி யார் என்பது நிரூபிக்கப்பட்டபின்பும் என்ன நடக்கப்போகிறது என்பதையே அனைவரும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

**திரு**




இஞ்சை விலத்துங்கோடா! மனிசர் மக்கள் வாறதும் தெரியேல்லையே. ஏதோ நிவாரணங் குடுக்கிற இடத்தில நிக்கிறமாரிக் குவியிறியள். தேவையான விசயத்துக்கு இப்பிடி சேருவியள் எண்டா நல்ல விசயம். இதென்னடா இது? எடேய் வழிய விடுங்கோடா...... ஏன்ரா அப்பிடித் நிமிர்ந்து பாக்கிற வயசு போட்டு தெண்டோ. அது எங்கடபக்கம் நான் பேத்தியின்ர சாமத்தியச் சடங்கு வன்னியால வந்தனானடா. அ... ஓ, இணுவிலான்ர மூத்தது. உங்கட ஆமிக்காரனுக்குத்தான் பொண்டுகள் எண்டு மரக்கட்டைக்குச் சீலையச்சுத்தி விட்டாலும் திரும்பிப் பாக்காட்டி பத்தியமில்லைத் தூ... காஞ்ச மாடு கம்பில விழுந்தமாரித் திரியுங்கள்.... நீர்வேலியில பின்னத் தெரியாதே... கடலுக்க அத்தடிப் பட்டு வந்ததுகளத்தன்னும் விட்டவங்களே. சும்மா போடா... அம்மாட ஆட்சியில தானடா உந்த அநியாயங்கள் கூடினது. பின்ன சுனாமியடிச் சமாரி மனிசி இருந்திருந்து. ஒவ்வொரு அறிக்கை விடுதடா, என்னை பார் உன்னைப்பார் எண்டு ஆசை ஆரை விட்டுதடா, மனிசன்மார் இருக்குந்தனையும் முகத்தைக் கூட வலு அடக்கமாக் காட்டிக் கொண்டிருந்த பொண்டு களும் முகத்தைக் காட்டாமலே இருந்த பொண்டுகளும் இண்டைக்கு வலு கலாதியா அரசியல் நடத்திறாளவை. தங்கட ஆட்சியிலாவது நல்லதைச் செய்து சனத்தைச் சேர்த்துதிருக்கலாமே. வல்லடி வழக்கெண்டு போகாம திருப்பியும் அவ கதிரையிலயே இருக்கோணும எண்டு படாதபாடு படுறா- என்னத்தையடா சொல்லுறது. தூண்டிலப்போட்டவனுக்கு மிதப்பிலதான் கண் எண்டமாரி சண்டையால சம்பாதிச்சவைக்குச் சமாதானம் என்னத்துக்கடா? ஆயுத பேரத்தில அம்பது, அலைக் கழிஞ்சவையட நிவாரணத்தில அம்பது, வெளிநாட்டுப்பயணங்களுக்கு அம்பது எண்டு கொஞ்சமே..... அம்மா வெளிநாடுபோறாவெண்டா, அவாவின்ர பயணப் பொதியள் ஏத்த.... தனி விமான மேல்லே போறது. அமெரிக்காவில் அவாவும், அவாட பரிவாரங்களும் தங்கிற உணவு தங்ககவிடுதிதானாமடா புஸ்ஸகம் தங்கிற இடம். நாள்வாடகை அறுவது லட்சம் ரூவாயாம். மனிசி அரசாங்க விசயமாப் போனாலும் தம்பி, மாமா, சித்தப்பா, கதிர்ராமக்குஞ்சியப்பு, தனக்கணைஞ்சவை எண்டு குறைஞ்சது மேக்கப்வுமனோட பதினைஞ்சு பேருக்கு மேல கூட்டிப்போறவாவாம். இனி உள்ளுருக்க கொஞ்சமோ. சுவீசுக்க கொஞ்சமோ, அவுஸ்திரேலியா அப்பிள் தோட்டங்கள் கொஞ்சமோ. வெளியால விட்டுடாதை. உனக்கெண்டபடியாகத் தான் சொல்லுறன் உள்கட்சி எதிர்க்கட்சிக்காறரெண்டு சிறிலங்கா அரசியல்வாதிகளுக்கு எக்கச்சக்கமான அப்பிள் தோடடங்கள் அவுஸ்திரேலியா விலகிடக்காமடா உவன் இடையால தெறிச்சான் காமினி எண்டொருத்தன்... ங ஆயிரம் பேருக்குமேல வச்சு வேலை செய்யிற தோட்டம் வச்சிருந்தவனாம். என்ன... பின்ன உவள அப்பி ளுக்கும் எப்பிடி எங்கட சந்தை யள்ள இடங்கிடைச்ச தெண்டே பாக்கிறியள். காதில கடுக்கன் போட்டவை ஆட்டிக் கதைச்சாத் தானே நம்புவியள். பாழ்படுவார் கொஞ்சமாகவே சனத்தை சுறண்டு கினம். உங்க எங்கடா சனநாய கமே நடக்குது. எல்லாம் பணநாயகந்தான் என்னவோ கருத்தறிவாக்கெடுப்பாம். ம்... ஜே.வி.பியும் ஆதரவு தெரிவிச்சிருக்கு. அ... எட அரசாங்க சவையில ரெண்டும் ஒண்டுதான். ரோட்டில வந்தால் ஒரு அரசாங்கம் ரெண்டாத்தானே பேசுது. ரோட்டில ஒண்டுரெண்டாகும். நாடாளுமன்றில் இரண்டு ஒண்டாகும் அ.... விட்டுறாத பாம்புக்குத்தலையும் மீனுக்கு வாலும். சனத்தை ஆரடா திருத்திறது. மாதன முத்தா அர சாங்கத்தில மாட்டிக்கொண்டு தலையாட்டுதுகள். நீ விலத்து முகமாலைக்கு ஒரு ரிக்கேற்றுப் போட எவ்வளவு. வன்னிக்க போனாத்தான் நிம்மதியா மூச்சுவிட.... அவங்கட பார்வையப்பார்.

# மக்கள் கருத்தறி வாக்கெடுப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறையை நீக்குவது தொடர்பாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவும் மக்கள் கருத்தறிவாக்கெடுப்பு ஒன்றை நடத்த சனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. சுமார் 100 கோடி ரூபா செலவீட்டில் நடத்தப்படவுள்ள இவ் வாக்கெடுப்புக்கு ஆளும் கட்சியிலுள்ள பிரதான பங்காளியான ஜே.வி.பி ஆதரவு தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதனைத் தீவிரமாக எதிர்ப்பது என முடிவு செய்துள்ளது. இதற்குச் சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைப்பது என்றும் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை நடத்துவது என்றும் அது தீர்மானித்துள்ளது.

இந்தக் கருத்தறி வாக்கெடுப்பு நடத்த சிறிலங்காவின் அரசியலமைப்பு இடம் கொடுக்குமா? நாடாளுமன்றம் இந்த வாக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளுமா? அதன் முடிவுகளை நடைமுறைப் படுத்த முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் அரசியலமைப்புக்கு முரணானதாயின் மக்கள் கருத்தறி வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

ஆனால் அவ்வாறு நாடாளுமன்றத்தில் தீர்மானமாக் நிறைவேற்றப்பட முடியாது என்பதை நன்றாகப் புரிந்துகொண்டுள்ள நிலையில் நேரடியாகவே மக்களிடம் கருத்தறிவாக்கெடுப்பை நடத்த சந்திரிகா முயல்வதனாலேயே இவ்வாறெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை மக்கள் கருத்தறி வாக்கெடுப்பை இவ்வளவு வில்லங்கமாக நடத்த வேண்டிய தேவை எழுந்துள்ளமைக்கு முக்கிய காரணம் சனாதிபதி முறையை நீக்கிவிடவேண்டும் என்பதற்காகவே என்பது தெரிந்ததொன்றே. அதிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக ஒருவர் எத்தனை முறைவேண்டுமானாலும் பதவி வகிக்க முடியும் என அரசியலமைப்பில் கூறப்பட்டிருப்பின் அவர் அதனை நீக்கிவிடமுயலமாட்டார்.

எனவே எவ்வகையேனும் இந்த அரசியல் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி உயர் அதிகாரத்துடன் கூடிய பதவியில் தான் நீடிப்பதே அவரது விருப்பமாகும். ஆனால் இதற்கு அவரது கட்சியிலுள்ளவர்களில் பலர் கூட விருப்பம் கொண்டிருக்கமாட்டார்கள். உதாரணமாக பிரதமர் மகிந்தராஜபக்சவும் அவரது ஆதரவாளர்களும் அதனை விரும்பவே மாட்டார்கள்.

இதேவேளை அடுத்த சனாதிபதியாகும் வாய்ப்பைக் கொண்டிருக்கும் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு விரும்பமாட்டார்.

அதேவேளை ஜே.வி.பியை பொறுத்தவரை சனாதிபதி பதவி அதற்குக்கிடைக்காது என்பதாலும் நாடாளுமன்றத்தை ஆட்டிப் படைக்கும் சக்தியாக அது இருப்பதாலும் தொடர்ந்தும் அவ்வாறாக இருக்க முடியும் என அது நம்புவதாலும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்கிவிட அது விருப்பம் கொண்டிருக்கிறது.

எனினும் இன்றுள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது. எனவே நாடாளுமன்றத்தையும் மீறி சனாதிபதி சந்திரிகா மக்கள் கருத்தறிவாக்கெடுப்பொன்றை நடத்தத் தீர்மானித்திருக்கிறார்.



வழக்கம் போலவே இதிலேயும் பொறியொன்றை வைக்கத் தவறவில்லை. அதாவது இதனிடம் இணைந்ததாக இனப்பிரச்சினைக்கு தீர்வு தொடர்பாகவும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இவ்விரு விடயங்களுக்கும் மக்கள் தனித்தனி வாக்களிப்பதா? அல்லது ஒருங்கே வாக்களிப்பதா? என்பது குறித்து விளக்கமில்லை. எவ்வாறாயினும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது தொடர்பில் காட்டப்படும் எதிர்ப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தான் எடுத்த முயற்சிக்கு காட்டப்பட்ட எதிர்ப்பு என்று காட்டுவதே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ் இரு விடயங்களையும் இணைத்துள்ளமைக்குக் காரணமாகும்.

இவ்வாறுதான் அவர் பொதுசன ஐக்கிய முன்னணியின் முதலாவது ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் கொண்டுவர முயற்சித்த அரசியலமைப்பு மாற்றமும் இருந்தது. அதாவது தனது பதவிக்காலம் முடிவடைந்ததும் சனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாகவும் இனப்பிரச்சினைக்கு அவர் முன்வைத்த தீர்வுப் பொதியையும் ஒன்றாக நிறைவேற்ற அவர் எடுத்த முயற்சியும் இருந்தது.

கடந்த முறை அவருக்கு 6 வருடகால சனாதிபதிப் பதவிக்காலம் இருந்தமையால் அதனைச் சுலபமாகக் கைவிட்டுவிட்டார். ஆனால இப்பொழுது அரசியலமைப்பு மாற்றம் ஏற்படாவிடின் அவரது அதிகாரம் மட்டுமல்ல பண்டாரநாயக்க பரம்பரையின் அரசியல் வாழ்வும் அஸ்த்தமிக்கும் நிலையும் காணப்படுகின்றது. எனவே இந்த முயற்சியை அவர் சுலபமாகக் கைவிட்டு விடுவார் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. அதேவேளை கருத்தறி வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுமாயின் அது தில்லு முல்லுகளின் உச்சத்தைக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அவ்வாறானதொரு வாக்கெடுப்பில் பிரதான கட்சிகள் இரண்டும் குறிப்பாக அவற்றின் தலைவர்கள் இருவரும் தமது எதிர் காலத்தை பணயம் வைத்தே ஈடுபடவேண்டும். அதிலும் சனாதிபதி சந்திரிகாவுக்கோ இது ஜீவமரணப் போராட்டம். ஆகவே தில்லுமுல்லுகள் வன்முறைகளுக்கு குறைவிருக்காது என நம்பமுடியும்.

ஆனால் மக்கள் கருத்தறி வாக்கெடுப்பினால் பின்தள்ளப்படப் போவது சமாதான முயற்சிகளே. ஏனெனில் இப் போட்டி காரணமாக சமாதான முயற்சிகளில் அவர்களது கவனம் செல்லாது அதே போல சமாதான முயற்சி தொடர்பான கருத்தறிகையிலும் தமக்குச் சாதகமான முடிவை எட்ட ஆட்சியாளர்கள் இதே வழியில் முயலக் கூடும் அத்துடன் அதனையே சாட்டாகவைத்து சமாதான முயற்சிகளுக்கு குந்தகங்களை ஏற்படுத்தக் கூடும். ஏனெனில் அவர்கள் சமாதான முயற்சிகளை மனப்பூர்வமாக விரும்புபவர்களாக இல்லாதிருப்பதனாலேயாகும்.

**வேலவன்**

---

# நேர்நோக்கு

# ஜே.வி.பி — இலங்கையின் சாபக்கேடு

இலங்கையின் பெரும் சாபக்கேடு என்றால் அது ஜே.வி.பியாகத்தான் இருக்கவேண்டும். இவர்கள் நாட்டின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கை தொடர்பாக எவ்வித நிரந்தர கொள்கைகளோ, திட்டங்களோ அற்றவர்கள் தங்களின் எதிர்காலத்தையும், பதவிகளையும் தக்கவைத்துக் கொள்ள இவர்களிடம் உறுதியான நிரந்தர கொள்கையும் திட்டமும் காணப்படுகிறது. ஆனால் நாட்டைப்



பொறுத்தவரை இவர்களிடம் எதுவுமே இல்லை.

இனவாதத்தில் அரசியல் நடத்த நன்கு கற்றுக்கொண்ட ஓர் குழுதான் இவர்கள். இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது விடுதலைப்புலிகளை ஆதரித்தும் இந்தியாவை தூற்றியும் பேசினார்கள். ஆனால் நிலைமை இப்போது தலைகீழ். பின்னர் மேற்குலக நாடுகளின் எதிர்ப்பு வாதம் பேசி அரசியல் நடத்தினார்கள். குறிப்பாக அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுக்கு எதிராக கடும் போக்குக் கொண்டவர்கள் போல் காணப்பட்டனர். ஆனால் அமெரிக்க முன்னாள் சனாதிபதிகள் இலங்கைக்குவந்த போது இலங்கை சனாதிபதி அளித்த இராப்போசனத்தில் ஒரே மேசையில் இருந்தவர்கள் இந்த ஜே.வி.பி எனவே இப்படிப்பட்ட இவர்களிடம் எவ்வாறு நாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஒரு நிரந்தர பொருளாதாரக் கொள்கைகளையோ அல்லது திட்டங்களையோ எதிர்பார்க்கமுடியும்.

சிங்களவர்களிடம் தமிழர்கள் தொடர்பாக இனவாத கருத்தினை ஊட்டி ஊட்டி அதில் அரசியல் நடத்துகின்ற இவர்களுக்கு நாடு எக்கேடுகெட்டுப் போனால்தான் என்ன. தமது பதவிகளும், அரசியல் வாழ்க்கைக்கும் எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதில் இவர்களுக்கு இருக்கும் ஆர்வம், உறுதி இந்நாட்டின் முன்னேற்றம் தொடர்பாக இல்லை என்பதுதான் வேதனை. ஆரம்பத்தில் சாதாரண குழுக்களாக இருந்த இவர்களை அரசியலில் சிங்கள மக்கள் அங்கீகரித்ததுதான் அவர்கள் செய்த பெரும் முட்டாள்தனமா? அல்லது சிங்கள மக்களிடம் உள்ள மேலாதிக்க இனவாத சிந்தனையின் வெளிப்பாடா?

ஒருசில நாடாளுமன்ற ஆசனங்களுடன் இருந்த இவர்களை இன்று முப்பத்தொன்பது ஆசனங்களுடன் நாடாளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அத்தோடு ஜாதிகஹெல உறுமயவையும் ஒன்பது ஆசனங்களுடன் நாடாளுமன்றம் அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அது சிங்கள மக்களின் இன மேலாதிக்க உணர்வினையே தெளிவாகக் காட்டுகின்றது.

அரசில் அங்கம் வகித்துக் கொண்டு இவர்கள் செய்கின்ற அட்டகாசங்கள், நாடாளுமன்றத்தில் செய்கின்ற ரகளைகள் ஏராளமானவை இந்நிலையில் இவர்களை பார்த்து நாட்டின் அபிவிருத்தியைப் பற்றி தீர்மானியுங்கள் என்றால் அது எப்படி நடக்கும்? அவ்வாறு தீர்மானிப்பதற்கு இவர்களிடம் என்ன இருக்கின்றது. இப்படி இவர்களைப் பார்த்து கூறுகையில் அது செவிடன் காதில் ஊதின சங்கு போன்றல்லா அமையும்.

விடுதலைப்புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் விமர்சித்து விமர்சித்தே அரசியல் நடத்துகின்ற இவர்களிடம் நாட்டின் அபிவிருத்தி பற்றி தீர்மானியுங்கள் என்று கூறியவர் கனேடிய நாட்டின் செனட் உறுப்பினர் டேர்க் லீ அவர்கள்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இவர் அனைத்து அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிந்த பின் ஜே.வி.பியிடம் விடுதலைப்புலிகளை விமர்சிப்பதா? அல்லது நாட்டின் அபிவிருத்தியைத் தீர்மானிப்பதா முடிவெடுங்கள் என கேட்டிருக்கிறார்.

நாட்டின் அபிவிருத்தி மட்டுமல்ல நாட்டின் அமைதியின்மைக்கும் இன்று இவர்கள் நாசம் விளைவித்துக்கொண்டிருக்கின்றனர். கனேடிய செனட் உறுப்பினரின் கூற்றுப்படி ஜே.வி.பி இந்நாட்டில் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாக விளங்குகின்றது.

ஜே.வி.பியின் இப்போதைய நோக்கமெல்லாம் நாட்டின் உயர் பதவியை பிடிப்பதுதான். அதற்கு இவர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு பலம் நாட்டின் இனப்பிரச்சினை. இதனை பயன்படுத்தியே எதிர்கால அரசியலில் உயர்வான நிலையை அடையலாம் என்பது ஜே.வி.பியின் நோக்கம். இதைவிட இவர்களுக்கு பிரச்சாரம் செய்வதற்கு வேறு ஏதேனும் கொள்கைகளோ, திட்டங்களோ இல்லை. இதனால் நாட்டில் நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கு ஜே.வி.பி ஒரு போதும் இடமளிக்காது.

பல வழிகளில் இவர்கள் முட்டுக்கட்டையாகவே இருப்பர். இது இந்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலையென்றே கூறவேண்டும். இனவாத கொள்கையுடைய சிங்கள மக்களும் இவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியது அதைவிட துர்ப்பாக்கிய நிலையே. இவர்கள் வேதாளம் போன்றவர்கள். ஒரு போதும் இனவாத முருங்கை மரத்தில் இருந்து இறககமுடியாது. இந்நிலையில் டேர்க்லீ அவர்கள் கூறியதை ஜே.வி.பியினர் அந்த நிமிடமே மறு செவியால் விட்டிருப்பார்கள். எனவே இந்நாட்டில் ஓர் நல்ல நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த வேண்டுமானால் முதலில் இவர்களை அரசியலிலிருந்து துரத்த வேண்டும். அதற்கு சிங்கள மக்கள் தயாராகுவார்களா...?

**மு. தமிழ்ச்செல்வன்**

# மனிதர்களுக்கு இனப்பெருக்கம் உண்டு; அதற்காக குளங்கள் குட்டி போடாது!



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலம் ஒடுக்கப்பட்ட தமிழினம் விடுதலை பெறுவதற்காக தொடர்ந்தும் போராடி வருகின்ற சமகாலத்தில் எமது தேசியத்தின் பொருளாதாரம் பற்றிய அக்கறையும் அவசியமாகும்.

பல வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழர் தாயகம் அந்த வளங்களைப்பற்றி அக்கறையில்லாதவர்களையும் கொண்டுள்ளது.

எமது தாயகத்தின் ஏராளமான வளங்களுள் எமது மிக முக்கிய உணவுப்பொருளான அரிசியை எமது மண்ணிலேயே தன்னிறைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வளமான வயல்கள் உள்ளன. இந்த வயல்களில் பயிர்ச்செய்கையினைச் செய்வதற்கு குளங்கள் மூலமாகவே நீர் பாய்ச்சப்படுகின்றது. ஆகவே-நாம் குளங்களையும், வயல்களையும் பாதுகாப்பதன் மூலமே எமது தேசத்தின் எதிர்கால சந்ததியினருக்கு தன்னிறைவான பொருளாதார வளத்தை விட்டுவிட்டுச் செல்லமுடியும்.

ஆனால்,.. நாம் என்ன செய்கின்றோம் எங்கள் தலையில் நாமே மண்ணள்ளிப் போடுகின்றோம். இந்த விடயத்தில் வவுனியா மாவட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வதன் மூலம் ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதை பார்க்கலாம்.

வவுனியாவில் 13 குளங்களில் 275 பேரிற்கு மேற்பட்டவர்கள் குளத்திற்குள் வீடுகளைக்கட்டியுள்ளனர். பல ஏக்கர் கணக்கான வயல்காணிகளிலும் வீடுகளைக் கட்டியுள்ளனர். சூரியகுளம், உக்கிளாங்குளம், திருநாவற்குளம் போன்ற பல குளங்கள் முற்று முழுதாக மூடப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சூரிய குளம் வயலாக்கப்பட்டுள்ளது. தவிரவும் பல குளங்களில் நீரேந்துப் பகுதி (அலைகரை) வயல்களாக்கி யுள்ளன.

இவற்றை ஏதோ ஒருவகையில் வெளிப்படுத்தியபோதும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ குளங்களிற்குள் குடியிருப்போரோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. குளங்களிற்குள் குடியிருப்போர் வசதிவாய்ப்பில்லாத வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல... (இதைக் கூறுவதன்மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்டவர்கள் என்றால் குளங்களிற்குள் குடியிருக்கலாம் என்று கருதிவிடவேண்டாம்) இவர்கள் பண வசதி படைத்தவர்கள். அரச திணைக்களங்களில் உயர் பதவிகளில் பணியாற்றுகின்றவர்கள். இந்த வளங்களை உடையவர்களாக இருந்து அறிவுசெத்த வேலையைத் தான் செய்துள்ளனர். தங்களுடைய பிள்ளைகள் பற்றி அக்கறையின்மை உள்ளதை இவர்களிடம் அவதானிக்க முடிகின்றது. இந்த விவகாரத்தில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் குளங்களிற்குள் குடியிருப்போர் கூறுகின்றனர் இந்தக் காணிகளுக்கு காணி அனுமதிப் பத்திரம் உண்டு என்று.

வீடு கட்டுவதற்கான மேட்டுக் காணி இது என்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தித் தந்துள்ளனர் என்று. இந்தக் கதையைக் கேட்டபின்பு இதனை மேட்டுக் காணியென அனுமதிப்பத்திரம் தந்ததை என்னவென்று சொல்வது?

குளங்களிற்குள் குடியிருப்போர் ஒன்றைமட்டும் சிந்தியுங்கள். மனிதர்களுக்கு இனப்பெருக்கம் உண்டு... மனிதர்களின் தொகை இதனால் அதிகரிக்கும். ஆனால்... குளங்களோ, வயல்களோ குட்டிபோடாது. ஆகவே இருப்பதனையும் அழித்துப்போட்டு பசிக்கு சோறு சாப்பிடுவதற்கு என்ன செய்வது?

ஒன்றுமட்டும் உண்மை குந்தியிருக்க குழிநிலமும் இல்லாதவர் குளத்திற்குள் குடியிருக்கவில்லை. அப்படியானவர்களெனில் எங்களுடைய அதிகாரிகள் ஒரே நாளில் வெளியேற்றிவிடுவார்கள். குளத்திற்குள் வீடுகளைக் கட்டியிருப்போர் நகர நாகரிகத்தின் மோகத்தில் வசதி என்றெண்ணி வளத்தை அழிக்கின் றனர்.

முக்கிய வளமான குளத்தை அழிப்பதன் மூலம் குடிநீருக்கும் பெரும் பிரச்சினை ஏற்படும், அறிவியல் ரீதியாக சிந்திக்க வேண்டும் வன்னி மண்ணில் எமக்கு நிலத்தடி நீர் மூலமே குடிநீர் கிடைக்கின்றது. நிலத்தடி நீரை மழை நீர்மூலமே நாம் பெற்றுக்கொள்ளலாம். எமது பிரதேசத்தில் மழை நீரை தேக்கிவைக்கக் கூடிய ஒரே இடம் குளம். அதனையும் இல்லாமல் செய்தால் மழை நீர் வழிந்தோடி கடலோடு சங்கமித்து விடும். நாங்கள் கிணறுகளை ஆழமாகத் தோண்டி எவரது கிணறு ஆழமென்றளந்து பெருமைபேச வேண்டியதுதான். பின்னர் சிங்கள தேசத்திலிருந்துதான் நாங்கள் குடிநீரை இறக்குமதி செய்யவேண்டி வரும்.

குடிநீர் தட்டுப்பாட்டின் அபாயம் பற்றி மேற்குறிப்பிட்ட விடயங்களின் மூலம் குளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதன் அவசியம்பற்றி இன்னும் இன்னும் சொல்லவேண்டிய தேவையில்லை.

குளங்களை அழிப்பதன் மூலம் அரிசிக்கும் அந்நிய தேசத்திடம் கையேந்த வேண்டியதுதான். இன்றைய நிலைமை கோதுமை மா இல்லையென்றால் பட்டினிதான் என்ற நிலைமை உருவாகியுள்ளது. எமது முன்னோர் கோதுமை மா என்றால் அருவருத்தனர். நாம் இன்று அமிர்தமாகப்பார்த்துக்கொண்டு தலை கவிழ்ந்துள்ளோம்.

பத்தாண்டுகளிற்கு முன் கோதுமைமாவின் விலை ஏழுரூபா- இன்று ஐந்து மடங்கால் அதிகரித்து முப்பத்தைந்து ரூபா. இன்னும் அதிகரிக்கும். எவரும் நினைக்கலாம் கோதுமை மாவிற்கும் குளத்திற்கும் என்ன தொடர்புள்ளதென. தொடர்புண்டு. தன்னிறைவான பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள முடியாமல் போகின்றபோது விளம்பரங்களைப்பார்த்து கவர்ச்சிமீதான தாவல் இயல்பாக மனிதனிடம் தோன்றும். எங்களிடம் தேவையான அரிசி இருக்கின்றபோது கவர்ச்சி மீதான தாவலிற்கு தடை விழும்.

தன்னிறைவான பொருளாதாரத்தைத் தருவதற்குத் தடையாக இருக்கும் குளங்களை அழிப்போர் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் விடுவதன்மூலம் எங்களுடைய தேசத்தில் பேரழிவு ஏற்படும். இது எம்மீதான இன அழிவிற்கு சமமானதாகவே இருக்கும்.

ஆகவே குளங்களிற்குள் குடியிருப்போர் அதனை விட்டெழுவதுதான் சிறப்பானது. குளங்களிற்குள் குடியிருப்போர் அறியாமையில் குளங்களிற்குள் வீடுகளைக் கட்டவில்லை. கௌரவம் பார்க்கின்றனர். நாகரிகத்தினை அண்மித்த இடத்தில் இருப்பது நாகரிகம் என்று கௌரவம் பார்க்கின்றனர். இந்த கௌரவம் எந்த வகையில் பார்த்தாலும் அழிவினை நோக்கியதாகவே தெரிகின்றது. இந்த சிறிய வட்டத்துச் சிந்தனையிலிருந்து விடுபட வேண்டும்.

**கனகரவி**


குளங்களை கட்டி குடியிருந்தவர்கள் என்பது வரலாறு, நாங்கள் குளங்களை அழித்து குடியிருப்பது எப்படி நியாயமாகும்? குளங்களை கட்டுவதற்கு எமது முன்னோர் எவ்வளவு உழைப்பை செலுத்தியுள்ளனர் என்பதை சிந்திப்போமானாலாவது அதனை அழிக்கும் எண்ணம் கருவுடன் அழிந்து போகும்.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரை தற்போது காணிகளின் விலை உச்சமாக இருக்கின்றது. இதன் காரணமாகவும், உழைத்து முன்னேறுவோம் என்ற எண்ணமின்மையினாலும், அரசியல்வாதிகளை அணுகி சேவகம் செய்வதெனினும் அரச காணிகளை பலரும் அபகரித்துள்ளனர். அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கூட குளக்காணிகளுக்குள் வீடுகளை கட்டி குடியிருக்கின்றார்கள். வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது என்று தான் கேட்கத் தோன்றுகின்றது.

குளக்காணிகளிற்கு அனுமதிப் பத்திரம் எடுத்தது, வீடு கட்ட அனுமதி பெற்றது, மின்னிணைப்பு, தொலைபேசி இணைப்பு இவை யாவற்றையும் ஏதோ ஒரு வகையில் செல்வாக்கைப் பயன்படுத்தி குளக்காணிகளில் குடியிருக்க வழி செய்தது. இவை அனைத்திற்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள்.

சில திணைக்களங்களில் கடமையாற்றுகின்றவர்கள் அதிகாரத் தோரணையில் நினைத்ததை முடிப்பவர்களாக உள்ளனர். மக்களைப் பற்றி அக்கறைப்படுபவர்களாகத் தெரியவில்லை. பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகப் படிப்பு, படிப்புக்கேற்ற தொழில் எல்லாவற்றிற்கும் மக்களின் வரிப்பணம்தான் ஓடித்திரிகின்றது. அதிகாரிகள் தங்களின் கடமையினை ஒழுங்காகச் செய்திருந்தால் குளங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும். குளங்களில் குடியிருந்து குடிநீருக்கும், உணவிற்கும் வழியில்லாமல் திண்டாடுவதில் பார்க்க குளங்களில் உள்ள குடியிருப்புகளை அகற்றி எமது தேசத்தின் மிக முக்கியமான வளமான குளங்களை பாதுகாப்புடன் தன் நிறைவு பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

போரினால் பேரழிவுகளை கண்டபோதும் எமது எதிர்கால சந்ததியின் நிம்மதியான வாழ்விற்கு இழப்புக்களை தியாகம் என ஏற்றுக் கொண்டோம். ஆனால், தேசத்தின் வளங்களில் ஒன்றான குளங்களை நாமே அழித்து அதற்கு எந்த நியாயத்தையும் கற்பிக்க முடியாது.






# கண்ணைநம்பலாமா...!

பிறருடைய கண்ணுக்குத் தெரியாமல் மாயமாக மறைந்துபோகும் உத்தியை தந்திரப் படங்களிலும் அறிவியல் புனைகதைகளிலும்தான் கண்டிருக்கிறோம். இப்பொழுது அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் இரண்டு ஆராய்ச்சியாளர்களின் முன்மொழிவு காண்பவர் கண்ணிலிருந்து பொருளை முற்றிலும் மறைக்கமுடியும் என்று கூறுகிறது.

ஒருங்குநிலை இயற்பியல் (Condensed matter physics)-ல் ப்ளாஸ்மான் (Plasmon) என்று ஒரு கருத்து உண்டு. ப்ளாஸ்மான்கள் இலத்திரன் அடர்வின் அலைகள் (Electron Density Waves) உலோகத்தின் புறப்பரப்பிலிருக்கும் இலத்திரன்கள் ஒருங்கு சேர்ந்து அசையும் பொழுது ஏற்படும் அலை ப்ளாஸ்மான் அலையாக (கவனிக்கவும், போட்டான், எலெக்ட்ரான் போல இதற்கும் அலை-துகள் இருமைப்பண்பு உண்டு) அறியப்படுகிறது. இந்தப் ப்ளாஸ்மான்கள் விசேடமானவை. இவற்றின் மீது படும் ஒளியலைகள் எந்தவிதத்திலும் சிதறுவதில்லை. ஒரு பொருளை நாம் காண்பதற்கு அதன் மீது ஒளிபட்டுச் சிதறவேண்டியது (Scattering) முக்கியம். உதாரணமாக, புத்தகத்தின்மீது வெளிச்சம் பட்டுச் சிதறுவதனால் தான் புத்தகம் ஒளியூட்டப்பட்டு வாசிப்பது சாத்தியமாகிறது. புகைப்படம் பிடிக்கும்பொழுது பொருளின் மீது பட்டுச் சிதறும் (சில வேளைகளில் இந்தச் சிதறலை அதிகரிக்கக் கூடுதல் மின்விளக்குகளைப் பயன்படுத்துவார்கள்) ஒளியை வில்லைகளின் மூலம் குவித்து புகைப்படச் சுருளில் பதியப்படுகிறது.

உலோகப்பரப்புகளின் மீது ப்ளாஸ்மான் அதிர்வலைகள் இருந்தால் அதிலிருந்து ஒளி சிதறுவது கிடையாது, எனவே ப்ளாஸ்மான் படலத்திற்குப் பின்னே இருக்கும் பொருளைக் கண்டுபிடிக்க முடியாது. இந்தக் கருத்தைப் பயன்படுத்தித்தான் மாயமாக மறைக்கும் உத்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

இது இப்பொழுது கருத்து நிலையில்தான் இருக்கிறது. இதைச் செயல்வடிவாக்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக, வேவ்வேறு அலைநீளங்களின் மூலம் ஒளியூட்டப்படும்பொழுது அந்த அலைநீளத்திற்கு ஒப்ப ப்ளாஸ்மானை மாற்றியமைக்க வேண்டும். பச்சை நிறத்திற்கான ப்ளாஸ்மானின் தன்மை, நீல நிறத்தால் ஒளியூட்டப்படும்பொழுது பயன்படாது.

ஆனாலும் இந்தக் கருத்துக்கு இயற்பியல் விதிகளின்படி எந்தத் தடையும் இல்லை. விரைவில் செயல்வடிவம் கிடைக்கும் என நம்பலாம்.

# குளிர் காலத்தில் வியக்கவைக்கும் பூச்சிகளின் தற்காலிக மரணம்



குளிர்காலம் என்றால் நாம் அனைவரும் அதற்கென வடிவமைக்கப்பட்ட உடைகளை பயன்படுத்திக்கொள்கின்றோம். ஆனால் விலங்குகள் என்ன செய்கின்றன என்றால் அவைகளும் இயற்கையாகவே தங்களுக்குக் கிடைத்த கடினமான தோல்களையும், அடர்ந்த உரோமங்களையும் பயன்படுத்தி தம்மை பாதுகாத்துக் கொள்கின்றன. இந்தப் பூச்சிகள் எப்படி இருக்கினறன.

அவைகளும் தங்களை பாதுகாத்துக்கொள்கின்றன. ஆனால் வித்தியாசமான முறையில். அதாவது இயற்கையின் படைப்பில் அவைகளுக்கு மட்டும் ஒருசில சலுகைகள் காணப்படுகின்றன. இவை கடுங் குளிரோ அல்லது கடும் வெயிலோ அல்லது தமக்கு ஏற்ற சூழ்நிலை இல்லை என்று உணர்ந்தாலோ இவை உடனே ஓர் தற்காலிக மரணத்தை தேடிக்கொள்கின்றன.





இதன்படி வளர்ச்சி மாற்றங்களையும், இதயத் துடிப்பையும் கணிசமான அளவுக்கு குறைத்துக் கொள்கின்றன. ஏன் ஒருசில பூச்சி கள் முழுமையாகவும் நிறுத்திக்கொள்கின்றன. குளிர்காலத்தில் ஏற்படுத்திக்கொள்கின்ற இவ் தற்காலிக மரணம் Hibernation எனவும் கடும் வெயில் ஏற்படுத்திக்கொள்கின்ற மரணம் Aestivation எனவும் அழைக்கப்படுகின்றது. பின்னர் தமக்கு ஏற்ற ஓர் சூழல் உருவானதையடுத்து மீண்டும் இவை வழமையான செயற்பாடுகளுக்குத் திரும்பிவிடுகின்றன. (எமக்கு இப்படியொரு வசதி இருந்தால்...)

இதைவிட வேறுசில கடுங்குளிரையோ அல்லது கடும் வெப்பத்தினையோ தாங்க முடியாத பூச்சிகள் பல்லாயிரம் கிலோமீற்றர்கள் வரை இடம்பெயர்கின்றன. குறிப்பாக நன்கு வளர்ந்த மோனார்க் இனப் பட்டுப்பூச்சிகள் கூட்டம் கூட்டமாக குளிர் காலத்தில் கனடாவிலிருந்து மெக்சிக்கோவுக்கு சென்றுவிடுகின்றன. இவை தொடர்ந்து நீண்ட நேரம் பறக்கக்கூடியவை. ஒரு கூட்டத்தில் பல்லாயிரம் பட்டுப் பூச்சிகள் இருப்பதால் ஏதேனும் நகரின் மேலே பறக்கும் போது சில சமயம் சூரியனையே மறைத்து அந்த நகரையே நிழலில் தள்ளிவிடு கின்றன. அது மட்டுமல்ல அப்போது அவற்றின் இறகுகள் இயங்கும் சத்தம்கூட துல்லியமாகக்கேட்கும்.

மேலும் மெக்சிக்கோவில் இனப்பெருக்கத்தையும் தொடங்கிவிடும். பின்னர் வயதான பட்டுப் பூச்சிகள் அங்கேயே இறந்துவிட அடுத்த சந்ததி மீண்டும் கனடாவில் ஏதுவான சூழல் ஏற்பட திரும்பிவிடுகின்றன. அது சரி இவற்றுக்கு தமது பெற்றோர்கள் வந்த பாதையிலேயே திரும் பிச்செல்ல இவைகளுக்கு எவ்வாறு பாதை தெரிகின்றன என்றால் அது தெரியாத விடயமாகவே உள்ளன.

இந்த உலகில் எமக்கு மட்டும் இவ்வாறான திறமைகள் கிடைத்திருந்தால் அப்பப்பா! முடிவு...!



# மருத்துவம்

# காதில் சீழ் வடிதல் மிக ஆபத்தானது

மனிதர்களுக்கு தங்களது உடம்பில் உள்ள அனைத்து உறுப்புகளும் முக்கியமானதே. அதில் ஏதேனும் ஒன்று பாதிக்கப் பட்டாலும் பல சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது. அதிலும் செவி மிக முக்கியமானதே. எமது சமூகத்தில் காது கேளாதவர்கள் படுகின்ற அவஸ்தைகள் ஏராளம்.

இந்நிலையில் காதில் ஏற்படுகின்ற நோய்களில் சீழ் வடிதல் என்பது ஆபத்தானது. காதில் சீழ் வடிதல் பல வகைப்படும். சிலருக்கு தண்ணீரை போன்று வடியும், சிலருக்கு வெள்ளை யாகவும் மஞ்சளாகவும் சிலருக்கு



இரத்தம் கலந்த அல்லது இரத் தமாக வேனும் வருவதுண்டு. இவ் வாறு வடிகின்ற சீழ் சிலருக்கு துர்நாற்றத்தோடு வருவதுண்டு. இது ஆபத்திற்கான அறிகுறி. சீழ் வடிதல் குறைவாக இருக்கின்றது என அலட்சியம் செய்தல் தவறானது. சீழ் எப்படி வந்தாலும் காது மருத்துவரை அணுகுதல் நன்று.

இது இரண்டு முக்கிய காரணங்களால் ஏற்படுகின்றது. ஒன்று சளி மூக்கு வழியாக காதிற்கு செல்லும் போது ஏற்படுகிறது. மற்றது நடுச்செவியின் சவ்வின் கோளாறு காரணமாக ஏற்படுகிறது. இதில் இரண்டாவது சீழ் வடிவதுடன் துர்நாற்றத்தையும் ஏற்படுத்தும். அத்தோடு சீழ் வடிதல் குறைவாகக் காணப்படும். இந்த வகை நோய் மூளையினுள் சென்று மிகக்கடுமையாகத் தாக்கி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். இதனால் இவ்வகை நோயை Unsafe Type of CSDM என்று கூறுவர். இதனை உடனடியாக கவனித்து சிகிச்சை பெறவேண்டும். இதற்கு அறுவை சிகிச்சையே சிறந்தது.

காதில் சீழ் வடிதல் மிகுதியாக இருந்தாலோ, துர்நாற்றம் அற்றதாக இருந்தாலோ பயப்பட வேண்டிய தேவையில்லை. தக்க மருத்துவம் செய்து இதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம். சீழ் வடிதல் நின்ற பின் சவ்வுகளில் ஓட்டை இருந்தால் செவிடுத் தன்மை ஏற்படுவதுண்டு. பின்னர் நீர் உள்ளே செல்லுமானால் சீழ் வடிதல் உண்டாகும். இதற்கு ஏற்ற சிகிச்சை மென்சவ்வின் ஓட்டை அடைப்பதே. இதனை Myringoplasty என அழைப்பர்.

காது மென்சவ்வில் ஓட்டை உள்ள பெரும்பாலானவர்கள் தலை குளித்தாலே சீழ் வடிவதுண்டு. சளித் தொல்லையால் துன்பப்படும் இவர்களுக்கு சளி நீங்கினாலே சீழ் வடிதல் நிற்கும். அத்தோடு தொண்டை, மூக்கு முதலிய பகுதிகளில் சீழ் உள்ளதா எனக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை பெறவேண்டும். சிலருக்கு தொண்டையில் சதை வளர்ந்தால் சீழ் வருவது வழமையாகிவிடும். இதற்கு தொண்டையில் சீழ் உள்ள சதையை அகற்றிவிடுதல் வேண்டும். மேலும் சிலருக்கு சீழ் வடிதல் காது எலும்புகளை பாதித்து விடுகிறது. மேலும் காதுவலி தலைச்சுற்றுப் போன்ற இதர நோய்களும் ஏற்படுகின்றன. இதைவிட தலையில ஏற்கனவே காயங்கள் ஏற்பட்டவர்களுக்கு நீர் போன்று சீழ் வடிந்தால் அவதானமாக இருக்கவேண்டும். இது சில வேளைகளில் மூளைக்காய்ச்சலை உருவாக்கும் ஆபத்தான நிலைக்கு இட்டுச்செல்லும். மேலும் சிறுவர்களுக்கு காதில் சீழ் வடிந்தால் உடனே காது மருத்துவரை நாடுதல் அவசியமாகும்.

காதுகளில் எவ்வாறான நோய்கள் ஏற்பட்டாலும் அதனைக் குணப்படுத்தமுடியும். கண்டவற்றையும் காதுகளில் விட்டு நீங்களே கோளாறுகளை ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள். நல்ல செவி சம்பந்தப்பட்ட வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்வதே பாதுகாப்பானது.

# ஆஸ்துமாவுடன் வாழ்தல்



**தொற்று நோய்கள்**

வைரசு தொற்றுநோய்கள் (தடிமல், சளிக்காய்ச்சல்) நெஞ்சுத் தொற்றுநோய்கள், மூளைக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஆஸ்துமா தீவிரமடைவதற்கு அல்லது ஆஸ்துமா தாக்கங்களுக்குக் கொண்டு செல்லலாம்.

**மருந்துகள்.**

அஸ்பிரின் அல்லது வாதத்திற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள சில மருந்துகள் உட்பட சில மருந்துகளுக்கு ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ள சிலர் கூருணர்வுள்ளவர்களாக விளங்குகின்றார்கள். உயர்வான இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைகள் அல்லது கண்பிரச்சினைகளுக்கான சொட்டுமருந்து போன்றவற்றிற்கு குறித்துரைக்கப்படும் "பீட்டா புளொக்கர்ஸ்" (Beta Blockers) போன்ற வேறு சில மருந்துகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

**செல்லப்பிராணிகள்.**

செல்லப்பிராணிகள் மயிர், தோல், துணிக்கைகள் அல்லது சிறகுகள் ஆஸ்துமாத் தாக்கத்தைத் தூண்டலாம். சிறுவர்களில் ஆஸ்துமாவை செல்லப்பிராணிகள் தூண்டுவது மிகவும் அபூர்வமானதாகும். எனினும் ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ளவரின் படுக்கையறைகளிலிருந்து செல்லப்பிராணிகளை விசேடமாக பூனைகளைத் தள்ளி வைப்பது புத்திசாலித்தனமாகும். செல்லப்பிராணியை நண்பர் ஒருவருடன் அல்லது உறவினர் ஒருவருடன் "விடுமுறையைக் கழிப்பதற்கு விட்டு விட்டு, இது ஏதாவது வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதா என்பதை பார்ப்பது ஒரு சிறந்த யோசனையாகும். இத்தருணத்தில் ஆஸ்துமாத் தாக்கம் இடைக்கிடைதான் ஏற்படுகிறது. அல்லது நின்று விடுகின்றது என்றால், சிறந்த தெரிவு எது என்பதை நீங்களே கருத்திற்கு எடுப்பது அவசியமாகும்.

**புகைத்தல்**

ஆஸ்துமாத் தாக்கங்களை புகைத்தல் பொதுவாக தூண்டுகிறது. ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் புகைக்கக் கூடாது அல்லது அவருக்கு அருகில் ஏனையோர் புகைக்கக் கூடாது. ஒரே வீட்டில் உள்ள ஏனையோர் புகைத்தால் சிறுவர்கள் ஆஸ்துமாவினால் பீடிக்கப்படுவது அதிகரிக்கின்றது.

**மன அழுத்தம்.**

மன அழுத்தம் ஒரு தூண்டும் காரணியாகச் செயற்படலாம். மன அழுத்தத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் மூச்சிழுப்பினையும் ஆஸ்துமா தாக்கத்தையும் தவிர்க்கலாம்.


**காலநிலை**

சிலவகையான காலநிலை அல்லது காலநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் ஆஸ்துமாவை மோசமாக்குகின்றன என்பதை ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டவர்கள் கவனிக்கின்றனர். வெப்பநிலையில் ஒரு திடீர் மாற்றம் உதாரணமாக வெப்பமான வீட்டில் இருந்து குளிரான வீட்டுக்குப் போகும் போது மூச்சிழுப்பு ஏற்படுகின்றது.

வித்தியாசமான காலநிலைக் கோலங்கள் காற்றில் பாதிக்கப்படும் தன்மையை உருவாக்கமுடியும். ஒரு வரட்சியான சூழ் நிலைச் சூழலில் மகரந்தத்தின் தொகை அதிகரிக்கக் கூடும். அவுஸ்திரேலியாவில் நடாத்தப்பட்ட சில ஆராய்ச்சிகளின் போது மகரந்தத்திற்கு கூருணர்வுள்ளவர்களில் நோய்வாய்ப்படு நிலையை மகரந்தங்கள் அதிகரிக்கும் என்றும் காட்டப்பட்டுள்ளது.

**வேலை**

சிலவேலைகளை மேற்கொள்ளும் போது எரிச்சலூட்டும் தூசிகள் மற்றும் வாயுக்கள் ஆகியவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இது ஆஸ்துமாத்தாக்கத்தைத் தூண்டவும் அல்லது ஏற்படுத்தவும் முடியும். வயது வந்தோரில், ஆஸ்துமா விருத்தியடைந்து, ஆனால் வார இறுதியின் போது அல்லது விடுமுறையின் போது சுகமுற்றால் வேலை தொடர்பாக ஆஸ்துமாவிற்கான காரணி குறித்து ஆராய்ந்தறியப்பட வேண்டும்.






# ஆரிட்டச் சொல்லுறது

## —— தபின்

ச்சீய்க்!

இந்த நேரம் இண்டைக் கெண்டு மெல்ல ஓடுது எனக் கெண்டா இருப்புக்கொள்ளாமக் கிடக்கு. திரும்பவும் ஒருக்கா தலைமாட்டுக்க கிடந்த மணிக் கூட்டை எடுத்துப் பாத்தன்.

விடியப்புறம் 3.27

தூரத்தில் இருந்திருந்துட்டு சேவல்கள் கூவுற சத்தம்!

இந்த 'மம்மல்' இருட்டுக்க எழும்பி பள்ளிக்கூடம் வெளிக்கிட்டா ஆரும் விசரெண்டுதான் நினைப் பினம். கண்ணை இறுக்கி மூடிக் கொண்டு படுத்துப் பாத்தன்.

ம்கூம்!

நித்திரை வாற 'சில மனை'க் காணேலை.

"ங்[illegible] ங்ஙொய்!"

[illegible] சனி யன் பிடிச்ச [illegible] ரச்சல் நித்திரையாய் கிடந்தால் உதொண் டும் தெரியாது. எப்ப விடியுமெண்டு முழுச்சிருக்கேக்க உதுகளின்ர ஆய்க்கினை இன்னும் எரிச்சலாக் கிடக்குது.

'பெச்சீற்றால' உடம்பு முழுக்கையும் போத்த பிறகும் அதுக் குள்ளாலையும் அதுகள் குத்த வெளிக்கிட்டுட்டுதுகள்.

ராத்திரிக் கொளுத்தின நுளம்புத்திரி எரிஞ்சு முடிஞ்சிருக் கோணும் இல்லாட்டி இவை உவ் வளவு ஆட்டம் ஆடாயினம் எங்கை யாவது பத்தையளுக்குள்ள ஓடிப் போய் ஒளிச்சிருப்பினம். அம்மா எழும் பிறதுக்கு எப்பிடியும் இரண்டு மணித்தி யாலத்துக்கு மேல ஆகும் அது வரைக்கும் என்னெண்டு நேரத்தைப் போக்காட்டுறது?

'ம்! முதல்ல லைற்றைப் போட்டிட்டுப் பிறகு என்ன செய்யிற தெண்டு யோசிப்பம்!'

எங்கட வீடெண்டால் எந்த இருட்டுக்குள்ளையும், காந்தத்திட்ட இரும்பு போறமாதிரி நேராப் போய் சுவிச்சைப் போட்டிடுவன் ஆனா இந்த அன்ரியின்ர வீடு இன்னும் எனக்கு வடிவாய் பழக்கப்படேலை!

ஒரு மாதிரி சுவரைத் தடவித்தடவி எந்தப் பக்கம் 'சுவிச்' இருக்கு ஒரு மாதிரி கண்டுபிடிக் கிறதுக்குள்ள 'சீ' யெண்டு போச்சுது!

அதுக்குள்ள அப்பான்ர காலையும் உழக்கி அவற்ர நித்திரை யையும் குழப்பிப் போட்டன்.

அப்பா திடுக்கிட்டபடி எழும் பினார்.

"ஆர்?!"

அவற்ர கேள்வியில பயமி ருந்தது.

"அது நானப்பா!"

"இருட்டுக்க என்னம்மா செய்யிறீங்கள்?"

"லைற்றைப் போடுறதுக்கு சுவிச்சைத் தேடுறன்"

பெச்சீற்றை ஒரு பக்கமாய் போட்டிட்டு கொட்டாவியோடு அப்பா லைற்றைப் போட்டார்.

லைற் வெளிச்சத்தில அம்மாவுக்குக் கண் கூசியிருக்க வேணும் அவாவும் அலுப்பா என்னைப் பாத்தா.

"சௌமி! 'சீச்சாக்கு' போப் போறியளோ?"

"இல்லையம்மா"

பின்னையேன் விடிய வெள் ளெண்ண லைற்றைப் போடுறியள்?"

"நித்தா வரேலையம்மா! இந்த நுளம்பின்ர ஆக்கினையும் தாங்கேலாமக் கிடக்கு!"

"இஞ்சேருங்கோப்பா! ஒரு நுளம்புத்திரியை எடுத்துக் கொளுத்தி விடுங்கோ! செல்லம் எங்கட வீடெண் டால் எந்தச் சாமத்திலையும் லைற் றைப் [illegible] என்னவும் செய்ய லாம் பிறத்தியாற்ர வீட்டில இப்பிடிக் கண்டகண்ட நேரங்களில லைற்றைப் போட்டால் வீட்டுக்காரருக்கு கரைச்ச லாய் கிடக்கும் நித்தா வராட்டி கண்ணை மூடிக்கொண்டு படுங்கோ வரும்"

அம்மா சொல்லிப்போட்டு ஒரு பக்கமாச் சரிஞ்சு, தம்பியைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு நித்திரை கொள்ளத் துடங்கிட்டா. அப்பாவும் நுளம்புத்திரியைக் கொளுத்திப் போட்டு, லைற்றையும் நிப்பாட்டிட்டு படுத்திட்டார்.

திரும் பவும் இருட்டு!!!

சுத்திவர ஒரே[illegible] கறுப்பாய் இருக்குது[illegible]

கறுப்பைக் கண்டவு[illegible] டன் 'டப்' பெண்டு பயம்[illegible]

வந்திட்டுது. இப்பிடிக் கறுப்பாத்தான்- அண்டைக்கு எங்கட கரையில அலை வந்தது.

அலை! பெரிய்ய்ய அலை!!

பனைமரத்தை விடவும் பெரிசு.

என்ர கடவுளே! அப்பிடி யொரு அலையக் கனவிலையும் காணேலாது. பத்திப்படங்கள்ல கூட இப்பிடிப் பெரிய அலை வாறேலை.

எங்கட கடற்கரையிலயி ருக்கிற என்னைமாதிரிச் சின்னாக்கள் பெரிய பொம்பிளையாக்கள் மட்டுமில் லாமல் எங்கட அப்பாவிலயிருந்து எல்லாப் பெரிய ஆம்பிளையாக் களுங்கூட அண்டைக்கு கடலுக்குப் பயந்து போய் தலை தெறிக்க ஓடினது இப்பவும் கண்ணுக்க நிக்குது!

ஆறுமுகத்தாத் தாக்குக் கூட இப்பிடிப் பெரிய அலை வரப்போறது எப்பிடித் தெரியாமலிருந்தது எண்டது தான் இப்பவும் எனக்கு விளங்காமக் கிடக்கு.

அவருக்குக் கடலைப்பற்றி எல்லாம் தெரியும்.

எப்ப மழை பெய்யும், எப்ப நிறைய மீன் பிடிபடும், எப்ப நண்டு படிபடும். எண்டதையெல்லாம் கடல்ல தொழிலுக்குப் போற பெரியாக்களுக்கு அவர்தான் சொல்லிக் குடுக்கிறவர். ராமர், கண்ணன், அனுமான் எண்டு எல்லாக் கடவுள் மாற்ர கதையளும் அவருக்குத் தெரியும்! பின்னேரங்க ளில எங்களுக்கெல்லாம் வடிவாச் சொல்லித் தருவார்.

அறப்படிச்ச பல்லி கூழ்ப்பா னைக்குள்ள விழுந்த மாதிரியெண்டு அவர் சொல்லித்தந்த மாதிரி எல்லாந் தெரிஞ்ச அவரையும் அண்டைக்கு என்ர கண்ணுக்கு முன்னால அலை அடிச்சுக்கொண்டு போட்டுது.

அண்டைக்கு நடந்ததுகளை நினைக்க நினைக்க தனியப் படுக்கக் கூடப் பயமாக் கிடக்குது.

கறுப்பு நிறமாயிருக்கிற இருட்டைக்கடந்து அசைஞ்சு போகவும் பயமாத்தானிருக்குது.

"கடவுளே! கடவுளே!"

எண்டு முணுமுணுத்துக் கொண்டு தவண்டு போய் அம்மாக்குக் கிட்டப்படுத்திட்டன்.

நெஞ்செண்டால் 'டக்கு, டக்கு' எண்டு இறுக்கி அடிக்குது படுத்த பிறகும் பழைய நினைவுதான்.

இப்பிடி ஒண்டா நான், அம்மா,அப்பா, தம்பி, படுத்திருக்கிற மாதிரித்தான் நாங்கள் ஓடிவந்த அண்டைக்கு கரையில எங்கட சொந்தக்காரரெல்லாம் செத்துப் போய் சடலமாக்கிடந்தவை. அவையளெல் லாம் எங்கட கிட்டடிச் சொந்தக்கார ரெண்டதால அநேகமா அவையின்ர ஆவியள் எங்களைத் தேடி இஞ்சை யும் வரலாம்.

இந்த நினைப்பு வந்த அடுத்த நிமிசமே பக்கத்தில கிடந்த அம்மான்ர 'பெச்சீற்றால' இறுக்கி உடம்பு முழுக்க மூடிப்போட்டன்.

பயத்தில "சீச்சா" வாற மாதிரிக் கிடந்துது ஆனா வெளியில போனாச் சில வேளையில ஆவியள் பிடிச்சுப்போடுமெண்டு ஒரு மாதிரி அடக்கிப்போட்டன்.

'பெச்சீற்' வெக்கையோ இல்லாட்டிப் பயத்திலையோ தெரி யேலை: உடம்பு முழுக்க வேர்வை யால நனைஞ்சு போச்சுது! முகத்திலயிருந்து வேர்த்து வழிஞ்சு கடைசியா வாயின்ர ஓரமாப் படேக்க உப்புக் கரிச்சுது.

அலை எங்களை மூடேக்க இதை விடவும் உப்புக்கரிச்சுது கண்ணெல்லாம் எரிஞ்சுது அலை இழுத்த இழுப்பில நானும் என்ர சிநேகிதி அஜியும் கரையில பொறுக்கின வடிவான சிப்பியள் எங்க போனதெண்டு தெரியேலை கயித் தால கட்டி இழுத்த மாதிரி அலை என்னை இழுத்துக்கொண்டு போச்சுது! நான் மட்டுமில்ல, கரையில நிண்ட எல்லாரும் அப்பிடித்தான் இழுபட்டவை.

பெரிய பனைமரங்கள், வள்ளங்கள், வீடுகள் எல்லாம் மழைத் தண்ணியில நாங்கள் விடுற கடுதாசித் தோணிமாதிரி அலையில அடிபட்டு வரேக்க எங்களை இழுத்துக் கொண்டு போறது அதுக்குப் பெரிய வேலையில்லை.

கனநேரமாய் கடலுக்க நிண்டு நீந்தி சுழியோடுற ஆக்கள் கூட கடலைப் பாத்துப் பயத்தில ஓட ஓட அலையும் அவையளை விடாமல் கலைச்சுப் பிடிச்சுப் போட்டுது. உப்பிடியெல்லாம் ஆக்களை விழுங் கின அலைக்கு ஏதோ வாய்க்க வராத பேரொண்டு அம்மா சொல்லித்தந்தவா.

அது.... அது... சீய்! மனசுக்குள்ள நிக்குது! வெளியில வருகுதில்லை.

ஆங்! கண்டுபிடிச்சிட்டன் அதின்ர பேர் 'சுனாமி'

ஆறுமுகத்தாத்தா சொல்லித் தாற சாமிக்கதையளில நாரதர் எண்ட கடவுளும் வாறவர். அந்த நாரதருக்கு கோள் மூட்டிக்குடுக்காட்டித் தலை வெடிச்சுப்போடுமாம். அதமாதிரி எனக்கும் ஏதாவது ஒரு விசயம் தெரிஞ்சால் அதை மற்றாக்களுக்குச் சொல்லாட்டி தலைவெடிக்கிற மாதிரி இருக் கும்.

அதுவும் இப்ப உந்த அலை யின்ர விசயம் இதுவரைக்கும் நடக்காத ஒரு புதினம் அதை நான் நேர கண் டிட்டன் உதை என்னெண்டு சொல்லாமல் இருக்கிறது.

ஆனா ஆரிட்டச் சொல்லுறது?

அலைவந்தவுடன நாங்கள் தப்பிப் பிழைச்சுப் போய் ஒரு 'அகதிமுகாமில' இருந்தம். அது பள்ளிக்கூடந்தான். ஆனா எல்லாரும் அதை அகதி முகாமெண்டுதான் சொன்னவை எனக்கு விளங்கேலை. அங்கை யிருந்த எல்லாரும் எங்கட ஊராக்கள்.

எல்லாத்தையும் என்ன மாதிரி நேரகண்டவை!

அதிலையும் கனபேர் தங்கட குடும்பத்தில ஆரும் செத்த கவலையில இருந்திச்சினம் அவை யளிட்ட இந்தப் புதினத்தைச் சொல் லேலாது!

சரி! அம்மா அப்பாட்டச் சொல்லுவமெண்டு வெளிக்கிட்டன்

"அம்மோய்! எந்தப் பெரிய அலை! வீடுகளையெல்லாம் என்ன மாதிரி உடைச்சுது."

நான் சொல்லிமுடிக் கிறதுக்கிடையில அம்மா அழத் துவங்கிட்டா.

"சௌமி! அதை ஞாபகப் படுத்தாதையம்மா இப்பதான் கொஞ்ச நேரம் அதை மறந்து போய் இருந்தம் அண்டைக்கு நடந்ததை நினைக்கவே ஏலாமக் கிடக்குது!"

அதுக்குப் பிறகு அப்பா வோடையும் அதைப்பற்றிக் கதைக் கேலாதெண்டு எனக்கு விளங்கி னதால அவரோடையும் அதைப்பற் றிக் கதைக்க நானும் விரும்பேலை அவரும் கதைக்க விருப்பமில்லாத மாதிரி எங்கட வீடிருந்த பக்கமா வெறிச்சுப் பாத்துக்கொண்டிருந்தார்.

முகாமில இருந்து வரதா அன்ரி வீட்டை வந்து சேர்ந்தவுடன இவைக்காவது அலைக்கதையைச் சொல்லலாமெண்டு நான் நினைச்சன்.

"அன்ரி! கறுப்பா-பெரிசா அலை உறுமிக்கொண்டு வந்திச்சுது! கரையில விளையாடிக்கொண்டிருந்த என்னைமாதிரிச் சின்னப் பிள்ளையள் பெரியாக்கள் எல்லாரையும் மேல தூக்கிப்போட்டு பிறகு உள்ளுக்க இழுத்துக்கொண்டு போச்சுது."

நான் சொல்லிக் கொண்டி ருக்கேக்க அன்ரி என்னை பாவம் எண்ட மாதிரிப் பாத்துக்கொண்டு என்ர தலையைத் தடவி விட்டா.

"எல்லாம் பேப்பரில வாசிச் சனாங்கள்! நீ அதுகளைத் திரும்ப நினைக்காமல் இருக்கோணும். அப்பதான் நல்லாப்படிக்கலாம்"

எண்டு எனக்குச் சொல்லிப் போட்டு, பிறகு அம்மாவைப் பாத்து

"சௌமி சரியாப் பயந்திட் டாள் போல கிடக்கு! அதுதான் கண்டபடி அலம்பிறாள். இப்பிடியே அதைப்பற்றியே யோசிச்சுக் கதைச்சாளெண்டால் பள்ளைக்கு 'அப்செற்' ஆக்கிப் போடும்"

சொல்லிக் கொண்டே என்ர தலையைத் தடவிக்கொண்டி ருந்தா தலைக்கதானே மூளை கிடக்கு!

எனக்கு மூளைதட்டிப் போட்டுதெண்டு அன்ரி நினைக் கிறாவோ?

'நான் கண்டபடி அலம்பிற னெண்டெல்லே சொல்றா' எனக்கு அன்ரியில கண்மண் தெரியாத கோவந்தான் வந்திச்சுது. அவான்ர கையை உதறிப்போட்டு அங்கால போட்டன் அதுக்குப் பிறகு அன்ரிக்கோ, அவையின்ர வீட்டிலயிருக்கிற மற்றாக்களுக்கோ அலையைப் பற்றி நான் ஒண்டும் சொல்லேலை.

'பாவங்கள்! அவை குடுத்து வைச்சது அவ்வளவுதான்! அவைக்கு அண்டைக்கு நடந்ததொண்டுந் தெரியாது அப்பிடியே இருக்கட்டும். இவையின்ர கொழுப்புக்கு நானொண் டுஞ் சொல்லக்கூடாது'

எண்டாலும் ஒருத்தருக்குஞ் சொல்லாமலும் இருக்கேலாது.

என்ன செய்யலாம்?

அப்பதான் பள்ளிக்கூடம் பத்தாந்திகதி 'துவங்கிறதாப் பேப்பரில வந்திருக்கெண்டு அப்பா சொன்னார்.

எனக்கு வலுபுளுகமாயி ருந்திது!

பள்ளிக்கூடம் போனா அங்க றெக்சி வருவாள் றெக்சிதான் என்ர உயிர்ச்சிநேகிதி!

அவான்ர வீடும் கடக்கரைப் பக்கந்தான் ஆனா எங்கடவீட்டில இருந்து கனதூரம் நாங்கள் வேற ஊர் அவா வேறஊர் அதால எங்கட வீட்டுப்பக்கமா வந்த அலையைப் பற்றி அவாக்குத் தெரிஞ்சிருக்காது.

அவாக்கு என்னில நல்ல விருப்பமெண்டதால நான் சொல்ற கதையை எவ்வளவு நேரமும் ஆறு தலாயிருந்து கேப்பா! என்ர கதை யைக் கேக்க ஓராளைக் கண்டுபிடிச்ச சந்தோசத்தில பள்ளிக்கூடம் துவங் கிறநாளை எண்ணிக் கொண்டி ருந்தன்.

என்ர கெட்டகாலம்

பத்தாந்திகதி தொடங்க இருந்த பள்ளிக்கூடம் பதினஞ்சாம் திகதிதான் துவங்குமாமெண்டு அப்பா இன்னொரு நாள் சொன்னார். எனக்குப் பத்திக்கொண்டு வந்திது. ஒரு மாதிரி பல்லைக் கடிச்சுக் கொண்டு பதினைஞ்சாந்திகதி எப்ப வருமெண்டு ஒவ்வொருநாளும் கலண்டரைப் பார்த்துக்கொண்டி ருந்தன்.

ஒரு மாதிரி இண்டைக்கு விடிஞ்சால் -பதினைஞ்சாந்திகதி பள்ளிக்கூடம். றெக்சி கட்டாயம் வருவா என்னதான் வருத்தமெண்டாலும் றெக்சி பள்ளிக்கூடத்துக்கு நல்ல ஒழுங்கு. அவா நல்லபிள்ளை அதோட அவா வேதம். அலை வாறதுக்கு முதல் நாள் அவா தன்ர அப்பாவோட எங்கட வீட்டை வந்து நத்தார் கொண்டாட்டப் பலகாரமெல்லாம் தந்திட்டுப் போனவா.


(22ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்களுக்கு கவிதை பற்றி சொல்லவேண்டும்

தமிழ்க்கவிதை உலகில் புதுக்கவிதை கவிதையே அல்ல. அவை வெறும் சொல் அலங்காரம் மட்டுமே என்போருக்கும் புதுக் கவிதையும் கவித்துவம் உடையது என்போருக்குமிடை யிலான சூடான வாதப்பிரதி வாதங்கள் எல்லாம் இன்று தணிந்து விட்டன. ஏற்புக்கும் மறுப்புக்குமிடையில் புதுக்கவிதையும் புத்தூக்கம் பெற்று, கவிதை இலக்கியப்பரப்பில் வேர்கொண்டு விட்டது.

இன்றைய கவிதையுலகில் புதுக்கவிதையே பிரதான பாத்திரத்தை வகிக்கிறது என்றால் மிகையில்லை. இன்றும் மரபுக் கவிதைகள் பல வெளிவந்தாலும் கணிசமான அளவு வெளிவருவன புதுக்கவிதையே. இவற்றுள் கவித்துவமும் நயமுமற்று, பொருள்குழப்பங்களோடு, வெறும் சொல் அலங்காரமாக வெளிவருவனவும் உள்ளன என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் நல்ல கவித்துவம் உள்ள புதுக்கவிதைகள் பல வெளிவருகின்றன என்பதை புதுக்கவிதை பற்றி விமர் சிப்போரே ஏற்றுக் கொண்ட உண்மை.

புதுக்கவிதை பெரும் செல்வாக்குச் செலுத்துகின்ற இன்றைய சூழலில் இலக்கியக் கல்வியில் புதுக் கவிதை பிரிக்க முடியாத ஓர் அம்சமாகத்



அறிவு கவிதை மீதான வாசிப்பு பரிச்சயத்தை ஏற்படுத்தும் போது ஒருவனது வாசிப்புத்தரமும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான வகையில் இந்நுட்பங்கள் கையாண்டு கவிபுனையும் ஆற்றலும் வளர்ச்சி காணும் வாய்ப்புண்டு.

இவ்வாறு கூறுவதால் இன்று தோன்றுகின்ற புதுக்கவிதைகள் அனைத்தும் இந்நுட்பங்களை உள்வாங்கி எழுதப்படுகின்றன என்றோ, இந்நுட்பங்கள் உள்வாங்கியே எழுதப்படவேண்டும் என்றோ பொருளாகாது. புதுக்கவிதை நுட்பங்களை உள்வாங்கி வரும் கவிதைகளை புரிந்துகொள்ளவும் நயக்கவும் சுவைஞனுக்கு புதுக்கவிதை நுட்பங்கள் அறிவு அவசியமாகிறது. இல்லாவிடில் அவனால் சமகாலத்தில் தோன்றும் கவிதைகளையே புரிந்துகொள்ள முடியாது இடர்படலாம். (எவரும் புரிந்து கொள்ள முடியாத சில சமயம் எழுதியவருக்கே புரியாத இருண்மை கவிதைகளை தவிர) புதுக்கவிதைகளை நயப் பதற்கு இந் நுட்பங்கள் பற்றிய அறிவின் அவசியம் உணரப்பட வேண்டும். ஆனால் இது வரை உணரப்பட்டதாக இல்லை. மரபுசார்

மாணவர்களுக்கு இலகுவாக இருந்திருக்கும். குறியீட்டை பற்றி தவறாக விளங்கிக் கொண்டவர்களும் நம்மிடையே உண்டு. ஒரு மேடை நாடகத்தில் கருவியின்றி குறித்த செயலை செய்வதற்கான பாசாங்கை குறியீடு எனக்கொண்டு அந்நாடகத்தை குறியீட்டு நாடகம் என எண்ணும் மாணவர்களதும் ஒரு சில ஆசிரியர்களதும் தவறான புரிதல் நீங்க இதனால் வழி பிறந்திருக்கும்.

தமிழ் பாடநூலில் அணிகள் சேர்க்கப்பட்டிருப்பது போல புதுக் கவிதை நுட்பங்கள் பற்றிய விளக்கமும் இப்பாடநூலில் சேர்க்கப்படுதல் அவசியமல்லவா என அரச பாடநூலாக்கக்குழு ஆலோசகர் ஒருவரிடம் வினாவினேன். அதற்கு அவர் அளித்த பதிலே இப்பத்தியை எழுதத் தூண்டியது என்பதை குறிப்பிட வேண்டும். அதாவது மரபுசார் அம்சங்களை மட்டும் பற்றி நிற்கும் சிலர், புதுக்கவிதை பற்றிய அம்சங்களை சேர்த்துக் கொள்வதில் அக்கறை காட்டுவதாக இல்லை என்கிறார் அவர். புதுக்கவிதை மீதான காழ்ப்புணர்வால் இவ்வாறு நடந்து கொள்கிறார்களோ தெரியவில்லை.

மரபுசார் கவிதைகளின் பொருளை விளங்கி நயக்க அணிகள் பற்றிய அறிவு துணைசெய்வது போல, புதுக்கவிதைகளை விளக்கி நயக்க புதுக்கவிதை நுட்பங்கள் பற்றிய அறிவு துணைசெய் கின்றன. இந் நிலையை உணராது இந்நுட்பங்கள் பற்றிய பாட நூலில் இடமளியாமல் புறந்தள்ளுவது பொருத்தமானதல்ல. காலமாற்றத்தை உணர்ந்தும் காலத்தின் தேவையை கருத்தில் கொண்டும் புதுக் கவிதை நுட்பங்கள் பற்றிய விடயங்கள் பாட நூலில் உள்வாங்கப்பட வேண்டும். அப்போதுதான் இன்றைய கவிதையை

திகழ்கிறது. ஒவ்வொரு துறையிலும் புதிய நுட்பங்கள் புகுந்து அத்துறையை முன்னகர்த்தியது போல புதுக்கவிதையிலும் நுட்பங்கள் புகுந்து புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

புதுக்கவிதையில் பொருட் செறிவு, கற்பனை, சிந்தனையைத் தூண்டுதல், நயம் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கு இப்புதுக் கவிதை நுட்பங்கள் பெரிதும் பயன் படுகின்றன. இன்னுமொரு வகையில் சொல்வதானால் மரபுக் கவிதைக்கு அணிகளைப் போல புதுக்கவிதைக்கு இந் நுட்பங்கள் பயன்படுகின்றன எனலாம்.

இந்நுட்பங்களை புரிந்து கொள்ளல் அத்துணை கடினமானதல்ல. அணிகளை கற்பது போல இவற்றையும் எளிதில் கற்கவும் விளங்கிக்கொள்ளவும் முடியும். இந்நுட்பங்கள் பற்றிய அறிமுக அறிவிருந்தாலே போதும் இன்றைய கவிதையின் பொருளை புரிந்து கொள்ளலாம். இந்நுட்பங்கள் ஒரு வகையில் புதுக்கவிதைகள் வெறும் உரிச்ச வாழைப்பழங்கள் அல்ல என்பதை பறை சாற்றியும் நிற்கின்றன.

இந்நுட்பங்கள் பற்றிய அணிகளில் சொல்லணிகள், பொருள் அணிகள் என இரு பெரும் பிரிவுகள் இருப்பது போன்று புதுக்கவிதையில் பரு பொருள் வடிவ நுட்பங்கள், நுண்பொருள் வடிவ நுட்பங்கள் என இரு பெரும் பிரிவுகள் உண்டு. இவை ஒவ்வொன்றும் தன்னகத்தே பல பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது.

மரபுசார் அணிகள் சிலவற்றுக்கும் புதுக்கவிதை நுட்பங்கள் சிலவற்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எடுத்துக்காட்டாக அணியிலக்கணத்தில் குறிப்பிடப்படும் பிறிதின் நவிற்சி அணிக்கும் நவீன இலக்கியகாரர் கூறும் நுண்பொருள் வடிவ நுட்பங்களில் ஒன்றான குறியீட்டுக்கும் (SYMBOL) மிக நெருங்கிய தொடர்புண்டு.

தரம் 10 தமிழ் (இலக்கணம்) பாடநூலில் சொல்லணிகள் ஐந்தும் பொருள் அணிகள் பத்தும் விளக்கப்பட்டுள்ளன. எனினும் பிறிதின் நவிற்சி அணி பற்றி குறிப்பிடவில்லை. ஒரு வேளை பிறிதின் நவிற்சி அணி பற்றி இப்பாட நூலில் குறிப்பிடப்பட்டிருந்தால் குறியீடாக அமைந்துள்ள புதுக் கவிதைகளை புரிந்துகொள்ள

புரியவும் நயக்கவும் மாணவருக்கு இயலும், இல்லாவிடில் இடரை சந்திக்க வேண்டிய நிலையே தோன்றும். இதற்கு எடுத்துக்காட்டாக சம்பவம் ஒன்றினை குறிப்பிடலாம். க.பொ.த. உயர்தரம் கலைப் பிரிவில்

**தருமை வதனன்**

கல்வி பயிலும் (தமிழை ஒரு பாடமாக) மாணவன் ஒருவனிடம் புதுக்கவிதை ஒன்றினைக் கொடுத்தேன். படிமமாக அமைந்த அப்புதுக்கவிதையை விளங்கி நயக்க முடியாமல் அம்மாணவன் இடர்பட்டதை அவதானித்தேன். இதற்குக் காரணம் புதுக்கவிதை நுட்பங்கள் பற்றிய அறிவோ புதுக்கவிதை பரிச்சயமோ இன்மைதான் என்பது சொல்லாமலே விளங்கும்.

எனவே தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூலில் புதுக் கவிதை பெருமளவு தோன்றும். இன்றைய சூழலில் அதற்குரிய இடமும் நுட்பங்கள் பற்றிய அறிவதற்கான வாய்ப்பு பாடநூலில் தரப்பட வேண்டும். இது குறித்து கல்விச் சமூகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்பதே என் அவா.

## மமதையும் இன்னொரு மலையும்

மலையை நோக்கி
அந்த மனிதன்
ஏறத்தொடங்கினான்
அதன் உச்சியை அடைதலே
அவனின் இலட்சியமாய்
வியாபித்து விரிந்திருந்தது.

முயற்சியில் சளைக்காது
முடங்காது.....
உயர்ச்சியை நோக்கி
உறுதியோடு முன்னேறினான்

வலிகளின் வழிகளோடு
அவன் பயணித்தான்
இறுதியில் இலட்சியக்கனவு
உறுதியின் உரத்தால் நனவாய் மாறிற்று
அவன் அந்த உச்சியில்
ஏறி நின்றான்
சிறிது காலநகர்வின் தகர்வில்
அவனுள் ஏற்றமும் மாற்றமும்
குடியேறி நிரந்தரமாயின

அவன் "தானே தானே"
யாவுமென்றான்
திடீர் என ஒருநாள்
மமதை உச்சியில்
கொக்கரித்த போது.....
மலை உச்சியில் இருந்து
வீழுந்து இறந்தான்.

இப்போது மலைகளுக்குக் கீழே
எலும்புக் கூடுகளும்..........
பிணக்குவியல்களும் குவிந்து கிடக்கின்றன
அவையும் சேர்ந்தொரு
மலையாய் உருமாறித்
தோற்றமும் தரலாம்
ஆயினும்..... எல்லோரிடமும்
இப்போதும் இன்னும்
இலட்சியக்கனவுகளும் பயணங்களும்
நிறைந்தே கிடக்கின்றன.


-த. அஜந்தகுமார்-

## ஒளியற்ற வெளி

சிறையின் கம்பிகளிற்கு
நிழலில்லை.....
நிறமற்றுப் போயிருக்கின்றன
என் விழிகள்-ஆனால்
1, 2, 3.............
கம்பிகள் நிச்சயமாய்
இருக்கின்றன- இனி
எனது கண்களிற்கு
ஒளியின் தேவையிருக்காது-இந்த
நிழலற்ற உலகில்-எப்போதோ
நழுவி விழுந்து விட்டது-என்
ஒளிபற்றிய பிரக்ஞை......
தெரியாது என்கிற
உண்மைக்கும்
தெரியும் என்கிற
பொய்யிற்கும்!- அவர்கள்
ஒன்றையே பிரதிபலிப்பர்.....
தமது அனுமானங்களை
நிறுவுகிற முனைப்புடன்
அம்மா-உனக்கு
நம்பிக்கைகளை
தர இயலவில்லை-மேற்கொண்டு
நேர்த்திகள் எதுவும்
வேண்டாம்-ஆனாலும்
அம்மா! பிரார்த்தனை செய்
இனி யாருக்கும் வேண்டாம்
என்போல்-ஒளியற்ற
விழிகள்..........

த.அகிலன்




# அரணைகள்

அரணைகளில் பல விதங்கள் உள்ளன. இவை ஊர்வன பிரிவில் ஸ்குவாமாட்ட (செதில் உடைய பிராணிகள்) வரிசையில் சௌரியா எனும் உப வரிசையை சேர்ந்தது.

அரணைகள் பொதுவாக நிலத்தில் வாழ்பவையே இவற்றின் உடல் மிருதுவாகவும், பளபளப்பாகவும் தட்டையாகவும் காணப்படும். பெரும்பாலானவற்றுக்கு குட்டையான கால்கள் உண்டு. சிலவற்றுக்கு கால்கள் இருப்பதில்லை.



இவற்றின் வால்கள் ஆரம்பத்தில் பருமனாகவும் போகப்போகக் குறுகியதாகவும் நுனியில் மிக குறுகியதாகவும் காணப்படும். அரணைகளில் ஏறக்குறைய 600 இனங்கள் உள்ளன. இவற்றுள் காலமன் தீவுகளில் காணப்படுகின்ற அரணை களே மிகப்பெரியது. இது 60 செ.மீற்றர் நீளம் வரை வளரக் கூடிய ஓர் தாவரவுண்ணியாகும்.

மரப் பொந்துகளில் வசிக் கும் இது ஓர் பகல் இரை தேடி. குளிர்காலத்தில் துவாரத்தின் வாயை பாசிகளால் மூடிவிட்டு குளிர்கால தூக்கத்தில் ஆழ்ந்துவிடும். சில அரணைகள் புழு பூச்சிக்களையும் பிடித்து உண்ணும். இரையைக் கண்டதும் வேகமாக ஓடிச் சென்று லாவகமாகப் பிடித்துத் தின்னும் பெரும்பாலும் வெப்பமண்டல நாடுகளிலேயே காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆசியா, அவுஸ்திரேலியா போன்ற பிரதேசங்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

இதில் பெண் அரணை சாம்பல் நிறமாக வும், ஆண் அரணை பசிய நிறத்தில் காணப் படும். இதற்கு பல எதிரிகள் உண்டு. அவை களிடமிருந்து தப்பித்து ஓடும்போது தனது வாலை முறித்து எறிந்து விட்டு ஓடிவிடும். குறித்த வால் சிறிது காலங்களில் மீண்டும் வளர்ந்து விடும். நமது நாட்டில் பாம்பரணை, மணல் அரணை, மணல் மீன் அரணை எனப் பல இனங்கள் காணப்படுகின்றன.

ஆபிரிக்காவில் ஐந்து வரி அரணை என்று ஓர் இனம் உண்டு. மனிதர்களின் குடியிருப்புக்கு அருகில் வசிக்கும் இதன் உணவு பூச்சியினங் களே. இளம் அரணையின் உடல் கறுப்பாகவும் ஐந்து நீல நிற வரிகளுடனும் இருக்கும். வால் நீல நிறத்தில் காணப்படும். ஆனால் பெரிய அரணைகள் வேறு வகை நிறங்களாக இருக்கின் றன. இவ்வாறு உலகில் பல்வேறு பிரதேசங் களில் வித்தியாசமான அரணை இனங்கள் வாழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# சொற்சிலம்பம் - 79

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நே | ப் | ர் | சி | ன் | ளு | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | ட |
| கா | லா | த் | சோ | னி | ணி | ன் |
| து | அ | பி | ரி | ரோ | ல் | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | றி |
| ர் | ப் | கா | சா | ய் | யெ | டெ |
| அ | ல் | ன் | ஓ | கி | ச | கூ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக் களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -77 இன் விடைகள்

01. பிரித்தானியா

02. பிடல்கஸ்ரோ

## சொற்சிலம்பம் - 77 இன் பரிசுக்குரியவர்

**இ.திலீப்குமார்**
**ஜெப ஆலயமிஷன்,**
**இல:125, கட்சன்வீதி,**
**வட்டக்கச்சி.**

## சொற்சிலம்பம் - 77 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சி.யாழவன்/ஆ.ரமணன், ஜோன்கல்விநிலையம், புதுக்குடியிருப்பு.
02. பூ.பவனேஸ்வரன், கச்சர்வெளி, பளை.
03. ம.நிறோஜன், தரம்-4, யா.தாளையடி றோ.க. வித்தியாலயம்.
04. ஆர்.இந்துஜா யாழ்.அல்லைப்பிட்டி ம.வி, யாழ்ப்பாணம்.
05. சி.சஜிதன் புளியங்குளம்.
06. ச.கிந்துஜா இல-216/2 திருவையாறு.
07. செ.நிஷாந், இல.39, செல்வபுரம், வவுனிக்குளம்.
08. யோ.பத்மசுதந்திரா, தரம்-09B, மு/உடையார்கட்டு ம.வி.

01. உலகில் மிகப்பெரிய தீவின் பெயர்?
01) ..................................


02. அண்மையில் நடந்த டெஸ்ட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைக்கடந்த தெற்காசிய கிரிக் கெட்வீரரின் பெயர்?
01) ..................................

சொற்சிலம்பம்-79
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ..................................
முகவரி :- ..................................
..................................

# ஆமையாரின் இனிப்புச் சுவை

**பகுதி-07**






# இனிதான இல்லறத்திற்கு புரிந்துணர்வே அவசியம்



ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் பற்றி நன்கு புரிந்துகொண்டு செயற்படுவோமானால் பிரச்சினைகளுக்கு சந்தர்ப்பமே இருக்காதல்லவா. அதாவது ஒரு குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையில் அல்லது தாய் பிள்ளைகளுக்கிடையில் அல்லது தந்தை பிள்ளைகளுக்கிடையில் சகோதரர்களுக்கிடையில் அல்லது ஒரு காதலன் காதலிக்கிடையில் புரிந்துணர்வு என்பது சுமுகமானமுறையில் இருக்குமானால் அவர்கள் எப்பொழுதும் பிரச்சினைகள் அல்லது கருத்து முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளலாம். சிலசமயங்களில் உங்கள் மத்தியில் புரிந்துணர்வை எவ்வாறு ஏற்படுத்துவது? என்ற கேள்வி தோன்றலாம். நீங்கள் ஒவ்வொருவரும் பணிநேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நீங்கள் கூடியே இருப்பீர்கள். அவ்வாறான நேரங்களில் நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கு ஒருவர் நன்கு மனம் விட்டு பேசுங்கள். (எவ்வேளைகளிலும் நாங்கள் மகிழ்வாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எப்பொழுதும் இருங்கள்) அவ்வாறு பேசும் போது நீங்கள் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். அவ்வாறு புரிந்து கொண்டதன் பின்பு அவர்களுக்கு என்ன என்ன பிடிக்கும் என்பதையும் என்ன என்ன பிடிக்காது என்பதனையும் நீங்கள் விளங்கிக் கொள்வீகள். அவ்வாறே உங்களுக்கு என்ன என்ன பிடிக்காது என்பதனையும் அவர்கள் விளங்கிக்கொள்வார்கள். இதுவே புரிந்துணர்வு ஆகும். இதன் பின்னர் உங்களுக்கு பிடித்தவைகள் அவர்களுக்கு பிடித்தவைகளாக இருக்கலாம். அல்லது அவர்களுக்கும் பிடித்தவைகள் உங்களுக்கு பிடிக்காமல் இருக்கலாம் அல்லது அவர்களுக்கு பிடிக்காதவைகள் உங்களுக்கு பிடிக்கலாம். இவ்வாறு இருக்குமானால் அதனையே ஒவ்வாமை என்பர். இந்நிலை காணப்படுமானால் யாருக்காக யார் விட்டுக்கொடுப்பது என்ற பிரச்சினை தோன்றும். அதாவது யாருக்கு பிடித்தமாதிரி யார் செயற்படுவது என்று ஒவ்வொருவரும் எனக்கு பிடித்த மாதிரித்தான் அவர்கள் செயற்படவேண்டும் என நினைக்காமல் அவர்களுக்கு பிடித்த மாதிரி நான் செயற்படவேண்டும் என நினைத்து செயற்படுவீகளேயானால் அதுவே விட்டுக்கொடுப்பு ஆகும். எனவே விட்டுக்கொடுப்புக்களை செய்து வெற்றியை எம்பக்கமாக்கி இன்பமான இல்லற வாழ்வை அனுபவிப்போம்.

**க.பபிலா**

# அயலவர்களோடு அன்பாய் அணுகுவோம்

என்னதான் நாம் வசதி படைத்தவர்களாக இருந்தபோதும் அடுத்தவர்களின் உதவி எமக்குத் தேவையான ஒன்றே. எம்மிடமுள்ள பணத்தால் நாம் எதையும் செய்யலாம் என்றெண்ணுதல் மடமையாகும்.

எந்நேரமும் எம்மிடம் பணம் இருக்கும் என்றெண்ணி அயலவர்களை வெறுத்தல் கூடாது. எப்பொழுதும் எம்மைச் சூழவுள்ள உறவுகளோடு அன்பாய் இருக்க கற்றுக் கொள்ளவேண்டும். எம் கைநிறையப் பணம் இருக்கையில் அயலவர்களையும் உறவுகளையும் நாம் உதறி விடுகின்றோம். இதனால் நடப்பது என்ன? எம்மிடமுள்ள பணம் எம் கையை விட்டுப் போகையில் நாம் யாரை நாடுவோம். நாம் ஒதுக்கிவிட்ட உறவுகளையே முன்னர் பணத்திமிரில் நாம் ஆடிய ஆட்டங்களை அவர்கள் அறியாமல் இல்லை. இருந்தும் மனிதாபிமானத்தோடு உதவுகின்றார்களே, என்று எம் மனம் வெட்கித் தலை குனியும்.



நாம் எம் அயலவர்களோடு அன்பாய் இருக்க பணம் ஏன் தடையாக இருக்கவேண்டும்? என்ற இந்தக் கேள்வியை எம்மை நாமே கேட்டுப்பார்த்தால், விளக்கமான விடைகள் எமக்குக் கிடைக்கும். அயலவரின் அன்போடு நாம் வாழ்ந்தால் எம்வாழ்வின் இன்பத்திற்கு இடர் ஏதும் நெருங்கமுடியாது.

சிலருடைய மனங்களில் பொறாமை நிறைந்து காணப்படுவதால் ஒருவரோடும் மனம் திறந்து பேச மாட்டார்கள். எந்நேரமும் நாம் அடுத்தவரைப் பற்றி பொறாமை கொள்ளுமபோது அது எம்மையே அழிக்கின்றது. "பொறாமை என்பது தீ போன்றது" இக் கொடிய தீயை எம்முள்ளத்தில் எரியவிட்டால் அதில் எரிவது நாம் தான் அயலவர்கள் அல்ல. எது எப்படியாக இருந்த போதும் எம்மிடமுள்ள கெட்ட பழக்க வழக்கங்களை அடியோடு அகற்ற வேண்டும். அப்போதுதான் "இப்பூமியில் நாம் மனிதர்களாகப் பிறந்ததன் பயன் முழுமையாக எமக்குக் கிடைக்கும். சதா எந்நேரமும் அடுத்தவரின் குறைகுற்றங்களை அலசி ஆராய முற்படும் நாம் ஏன் ஒரு நிமிடம் என்றாலும் எம் குறைகளை அறிய முற்படலாம் அல்லவா.

அப்படி நாம் செயற்பட்டால் இப் பூமிதனில் நல்லவர்களாக இருக்கப்போவது நாம் தான். இதனால் இச் சமூகத்திற்கும் கோடி நன்மைகள் நம்மால் கிடைக்கும்.

இன்றைய வீடுகளில் இருப்போர் எப்படியும் தாம் பணக்காரர் என்றபெயர் எடுப்பதையே பெரும்பாலும் விரும்புகின்றனர். எப்படியான குணங்களோடு வாழவேண்டும் என்பதை ஒரு நிமிடமேனும் சிந்திப்பதில்லை. எந்தவொரு ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, ஒரு குறிக்கோள் இல்லாதவாழ்வு, உயிரற்ற உடலுக்கு உணவூட்டல் போன்றதாகும். உயிரற்ற எம் உடலுக்கு உணவைக் கொடுத்தால் எப்படி வளர்ச்சியடையும். அதேபோன்றே குறிக்கோள் இல்லாதவரின் வாழ்வு வளர்ச்சியடையாமல் பூச்சியமாகிக்கிடக்கின்றது.

நாம் வாழ்வில் தேடுவதில் எப்படி முயற்சி எடுக்கின்றோமோ அதேபோன்று, எம்முடைய நற்குணங்களையும் வளர்க்க முயற்சிக்கவேண்டும். எம்மைப் பற்றியே சிந்தனைகளைச் சுழலவிடாமல் இச் சமூகத்தோடும் கொஞ்சம் திசை திருப்ப வேண்டும். அப்படி எம் வாழ்வில் நாம் நடந்தால் எம் வாழ்விலும் ஒரு பிடிப்பு வரும். வெறுமனே எம்முடைய குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் இருந்தால் "நாமும் குறுகிய மனிதர்களாகவே இருப்போம்" எவ்வளவுக்கு நாம் அயலவர்களை நேசிக்கின்றோமோ அவ்வளவும் எமக்கு "வாழ்வில் கிடைக்கும் வசந்த காலங்களாகும்"

எமக்கு ஒரு துன்பம் வரும்போதே எம் நற்பண்புகள் நாலுபேர் அறிவார்கள். ஏனெனில் நாம் நல்லமனதோடு அயலவரோடு உறவாடியிருந்தால் எம் துன்பத்தில் நிறையப்பேர் பங்குகொண்டு எம்மை ஆறுதல் படுத்தியிருப்பார்கள். அப்போது வூரும் உறவுகளை வைத்தே எம் நற்பண்புகள் கணிக்கப்படுகின்றன.

நாளுக்கு நாள் நாகரிகம் மாறலாம். ஆனால் நாம் நாமாகவே இருக்கவேண்டும். ஆடையை மாற்றுவது நாகரிகம் அதுவும் அளவுக்கு மிஞ்சினால் அநாகரிகம். அதேபோன்றே எம் குணங்கள் சீரற்ற முறையில் மாறும் போது, நாம் மனிதன் என்ற நிலை மாறி மிருகம் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இதனை நாம அறியாமல் அல்லல் படுகின்றோம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் எமக்கு எம் மனதை ஆளும் தன்மையற்று அதனை பயனற்றமுறையில் விட்டுவிடுகின்றோம். இதனால் எமக்குக் கிடைப்பவை என்ன என்பதை அறிய நாம் ஒவ்வொருவரும் முற்பட வேண்டும்.

**சு.சிவாஜினி**

# பரீட்சைக்கு செல்ல முன்... கவனிக்க வேண்டிய சில குறிப்புகள்

பரீட்சைக்கு சிறந்த முறையில் தயார் செய்ய வருட ஆரம்பத்திலேயே ஆரம்பித்து விடுவது நல்லது. அன்றைய பாடங்களை அன்றே படித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

* * *

பரீட்சை நெருங்கும் காலங்களில் வீட்டை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள்.

* * *

ரிவி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள். அதுவும் குறிப்பாக குழந்தைகள் படிக்கும் நேரங்களில் ரிவி பார்ப்பது அவர்கள் கவனத்தைச் சிதறடிக்கும்.

* * *

குழந்தைகள் இடைவெளி விட்டுப் படிப்பதே நல்லது. ஒரு மணி நேரப் படிப்பிற்குப் பிறகு 10 நிமிடங்கள் மனத்திற்குப் பிடித்தவற்றில் ஈடுபட்டு பிறகு மீண்டும் படிக்க உட்காரும் போது உற்சாகம் அதிகமாகும்.

* * *

கேள்வித்தாளை வாங்கியவுடன் அமைதியாக முழுவதையும் படித்துவிட்டு நன்றாகத் தெரிந்தவற்றிற்கு முதலில் பதிலெழுத ஆரம்பிக்கவும்.

## சொக்லெட் கேக்




தேவையான பொருட்கள்:-


| | |
|---|---|
| பட்டர் | -500 கிராம் |
| கோதுமை மா | -500 கிராம் |
| சீனி | -500 கிராம் |
| முட்டை | -8 |
| பேக்கிங் பவுடர் | -4 தே.க |
| கொக்கோ பவுடர் | -2 மே.க |
| வனிலா | -2 தே.க |

செய்முறை:-

* பட்டரையும், சீனியையும் நன்கு சேர்த்துக்கொள்ளவும்.
* இடையிலே முட்டையையும் ஒவ்வொன்றாகச் சேர்த்து அடிக்கவும்.
* சீனி கரைந்தபின் பேக்கிங் பவுடர் கலந்த மாவையும் கொக்கோ பவுடரையும் சேர்த்து கலவைக்குள் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கலக்கவும்.
* பின் வனிலாவையும் சேர்த்து பேக் பண்ணவும்.

# கண்களை கவனியுங்கள்

தினமும் பத்து மணி நேரத்திற்கு மேல் கணினிக்கு முன் அமர்ந்து வேலைசெய்துகொண்டிருந்தால் அதிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் கண்களில் உள்ள விழிவெண்படலத்தை பாதித்துவிடுகிறது. இதனால் கண்வலி, தலைவலி, கண்சிவப்பது ஆகிய



பிரச்சினைகள் வரலாம். இதனால் அவர்களுக்கு கிட்டப்பார்வை, தூரப்பார்வை பிரச்சினை ஏற்படலாம். இப் பிரச்சினைகளை கணினிப் பார்வை நோயியம் என்றழைப்பர். எனவே நீங்கள் அதிகநேரம் கணினியில் மொனிட்டரைப் பார்த்துக்கொண்டிருக்காமல் உங்கள் பார்வையை அடிக்கடி வேறுபக்கமாகத்திருப்பவும் அடிக்கடி கண்ணிமைகளை மூடித் திறக்கவும் வேண்டும். அத்தோடு சாதாரண கண்ணாடி அணிந்து கொள்வது சிறப்பானது. ஏற்கனவே கண்ணாடி அணி பவராக இருந்தால் பிரச்சினை யில்லை. கண்கள் மிகப் பிரதான மானது. பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




**குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்**

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம் – 40**

பெயர்:.................................................

முகவரி:...............................................

...............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

குமுதினியில் கொல்லபட்ட மக்களின் சடலங்களை நெடுந்தீவுக்கு கொண்டுசெல்லப்பட ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன. குமுதினி குறிகாட்டுவான் இறங்குதுறையில் கட்டப்பட்டுக்கிடந்தது. அதனுள் மக்களின் இரத்தமும் கடல்நீரும் டீசலும் கலந்து இருந்தன. அந்தப்பக்கமே மக்கள் செல்லமுடியாத படி நிண நாற்றம் எடுத்தது. இந்தக் குமுதினியில் தான் உடல்கள் நெடுந்தீவுக்கு கொண்டு செல்லப்படவேண்டும். அதற்கு குமுதினி சுத்தப்படுத்தப்படவேண்டும்.ஆனால் எல்லோருமே அதற்கு கிட்ட செல்ல பயப்பட்டார்கள். ஒன்று நிணநாற்றம். அடுத்தது கொல்லப்பட்ட பயம். இறுதியாக மதுபானம் வாங்கிக்கொடுக்கப்பட்டு சிலரைக்கொண்டு குமுதினி கழுவப்பட்டது. மூன்றாம் நாள் தனது மக்களை சடலங்களாக காவிக்கொண்டு குமுதினி நெடுந்தீவு நோக்கி புறப்பட்டது.

இங்கு படத்தில் குமுதினியில் கொலையுண்ட 36 மக்களின் பெயர்விபரங்களை இந்தக் கல்வெட்டுப்படுத்தில் பாருங்கள்.





# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

இந்தக் கல்வெட்டு நெடுந்தீவின் மாவலித்துறையில் அமைக்கப்பட்டுள்ள குமுதினிப்படுகொலை நினைவாலயத்தில் அமைக்கப் பட்டுள்ளது.இந்த நினைவாலயம் சிறிலங்கா கடற்படையினதும், பொலிசினதும் காவல் நிலையமாக இப்போது இருக்கிறது.

அதனுள் நுழைந்து அந்த கல்வெட்டை பார்ப்பதே பெரும் துன்பம்.

ஒரு நாள் இந்தப் பெயர் விபரத்தை எடுப்பதற்காக நெடுந்தீவிற்கு


15-5-85ல் குமுதினிப் படகில வெட்டப்பட்டு இறந்தவர்களின் பெயர்கள்

த. இராஜேஸ்வரன் | சி. தில்லைநாதன்
மு. மணிவண்ணன் | ப. நிர்மலாதேவி
த. அமிர்தலிங்கம் | தொ. நாகேந்திரன்
செ. சந்திரகுமார் | கு. விநாயகமூர்த்தி
சா. குசலகுமாரி | ஞா. மரியமாணிக்கம்
கு. கனகலிங்கம் | செ. கிறிஸ்ரினம்மா
அ. அந்தோனிப்பிள்ளை | ப. சொர்ணமமா
ஞா. தேவசகாயம்பிள்ளை | வே. புஸ்பராணி

ச. கோவிந்தன் | கி. எலிசம்மா | வி. சுபாசினி
ம. [illegible]நாயகம் | ஐ. தெய்வானை | த. சசிகலா
வே. கந்தையா | ப. யோகராசா | ப. நிர்மலா
சு. யேசுதாசன் | வே. சின்னையா | அ. அஞ்சியா
சி. அந்தோனி | வை. சதாசிவம் | ஸ்ரீ. கனகம்மா
க. முருகன் | ந. கந்தையா | ப. மரியம்மா

க. கார்திகேசு | க. சதாசிவம்

சென்றேன். மாவலித்துறையில் நுழைந்து குமுதினி நினைவாலயத்துள் செல்லமுற்பட கடற்படையினர் மறித்தனர். என்ன என்று கேள்வி எழுப்பினர். நான் குமுதனி கல்வெட்டு பெயர் பார்க்கப்போகிறேன் என றேன். அது முடியாது என்றனர். நான் இது இராணுவ இலக்கல்லவே என்றேன். அப்பொழுது அங்கு நின்ற சிறிலங்காப் பொலிசாரிடம் கடற்படையினர் கேட்டனர். அவர் உடன் வந்து யார் நீ எதற்கு இந்த பேர் விபரம் எனக்கேட்டார். அதற்கு நான் கட்டுரை ஒன்றுக்கு தேவை என்றேன். மேலதிகாரியிடம் கேட்கவேண்டும் என்றார் அவர். சரி என்றேன். சிறிது நேரம் சிங்களத்தில் தொலைத் தொடர்புக் கருவியில் கதைத்தார்.

பிறகு திரும்ப விபரம் கேட்டார்.சொன்னேன்.அடையாள அட்டை காட்டச் சொன்னார்.காட்டினேன்.அரைகுறை மனதுடன் சம்மதிக்க பையிலிருந்து கமரா எடுக்க எதற்கு கமரா என்றார்.

கல் படமெடுக்க என்றேன்.அது முடியாது என்றார்.கல்லை மட்டும் என்றேன். அரைகுறை மனதுடன் பொலிசார் சம்மதித்தார். உடனடியாக கல்வெட்டுடன் சார்த்தி வைத்திருந்த துப்பாக்கிகள் ரவைக்கூடு தாங்கி அணிகள் என்பவற்றை வேகமாக அகற்றினர். கல்லை மட்டுமா படமெடுக்கிறேன் என அவதானித்தனர் படையினர். அதை மட்டும் படமெடுத்துவிட்டு வெளியேறி நெடுந்தீவை சுற்றிப்பார்த்துவிட்டு திரும்ப 1 மணிக்கு குறிகாட்டு வான் திரும்பவென மாவலித்துறைக்கு திரும்பி அதன் மடத்துச் சுவரில் அமர்ந்திருந்தவாறு அங்கிருந்த ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தேன்.அப்பொழுது குமுதினி நினைவாலயத்தில் இருந்து சிறிலங்கா பொலிசார் என்னைக்கூப்பிட்டார்.

என்ன எனக்கேட்டேன் இந்தப்படம் எதற்கு என்றார்.இது ஒரு கட்டுரைக்கு என்றேன். மீளவும் அரைமனதுடன் அந்தப் பொலிசார் சரி என்றார்.

எந்தப் படையினர் கொன்றனரோ அந்தப்படையினரே அந்த மக்களின் நினைவாலயத்தை ஆக்கிரமித்து நின்று செய்யும் அட்டகாசம் இது.

துருவன்




# மகாவம்சம் கூறுவது என்ன?

இந்த மண்ணின் மூதாதைகளான பெருங்கற்கால பண்பாட்டு மக்களுக்குரிய சான்றுகளுடன் வாழும் - எம்மை இம்மண்ணிற்கு அந்நியராக பிரகடனம் செய்த சிங்கள பௌத்த பேரினவாத நூல் மகாவம்சம். இதனடிப்படையில் சிங்கள வரலாற்றறிஞர்களும் தமிழர்களை வந்தேறு குடிகளாக சித்தரிக்கின்றன. மகாவம்சம் எம்மைப் பற்றி கூறும் புனைவுகளை தரும். நாம் அது புனைவு என்பதை சான்றுகள் மூலம் கூறுகிறோம்.

சிங்கள இனம் தனக்கான புத்த மனிதனாக விஜயன் என்ற பாத்திரத்தை மகாவம்சம் குறிப்பிடுகிறது. விஜயனின் இலங்கை வருகையும் இங்கு நடந்தது என்ன என்பதை மகாவம்சம் எப்படிக்கூறுகின்றது என்பதைப் பார்ப்போம்.


தம்பன்னியில் விஜயன் குழு தரைதட்டியது. விஜயன் கூட்டத்தார் இலங்கையில் நுழைந்த நாகரிகமான பேசும் மொழிகொண்ட ஒரே மனிதன் விஜயன் என்றும்-முன்பிருந்தோர் காட்டு மிரண்டிகள் எனவும் மகாவம்சம் கூறுகின்றது.

நிலைமை அப்படியல்ல. இங்கு 1லட்சத்து 25அயிரம் ஆண்டுகளின் முன் மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதும் கி.மு 1000 ஆண்டு களின் முன் தமிழகத்தைப் போல் பெருங்கற்கால பண்பாடு இந்த மண்ணிலும் நிலவியது என்பதும் சான்றுகள் மூலமான உண்மையாகும்.

ஆனால் விஜயன் வருகை கூறப்படுவது கி-மு 483 ஆகும். இந்த விஜயன் வருகைக்கு சான்றுகள் ஏதுமில்லை. அவனு டைய பிறப்புக்கு கூறப்படும் கதை யே மிகப்பெரும் புனைவாகும். அத்துடன் மகாவம்சம் கூறும் ஆட்சிப் புலம் அது கூறும் இலங்கையின் தென்பகுதி இனமாக இயக்கர்கள் வாழ்ந்த பகுதிகளில் கூறப்படுபவை யாகும். மாந்தையின் மாதோட்டம் மகாதித்த என்ற பெயரிலும் வனிக் குளம் பாலிஆறின் பெயரால் பெலிவாவி என்றும், ரட்டம்பல என பதவியாவும் அம பாறையின் தீகவாலி குறிப்பிட்டாலும் மகாவம்சம் கூறும் சிங்கள அரசர்களின் ஆட்சிப் புலம் வடபகுதியில் குறிப்பிடப்படவில்லை. மல்வத்த ஓயா என சிங் களப்பெயர் சூட்டப்பட்ட அருவியாறு கதம்பநதி என்ற பெயராலேயே வழங்கப்பட்டுள்ளது. மகாவம்சம் முன்னைய விஜயனின் புனைகதை யை தவிர்த்துப் பார்த்து - பின்னால் வரும் சிங்கள அரசர்களின் ஆட்சிப் புலம் தமிழர் பகுதிகளில் இருக்க வில்லை. சிங்கள பௌத்தத்தின் அடிப்படையில் எழுதப்பட்டதால் தமிழரின் பகுதிகள் பற்றி அது குறிப்பிட வில்லை. அது சிங்களத் தேசமாக இன்று இருக்கும் பகுதியின் வரலாறு என்று கூறுகின்றது.

மகாவம்சம் விஜயன் முதல் கி.பி352ஆம் ஆண்டுவரை இலங்கையை ஆண்டதாக குறிப்பிடும் மன்னர் விபரத்தை அதி லுள்ள ஒழுங் கின்படி பார்ப் போம். விஜயன், பண்டுவாசுதேவ, அபய, பண்டுகாபய மூத்தசிவ, தேவநம் பியதிஸ்ஸ, உத்தியு மகாசிவ, சூரதிஸ்ஸ, சேனா என்ற சேனன் குத்திக என்ற குத்திகள் அசேலா எலரா என்ற எல்லாளன், துட்டகாமினி, சதா திஸ்ஸ, தூலதான, லஞ்ச திஸ்ஸ, கல்லாத நாகா அல்லது மகாரட்கா, வட்டகாமினி கி.மு. 44முதல்29 வரை 5 தமிழர்கள்.

பின் புலஹத்தா, பாகியா, படையாவா, பிணையமாவா, டாதிகா, வட்டகாமினி, மகாசூலி மகாதிஸ்ஸ, கோரநாகா, திஸ்ஸா, சிவாவடுகா, டாருபத்கதிஸ்ஸ, நீலியா,



விரைவில் இந்தத் தீவு எது-என்று விஜயன் பதிலளித்தனர். இது இலங்கைத்தீவு, என்று இங்கு மனிதர்கள் இல்லை இங்கு பயங்கரங்கள் எதுவும் இருக்கப்போவதில்லை எனக் கூறியவாறு விஜயன், நீரை தனது பாத்திரத்திலிருந்து அவர்களுக்கு தெளித்தான்.

ஆனால் அந்தத்தீவில் குவேனி- என்ற இயக்க இன கீழ்த்தரப் பெண் இருந்தாள். இதனை விஜயனின் குழுவிலிருந்து ஒருவன் அறிந்து தெரிவித்தான். குவேனியை மணந்து இரு பிள்ளைகளைப் பெற்று அவளை துரத்திவிட்டு, பாண்டிய இளவரசி மற்றும் தோழிகளை விஜயன் மணந்தான் என அந்தக்கதை போகிறது. விஜயனின் காலம் 38 ஆண்டுகள் என மகாவம்சம் கூறுகின்றது. இந்தக் கதையைவிட இங்கு கூறப்பட்ட விடயமே முக்கியமானது. அதாவது

அனுலா.

குடாகன்னாதிஸ்ஸ, பாத்திகாபய, மகாடத்திகாமகாநாகா, அமன்டகாமினி, கன்ரஜானுதிஸ்ஸ, சூலபாய, சீவலி, இளநாகா, கந்தமுகசிவ, யசலாகதிஸ்ஸ, சுபராஜா, வஸபா, பங்கருசிகதிஸ்ஸ, கஜபாகுகாமினி, மகாஇளநாகா, பாதிகதிஸ்ஸ கனித்ததிஸ்ஸ, கஜநாகா, கஞ்சநாகா, சிறிநாகா, வோகரிகதிஸ்ஸ, அபயநாகா, சிறிநாகா-2 விஜயருமாரசம்கதிஸ்ஸ, சம்கபோதி சோதகாபயா, ஜெத்ததிஸ்ஸ, மகாசேன என்ற மன்னர்களை மகாவம்சம் ஆண்டமன்னர்களாக குறிப்பிடுகின்றது. இருந்தும் தமிழர் பகுதியில் இவர்களது ஆட்சிப் புலம் இருந்ததாக கூறப்படவில்லை. இவர்களின் முன்பே தமிழர்கள் இந்த மண்ணில் வாழ்ந்த சான்றாகின்றன.

# திருகோணமலையில் அழிவடைந்து வரும் தொல்கால கல்வெட்டு


திருகோணமலையின் வெருகல் மாவடிச்சேனை கல்லடியில் கல்மலையொன்றில் காணப் படும் தொல்கால கல்வெட்டு ஒன்று



சிதைவடைந்து வருகின்றது.

மாவடிச்சேனை கல்லடி மலையின் மேற்புறப் பாறையில் இரண்டு மீற்றர் நீள அகலத்தில் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது.இந்த கல்வெட்டுப்பாறை மழை மற்றும் வெயில் காரணமாக பாறையில் ஏற்படும் சிதைவு காரணமாக சேத மாகி வருகின்றது.இதுவரை எவரும் இக்கல்வெட்டுத் தொடர்பாக ஆய்வுகள் எதையும் மேற்கொள்ள வில்லை.

மலையின் மேற்புறப்பாறையிலும் கீழ்ப்புறப்பாறையிலும் இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இலங்கைத்தீவில் முன்னோடி எழுத்து வடிவக்கல்வெட்டு வரிவடித்தில் இந்த வரிவடிவம் காணப்படுகின்றது.கல்வெட்டு சாசனம் படிப்பவர்களாலேயே இதனை வாசிக்க முடியும். மலையின் உச்சியில் ஒரு கட்டுமானத்துக்கான செங்கல் அடித்தளம் காணப்படுகின்றது. தொல்கால மட்பாண்டங்களும்



இங்கு சிதறிக்காணப்புடுகின்றன. கல்வெட்டு இப்போதே சிதைந்து கிடக்கின்றதால் இது ஆவணப் படுத்தப்படாது போனால் இது அழிந்து போகும் வாய்ப்புகள் அதிகமாகும். இந்தமலையில் தொல்கால படக்கற்களும் அதனருகே ஒரு குழியும் காணப்படுகின்றது. கல்வெட்டுகளினதும் படிக்கற்கள் செங்கற்கட்டுமானத்தினதும் காட்சிகள் படங்களில் உள்ளது.



## இலக்கியப்பகிர்வு

# மனக்கோலம்

வன்னிப் பகுதியெங்கும் விழுது விட்டு விசாலித்து நிற்பது அறிவு அமுது "அறிவு அமுது" என்ற பெயர் தாங்கிய புத்தக சாலைகள் வன்னியில் முக்கிய நகரங்களில் அமைந்துள்ளன.

சிங்கள அரசின் பொருண் மியத் தடை உக்கிரம் பெற்ற காலத்தில் அதனை எதிர்கொள்ள துறை ரீதியாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் அமைந்த பல்வேறு நிறுவனங்கள் திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டதன் மூலமாகவே பொருண்மியத் தடையின் பாதகமான விளைவுகளை எம்மக்களால் வெல்ல முடிந்தது.

வளர்ச்சி பெற்ற இக் கட்டுமானங்களால் எங்கள் மண்ணின் எதிர்கால வளர்ச்சியின் அடையாளங்களாக இப்போதும் வளர்ச்சி பெறுவதை நாம் அனைவரும் அறிவோம்.

பொருண்மியத் தடை காலத்திலேயே எம் மண்ணில் மக்களுக்குக் கிடைக்காமல் போன விடயங்களில் ஒன்றுதான் நல்ல புத்தகங்கள். இதன் கருத்து பொருண்மியத் தடைகளுக்கு முன்னர் வன்னிப் பகுதியில் தரமான புத்தகங்கள் விற்பனையாகின என்பதாகக் கருதக் கூடாது.

அதற்கு முன்னர் புத்தக சாலைகள் இருந்தாலும் நல்ல தரமான இலக்கிய நூல்கள் உட்பட பல்துறை சார்ந்த நூல்கள் கிடைப்பது அரிதாகவே இருந்தது. எனினும் இந்தக் குறைகளையெல்லாம் சேர்த்து நிறைவு செய்ததுபோலவே "அறிவு அமுது" புத்தகசாலையின் வருகையானது அமைந்தது.

நெருக்கமான ஒரு கால கட்டத்தில் முல்லைத்தீவு புதுக் குடியிருப்பை மையமாகக் கொண்டு இலக்கிய முயற்சிகள் முனைப்புப் பெற்றது போலவே அறிவு அமுது புதுக்குடியிருப்பையே மையமாகக் கொண்டு எழுந்து இன்று விசாலித்துள்ளது.

நல்ல நூல்களை அறிமுகப் படுத்தும் பணியில் இறங்கிய "அறிவு அமுது" அதன் காரணமாக நல்ல இலக்கிய ஆர்வலர்கள் உருவாகக் காரணமாயிற்று. அறிவு அமுதை அடிப்படையாகக் கொண்டு இலக்கியப் பசியுள்ள ஒரு கூட்டமே உருவானது என்பது பெருமைப்படக் கூடிய விடயமே.

வாசிப்பு மூலம் விருத்தி பெற நல்ல நூல்களை அறிமுகப் படுத்திய அறிவு அமுது தன் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தது.

அதுதான் நல்ல நூல் வெளியிடல் முயற்சியாகும் இப்போது அறிவு அமுது பல்வேறு வகையான நூல்களை வெளியிட்டுள்ளது. குறிப்பாக எங்கள் மண்ணின் படைப்பாளிகள் போராளிப் படைப்பாளிகளின் நூல்கள் அதுவும் தரமான படைப்புக்கள் நூலுருப் பெற அறிவு அமுதே காரணமாயிருந்தது.

இது தவிர பல பயனுள்ள நூல்களை மீளப் பதிப்பித்தல் பணியிலும் அறிவு அமுது இறங்கியது. அவ்வாறு வெளியிடப்பட்ட பல்வேறு நூல்களில் ஒன்றுதான் "மனக்கோலம்"

பகுத்தறிவாளரான முனைவர் ஏபிரஹாம் ரி.கோவூர் ஒரு கால கட்டத்தில் "மூட நம்பிக்கைகளுக்கு" எதிராகத் தீவிரமாக செயற்பட்டு புகழ் பெற்றவர் மாத்திரம் அல்ல அதன் காரணமாக ஏராளமான குடும்பங்களின் வாழ்க்கையை நல்வழிப் படுத்தியவர்.

"ஒரேமொழி பேசும் எம்மை மதத்தாலும் பிரதேசங்களாலும் துண்டாடி ஒடுக்குவதற்கு எதிரி முயன்றுவருகின்றான்.

பல அர்ப்பணிப்புகளையும் சாதனைகளையும் புரிந்த நாம் எம்மிடையேயுள்ள மூடத்தனங்களைக் குழிதோண்டிப் புதைப்போம்.

இக்கதைகளினூடாக முனைவர் கோவூர் அவர்கள் மூடத் தனங்களில் மூழ்கிக் கிடந்தோரைக் கைகொடுத்துத் தூக்கிக் கரையேற்ற முனைந்தார்.

இன விடுதலை, மண்விடுதலை, பெண்விடுதலை நோக்கிய எமது வீரசுதந்திரப் போராட்டத்திற்கு இது போன்ற அறிவியல் நூல்கள் பயன் தரும் எனக் கருதி மீளப் பதிப்பித்திருக்கிறோம்" என அறிவு அமுது தனது உரையில் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமானது.

அதேவேளை 1978 ஆம் ஆண்டில் வீரகேசரி வெளியீட்டில் இந்த நூல் வெளியான போது வெளியீட்டாளர் என்ற ரீதியில் அவர்கள தெரிவித்த கருத்துக்களும் முக்கியமானவை.




"மனித செயல்களுக்கு அடிப்படையானது மனித மனமே என்பது உளவியலாளர் கொள்கை. புத்தர் முதற்கொண்டு உலக அறிஞர்கள் சகலரும் மனோ சக்தியின் வலிமை பற்றி கூறியுள்ளார்கள்"

பல உடல் நோய்களுக்கும் கோளாறுகளுக்கும் அடிப்படைக் காரணத்தை அறிந்து சிகிச்சை செய்ய மனோ தத்துவ ரீதியாக அணுக வேண்டியதின் அவசியத்தை மேல் நாடுகளின் மருத்துவர்கள் இன்று உணர்ந்துள்ளனர்.

முனைவர் ஏபிரஹாம், கோவூர் ஒரு சிறந்த மனோ தத்துவ நிபுணர். பல நோயாளர்கள் இவரிடம் சிகிச்சை பெற்றுள்ளார்கள். ஆதலால் அவரது அனுபவங்களை அறிந்து கொள்வதில் பயன் உண்டு.

நான் இக்கதைகளை எழுதியது ஏன் என்று முன்னவர் ஏபிரஹாம் ரி.கோவூர் அவர்கள் தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"ஆண், பெண், குழந்தைகள் ஆகியோருக்கு ஏற்படக் கூடிய மனோ விகாரங்களை வாசகர்களுக்கு எடுத்துக் கூற மன நோயுற்றவர்களை குணப்படுத்த அவர்களது உறவினர்கள் மந்திர வாதிகளை நாடுவதைத் தடுக்க, பேய்கள், வசியம், சூனியம், தீட்டு எனக் கொள்ளும் மூடத்தனமான கொள்கைகளை போக்க" என்பதுவே அவையாகும்.

கோவூர் அவர்களிடம் மனோதத்துவ சிகிச்சை பெறவந்த பலதரப்பட்டவர்களின் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே "மனக்கோலம்" கதை எழுதப்பட்டுள்ளன.

வீரகேசரி நிறுவனத்தில் அப்போது பணி புரிந்த எஸ்.என். தனரத்தினம் அவர்கள் இவற்றினை எழுதியுள்ளார். உண்மையில் பிற்போக்குத் தனமான மூடக் கொள்கையின் பின்னால் சென்று மக்கள் படும் அவலம் இக்கதைகள் மூலம் சுட்டிக் காட்டப் படுகின்றன.

மூடத்தனமும், பயமும், கண்மூடித்தனமான மதநம்பிக்கையும் மக்களை எப்படி நாசமாக்குகின்றன என்பதை இதே உண்மைச் சம்பவங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"சகோதரிகளைப் பிடித்த ஆவி" என்ற கதையின் கடைசியில் கோவூர் அவர்களின் கருத்து பின்வருமாறு.

"இன்று இந் நாட்டில் இந்த சகோதரிகளைப் போன்று எத்தனையோ பேர் இருக்கிறார்கள். உண்மையான கோளாறை அறிந்து வைத்தியம் செய்யாமல் மந்திரம் தந்திரம் என்று ஆயிரக்கணக்கான ரூபாவை விரயமாக்குகிறார்கள் பொறுப்பற்ற பலரின் போக்காலும் பேச்சாலும் இன்று எத்தனை பேர் ஆவி, பே, பிசாசு என்று வீணே கலங்குகிறார்கள். இச் சகோதரிகளைப் போன்று வீண்கஷ்டங்களுக்கு ஆளாவதும் இதனால் தான். கிராமங்களில் வாழும் மக்கள்தான் இன்று இப்படியான அவதிக்குள்ளாகி வருகின்றார்கள்."

"தேவதூதர்கள் அழைத்துச் சென்றனரா?" என்ற உண்மைச் சம்பவம் அதீதமான மத நம்பிக்கை காரணமாக எழும் சிக்கலை வெளிப்படுத்துகின்றது. அதில் சுட்டிக் காட்டப்படும் 'ஆன்' என்ற சிறுமி ஒரு விதமான மனோவியாதியால் கஷ்டப்படுகின்றாள். இந்த 'ஆன்' என்னும் சிறுமி கோவூர் அவர்களின் நெருக்கிய உறவினரும் கூட.

"பரதை றொட்ஸ் கிளான்ஸ்" என்ற ஒரு வித தொண்டைக் கோளாறே "ஆனுக்கு" இந்த மனோ வியாதியை ஏற்படுத்தியது என்பதை வைத்திய பரிசோதனைகள் நிரூபித்தன.

தனது பாட்டியின் ஆவியையும், தேவதைகளையும் 'ஆன்' பார்ப்பதாக கற்பனை செய்ய வைத்தது இந்தத் தொண்டைக் கோளாறே.

இதற்கு இரு காரணங்களை கூறலாம். ஒன்று மேற்கூறிய உடற் கூற்று கோளாறாகும். மற்றது பிள்ளைகளை குழந்தைப் பருவத்திலிருந்து பகுத்தறிவுக்கு ஒவ்வாத மடமைகளை நம்பச் செய்து மூளை அற்றவர்களாக வளர்ப்பதுவும் ஆகும். 'ஆனின்' பாட்டனாரான திரு.கோவூர் மலபார்சிரியன் தேவாலயத்தில் விகார் ஜெனரலாக இருந்தார். அவர் ஒரு சிறந்த கவிஞராகவும் இருந்தார்.

மேலும் கோவூர் குடும்பத்தில் திரு. ஏபிரஹாம் கோவூரையும், காலம் சென்ற அவரது தம்பி டாக்டர் பிஹெறன் கோவூரையும் தவிர அனைவருமே தீவிர கிறிஸ்தவர்கள்.

(22பக்கம் பார்க்க)

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்தி நாதன்**

# சந்தேக மணியத்தார்...



சில நேரங்களில சில விசயங்கள்
உண்மையிலேயே சொல்லுறவைக்கு
விளங்கித்தான் சொல்லுகினமோ
எண்டொரு பெரிய சந்தேகம் வந்து
போடும். ஆனால் சீச்சி உது பெரிய
படிச்ச பட்டம்பெற்ற மனுசர் எண்ட
படியால சரியாத்தான்
சொல்லியிருப்பினம் எண்டு மனதை
தட்டிக்கொடுக்கிறதுதான்.
ஆனாலும் உவையள்
சரியாத்தான்
சொல்லுகினமே...

சரி என்ர
புலம்பலை விட்டுட்டு
விசயத்துக்கு வருவம். விசயம் இதுதான் உந்த
யாழ்ப்பாணத்தில உயர் பாதுகாப்பு வலயம் எண்டபேரில எங்கட
சனத்திண்ட காணிகளை ஆமிக்காரர் பிடிச்சு
வைச்சிருக்கினமல்லோ அது தொடர்பா உயர் நீதிமன்றத்தில
வழக்குத் தாக்கல் செய்தவை அதை விசாரிச்ச உயர் நீதிமன்ற
நீதிபதி பாதிக்கப்பட்டிருக்கிறவைக்கு மாற்றுக்காணி வழங்குவது
தொடர்பாக அறிக்கை தருமாறு யாழ்ப்பாண அரசாங்க
அதிபருக்கு கட்டளை போட்டிருக்கிறானாம்.

இது என்ன விசர்க் கதை பாதிக்கப்பட்டிருக்கிறது என்ன
ஓராளா...... அது எண்பதினாயிரத்தையும் தாண்டி அஞ்சலோட்டம்
ஓடுது எண்ணிக்கை அப்பிடியிருக்க இவ்வளவு பேருக்கு எங்க
யாழ்ப்பாணத்தில மாற்றுக் காணி தேடப்போகினம்.

இது எனக்கொரு பழைய ஞாபகம் ஒண்டு வருது முந்தி
1986 களில ஒருக்கால் எங்கட பொடியள் ரோந்துபோன
ஆமிக்கு அடியொண்டு கொடுத்தவை. அதுக்கு சிறிலங்கா
விண்ட வானொலி உப்பிடித்தான் செய்தியொண்டு சொன்னது.
தாக்குதல் மேற்கொண்ட எல்.ரி.ரி.ஈயினரை படையினர்
யாழ்ப்பாணக் காடுகளுக்குள் தேடிவருகின்றனர் எண்டு
எங்கடசனத்தில சில பேர் யாழ்ப்பாணத்திண்ட வரைபடத்தை
எடுத்து வைச்சு யாழ்ப்பாணத்துக்க எங்க காடு இருக்கெண்டு
தேடினவை.

அதுமாதிரித்தான் இதுவும் இனி யாழ்ப்பாணத்துக்க
காணிதேடப் போகினம் எல்லாம் சித்த சுவாதீனமற்ற
அறலபேந்ததுகளை வைச்சுக் கொண்டு அரசியல் செய்யிற
விளையாட்டுத்தான்.

அது மட்டுமே அரசியல் பேச்சுவார்த்தையிலேயே உந்த உயர்
பாதுகாப்பு வல்யத்துக்க அம்பிட்ட சனத்தை குடியேத்துற
விடயம் ஒரு முக்கியமான விசயமாக இருக்குதல்லே. அதுக்கும்
சேர்த்து சட்ட ரீதியா ஆப்புவைக்க நினைக்கினம் இவையள்.

அதாலதான் அவையள் சொல்லியிருக்கினம்
உத்தியோகபூர்வமாக-சட்டரீதியாக-சுவீகரிக்க அரசு நடவடிக்கை
எடுத்திருப்பதாக. ஆகவே இனி இவையட்ட சட்ட பூர்வமற்ற
முறையில செய்த அடாவடித்தனத்தை சட்டபூர்வமாக செய்ய
விரும்பினம்.

அதாவது இதற்கான விளைவும் முடிவும் ஒன்றுதான்
உயர்பாதுகாப்பு வலயம் எண்ட பேரில பிடிச்சு வைச்சிருக்கிற
இடத்தை நாங்கள் அடிச்சுப் பிடிச்சாலேதவிர கதைச்சு
வாங்கேலாது எண்டுறதுதான்.

# குணங்களில் முதன்மையானது

ஒரு பண்பட்ட, வளர்ந்த இனத்தின் குணங்களில் முதன்மையானது எது தெரியுமா? எண்ணத்தைச் சிந்தனையைப் பண்பட்ட முறையில், அளவான வார்த்தைகளால் வெளிப்படுத்துதல் என்பதுதான். வளர்ந்த இனமென்று நீங்கள் கருதும் எந்த இனத்தையும் கொஞ்சம் இங்கு நினைத்துப்பார்க்கலாம்.

தனது சிந்தனையைச் சமுதாயத்தால் வரையறுக்கப்பட்ட விதத்தில், அதே நேரத்தில் தான் சொல்ல வந்ததின் பொருளைச் சிறிதும் சிதைக்காமல் எதிரியின் மனதிலும் தாக்கம் உண்டாகும் விதத்தில் (தாக்கும் விதத்தில் அல்ல, அது மிக எளிது) பேசும் வல்லமை. வாய்க்கப்பட்டவர்களின் வெற்றிகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவை. அவர் ஒரு பண்பட்ட இனத்தின் அடையாளம், பிரதிநிதி.

வெளிப்படுத்துதல் என்பது ஒரு கலை. அதிலும் எண்ணங்களைப் பிறருக்குத் தெளிவாக வெளிப்படுத்தும் திறன் அனைவருக்கும் வாய்ப்பதில்லை. தனது எண்ணத்தைக் கவிதையாகவோ, கட்டுரையாகவோ, கதையாகவோ திரைப்படமாகவோ சமைக்கும் திறமை நம்மில் எத்தனை பேருக்கு உண்டு? நமது சிந்தனைகளையும், உணர்வுகளையும் எழுத்தில் அழகாகக்காட்டும் வல்லமை பெற்றவர்கள் பாக்கியசாலிகள். இந்த வெளிப்படுத்தலில் கல்வி மிக முக்கியபங்கு வகிக்கின்றது. படிக்காத ஒருவரின் பேச்சுக்கும், படித்த ஒருவரின பேச்சுக்கும் உள்ள வித்தியாசத்தை மிக எளிதாய் யாரும் உணரமுடியும். ஏட்டுக்கல்வி கல்லாத சிலரும் கூட அருமையாகத் தனது எண்ணத்தை வெளிப்படுத்தும் திறனைப் பெற்றிருப்பது அரிதாய் நிகழ்கிறது.

# நான் கண்டது என்ன...?

உலா 26

சின்னஞ்சிறிசுகள், பென்னம் பெரிசுகள் எல்லாருக்கும் வணக்கம்! என்ன இவரிலை ஒரு புதுக்களை அடிக்கிதெண்டு பார்ப்பியள். குந்திலை போயெல்லாம் ஆறஅமர இருந்து கதைக்க என்னால ஏலாது. என்ன வெயில்! சே இந்த வெயில்லை இருந்து தப்ப ஒரு வழியும் இல்லையோ எண்டு நீங்கள் யோசிப்பியள். இந்தக் காலத்திலை பிள்ளையளை பெத்து வளர்க்கிறதுக்குப் பதிலா நாலு மரத்தை நட்டாலும் பிரயோசனமா நிழலெண்டாலும் தரும் போல கிடக்கு. ஆனால் நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன். வயசும் போயிட்டதாலயோ என்னவோ தொட்டதுக்கும் எரிச்சலும், பொறாமையும் வருகிது பாருங்கோ ! அந்தச் சின்னப்பொடிப் பயல் 'Baby 81' அபிலாஷ் அமெரிக்காவுக்கு போக வாய்ப்பு கிடைச்சிட்டெண்டால், என்ர வயசுக்கு சாதாரணமா எங்கட ஒரு சின்னாளுக்கு ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்கெண்டு சந்தோசப்படுகிறது தானே நியாயம். ஆனாலும், பிழையெண்டு மனச்சாட்சி சொன்னாலும், உள்ளுக்குள்ளை ஒரே புகைச்சல். அதுதான் நல்லா யோசிச்சுப்பார்த்தன். நானும் ஒருக்கால் உப்பிடியே வெளி[illegible]டுகள் பக்கம் போயிட்டு [illegible] எண்டு அலுவல்கள் பார்க்கத்தொடங்கிட்டன். நீங்கள் நினைக்கக்கூடாது 'கெட்ட மனுசன் சும்மா விலாசத்துக்கு உலகம் சுத்தப்போகுது' எண்டு. அங்கே போய் நாலையும் பார்த்து, கீத்து உங்களுக்கு எழுதலாமெல்லோ! மற்றது பாருங்கோ! எனக்கும் கனநாளா உந்த ஈ-மெயில், இலையான்-மெயில் எல்லாம் அனுப்போணும் எண்டு ஆசை. அப்ப அங்கை நிண்டும் தவறாமல் வாராவாரம் உங்களோடை கதைக்கத் தவற மாட்டன்.

எல்லாம் சரிவந்தால் வலுகெதியில வெளிக்கிட்டிடுவன். இப்பிடி ஏ-9 இல சைக்கிள் ஓடிற சந்தோசம் மாதிரி எங்கை கிடைக்கப்போகுது ! ஆனால் ஒரு விசயம் எனக்கு விளங்கேல்லை பாருங்கோ : ஏ-9 போக்குவரவுக் குறியீட்டைக் கொண்ட இந்த வீதிக்கு ஒத்தசொல்லுகள் கனத்துப் போச்சிது. யாழ்சாலை, கண்டிவீதி, முதன்மைச்சாலை எண்டு நீளுது. வவுனியாவுக்கு அங்காலை வேணுமெண்டால் கண்டிவீதியாய் இருந்திட்டுப் போகட்டும். அப்ப மிஞ்சிறதுக்குள்ளை யாழ்சாலையோ, முதன்மைச்சாலையோ எண்டு ஒருக்கால் முடிவெடுத்து அறிவிப்புப்பலகையளையும், முகவரியளையும் போட்டால் நல்லா இருக்குமெண்டு நினைக்கிறன். உந்த பலசொல் ஒருபொருள் எல்லாம் வீதியளுக்கு அழகில்லை. பொறுங்கோ! என்ன இது இதுக்கிள்ளை ஏ-9இல் புதுசா ஏதோ முளைச்சிருக்கு. நானும் வெய்யில்லை வாங்கிக்கட்டினதாலை வடிவா இஞ்சால் பக்கம் வரேல்லை. சரியான சனமுமாக் கிடக்கு. ஏதாவது மலிவு விற்பனையோ ? இல்லாட்டி கடைசியா உதால நான் போனநேரம் சும்மா கிடந்த இடத்தில . . . விடுங்கோ விடுங்கோ ! என்னண்டு இறங்கிப் பார்ப்போம் !

"வணக்கம் அப்பு ! வாங்கோ வாங்கோ ! உங்களை .................. சார்பில வரவேற்கிறோம். எங்கை இருக்கப் போறீங்கள்? ". "வணக்கம் தம்பி! இடம் பிரச்சினையில்லை, எங்கையெண்டாலும் பரவாயில்லை". "......... ! அப்புவை அந்த மேசையில இருத்தி, என்ன வேணுமெண்டு கவனியுங்கோ!", எண்டு வேற ஆளிட்டை சொல்லிப்போட்டு, அவர் வாசலிலை நிண்டு வாற மற்றாக்களையும் கைகூப்பி வணக்கம் தெரிவிச்சு வரவேற்றுக்கொண்டிருந்தார். "அப்பு! வணக்கம் இதிலை இருங்கோ! வெய்யிலுக்கிள்ளை நல்லாத்தான் களைச்சிட்டீங்கள் போல இருங்கோ!". "ஓ . .சரியான வெய்யில் தான்! எட எனக்குத் தெரியாமல் திடீரெண்டு ஏ-9இல ஒரு சாப்பாட்டுக்கடை திறந்திருக்கிறீங்கள். இஞ்சால கொஞ்ச அலுவல்கள் செய்யிறதுக்குக் கிடந்ததால மத்தியானச்சாப்பாடு முடியிறதுக்கு முன்னாலயே வெளிக்கிட்டு வந்திட்டன். முதல்லை என்ன தான் சாப்பாடு உங்களிட்டை இருக்கெண்டு சொல்லுங்கோ ! மற்றது புதுசா வேற கட்டியிருக்கிறீங்கள். முழு சீ[illegible]நுப் பையின்ரை செலவையும் என்ரை தலையில கட்டிப் போடாதீங்கோ". "சீச்சீ! ஒண்டும் யோசிக்காதீங்கோ அப்பு ! வழமையான விலையளை விட அதிகமில்லை. இப்பிடிச்செய்வோமா ? வெய்யிலுக்கிள்ளால வந்திருக்கிறீங்கள். குளிரா இளநீர் கொண்டுவாறன். இந்த பட்டியலேட்டை பார்த்து என்ன உங்களுக்கு என்ன விருப்பமெண்டு தெரிவுசெய்யுங்கோ! ஒவ்வொண்டின்ரை விலைவிபரமும் அதிலை இருக்கிது". "பேந்தென்ன உங்களிட்டையாவது இளநீர் இருக்கிது. பிள்ளை கிடைக்காமல் பண்ணக் கூடிய மாதிரி எசென்சை கூடப்போட்டு விக்கிற கோலாவைக் குடிச்சுப் போட்டு ஒரு பக்கத்தாலை பூசாரியிக்கும், மற்றப் பக்கத்தாலை ஆஸ்பத்திரியளுக்குமெண்டு செலவளிக்கிறது தானே சாதாரணமா எங்கட வழக்கம். கடையளும் கண்மண் தெரியாமல் அதுகளையெல்லே பின்பற்றிதுகள்". ஏதோ சும்மா வாய்தான், அப்பிடி என்ன பெரிசா கிடக்கப்போகுது! சோத்துக்கு கறி கிடந்தால் அதுவே பெரிய விசயம், எண்டு மனசுக்குள்ளை நினைச்சுக்கொண்டிருக்கேக்கையே தேசிக்காய்த்தண்ணி அளவான குளிரோட வந்திச்சிது. சிரிச்ச முகத்தோட அதைக் கொண்டு வந்து வைச்ச விதம், ஔவையார் தான் உண்ட விருந்தைப் பற்றி புகழ்ந்து விபரிச்ச மாதிரி இருந்திச்சிது. மனசுக்குள்ளை திடீரெண்டு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்ட மாதிரிக் கிடந்திச்சிது. சரி எண்டிட்டு அவையின்ர பட்டியலேட்டை எடுத்துப் பார்த்தன்: 'அன்பானவர்களே ! காலாகாலமாக நம்மிடையே இருந்து வந்த ஆரோக்கியமான உணவு வழக்கங்கள் கைவிடப்பட்டு வருகின்றன. நமது வளங்களை வற்றிச்செல்ல அனுமதித்து, நம்முடைய சூழலுக்கு அந்நியமான உள்ளீடுகளை இறக்குமதி செய்து, அவற்றின் தயவில் நம் உடலுக்கும், பொருளாதாரத்துக்கும் ஆரோக்கியமற்றதொரு உணவு வழக்கத்திற்கு அடிமைப்பட்டு வருகிறோம். நமது உள- கல்வி- மற்றும் சமூகப்பின்னடைவுகளுக்கு நாமே காரணமாக நடந்து கொள்கிறோம். வேதனையான இந்தப் போக்கை மனதில் கொண்டே, நம் அனைவரினதும் நல்வாழ்வை நிலைநிறுத்தி, நிமிரும் முகமாக இந்த உணவக முயற்சி. சுதேசிய வளங்களைக் கொண்டு போசாக்குள்ள பாரம்பரிய, புதிய, வேற்றுநாட்டு உணவு வகைகளை சுவைபடத் தயாரித்து உங்களுக்காக வழங்குகிறோம். உங்கள் ஒருசிலரின் வயிறுகளை நிறைத்து, எங்கள் பைகள் நிறைவதை விட, நீங்கள் அனைவரும் வயிறார போசாக்குண்டு, அதனால் நாம் வளர்வதையே விரும்புகிறோம். அதனாலேயே அளவான விலையில் அனுமதிக்கப்பட்ட அளவில் எங்கள் உணவுகள் உங்களுக்காக! நம்முடைய பெரும்பாலான உணவு வகைகள் எந்த உணவு வேளை யிலும் பெற்றுக்கொள்ளக்கூடியவை . . . '

எனக்கெண்டால் ஒரே ஆச்சரியம். எங்கள் மத்தியில இப்பிடியொரு கடை. ஏதோ அகழ்வாராய்ச்சியிலை மீட்டெடுத்துக்கொண்டு வந்த சங்ககாலக்கடை மாதிரி . . . அதுவும் உவ்வளவு சனம் வேற வந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிது. வேட்டியை இறுக்கிக்கட்டிப்போட்டு ஒருக்கால் எழும்பித்துள்ளோணும் போலக்கிடந்திச்சிது. ஐயோ சாகிறதுக்கு முன்னால இப்பிடியொண்டைக் காணுவன் எண்டு நினைச்சுப்பார்த்திருப்பனே ! "தம்பி ! இஞ்சை ஒருக்கால் வாறீரோ ? ". "சொல்லுங்கோ அப்பு ! எது எடுக்கப் போறீயள் ? ". "ஐயோ தம்பி! எனக்கு தலைகால் ஒண்டுமாத் தெரியேல்லை. இப்பிடியொரு சாப்பாட்டுக்கடை உருவாக வேணுமெண்டது என்ரை நெடுநாள் விருப்பம் பாருங்கோ! அதுக்காக நான் ஏதோ பெரிய சாப்பாட்டுராமன் எண்டு நினைச்சுப்போடாதீங்கோ! எங்கட ஆரோக்கியத்துக்கும், சுதேசிய பொருளாதாரத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து நீங்கள் தொடக்கியிருக்கிற இந்த முயற்சியை என்னண்டு பாராட்டிறதெண்டு எனக்குத் தெரியேல்லை. உம்மட முதலாளியை நான் ஒருக்கால் சந்திச்சு என்ரை சந்தோசத்தைச் சொன்னால் தான் என்ரை மனம் அடங்கும்". "உங்கட பாராட்டைக் கேட்க எங்களுக்கும் சந்தோசமாய் இருக்கிது. எங்கட முதலாளி வர இன்னும் 2 நாள் எடுக்கும். அவர் வேற இடத்திலை இதின்ரை கிளையொண்டை திறக்கிறதுக்கான அலுவலில ஓடித்திரியிறார்". "ஐயோ தம்பீ!". "சீ அப்பு விடுங்கோ! சும்மா விடுங்கோ! சின்னப்பிள்ளையள் மாதிரி கட்டிப்பிடிக்காதீங்கோ ! பார்க்கிற ஆக்கள் சிரிக்கப்போயினம்". "தம்பீ ! உமக்கென்ன தெரியும் ! உடம்புக்குதவாத சாப்பாடுகளையே விதம் விதமாய்ச் செய்து, ருசி கூட்டிற ஊக்கிகளையும் போட்டு இண்டைக்கு உலகம் பூரா McDonals காரங்கள் எத்தினையெண்டு திறந்து வைச்சிருக்கிறாங்கள். இது நாங்கள் என்னடாவெண்டால் எங்கட ஆரோக்கியமான சாப்பாட்டு வழக்கங்களையெல்லாம் விட்டிட்டு அந்நியப்பித்து பிடிச்சலையிறோம். உந்தக் கண்ணாடிப்பெட்டியளிலை வைச்சு அப்பிள் விக்கிற இடங்களிலை உள்ளூர்ப் பழம் ஏதாவது வில்படுதோ ? வெள்ளைக்காரருக்காகத்தான் நாங்கள் அதுகள் விக்கிறோம் எண்டு அவையள் சொல்லேலாது. ஏனெண்டால் இஞ்சை வாறவங்கள் இஞ்சைத்தேய உணவைப் பரீட்சிக்கத்தான் ஆசைப்படுவினம். உந்த எரிக், பீற்றர், ஜோன் எண்டு என்னோட சில வெள்ளைக்கூட்டாளிமார் இஞ்சை வந்தநேரம் நான் பட்ட அவமானத்தை மறக்க மாட்டன். அமெரிக்கருக்கு சரியா பிரியமான 'ஹம்பேகர்' இன்ரை பேரிலை பணிஸ்களோடை அவிச்ச முட்டையை விக்கிறதை அமெரிக்கன் கண்டானோ, பின்லேடனை விட எங்கள் மேலை தான் கூடக்கோவிப்பாங்கள் எண்டு வேற அவையள் என்னை வெருட்டிப் போட்டினம். சும்மா அந்நிய வெற்றுப்பிரம்மைகளுக்காக நாங்கள் டம்மி விளையாட்டு விளையாடலாமோ ? தான் எங்கையோ சாப்பிட்ட குழல்-புட்டும் மாம்பழமும் வேணுமெண்டு ஜோன் கேட்க, நான் தேடி அலைஞ்சுபோட்டு "இப்பை மாம்பழ சீஸன் இல்லையாம்" எண்டன். "எங்கட அப்பிள் பழங்களுக்கும் குறிப்பிட்ட காலம் தான் சீஸன் இருக்கிது. ஆனாலும் வருசம் பூரா அப்பிள் கிடைக்கும்", எண்டு சொல்லிப் போட்டு நக்கலாய் சிரிச்சினம். அப்பிடி எத்தினையெண்டு பார்த்து நொந்து வெந்துபோயிருக்கிற எனக்கு, உங்கட கடையக் கண்டவுடன ஆனந்தம் தாங்கேலைப் பாருங்கோ!"

"தம்பி ! இருந்தாலும் எனக்கொரு சந்தேகம். இப்பிடி நல்ல விசயங்கள் இருக்கிற இடங்களுக்கு சனம் பெரிசா வர விரும்பிறேல்லை. அப்பிடியிருக்க என்னண்டு இஞ்சை மட்டும் இவ்வளவு சனம் வந்திருக்கிது ? ". "அப்பு ! சனம் விரும்பிறேல்லை எண்டு நாங்கள் சொல்லேலாது. உங்கட தயாரிப்பில, சேவையில தரம் இருக்கேக்கிளை, நீங்களும் சரியான முறையில சனத்திட்டை அதுகளை கொண்டு போனால், நிச்சயம் ஆதரவு கிடைக்கும். வெறுமனே நாங்கள் ஆத்திரப் படிறதிலை அர்த்தம் இருக்கப்போறேல்லை. இண்டைக்கு நீங்கள் எந்தப் பத்திரிகையிலையும் அப்பிள் பழத்தின் ஆரோக்கிய அம்சங்கள் பற்றி தவறாமல் படிக்கக்கூடியதாயிருக்கும். ஆனால் அதுக்கு நிகரான நெல்லிக்கு விளம்பரம் இல்லை. அது பற்றின ஆராய்ச்சியளும் குறைவு. காய்ச்சலுக்கு மட்டும் தான் இளநீர் தேடியலையிற ஆட்கள் நாங்கள். காய்ச்சலே வராம இருக்கிறதுக்கு முயற்சிக்கிறேல்லை. அதாலை ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை திரும்பவும் கொண்டு வாறதோட மட்டுமில்லாமல், ஒவ்வொண்டாலையும் எங்களுக்குக் கிடைக்கிற பிரயோசனங்களையும் அறியத்தாறோம். இந்த சுவர்களிலை மாட்டியிருக்கிற படங்களையும், அட்டவணைகளையும் பார்த்தீங்களெண்டால் அது புரியும். இஞ்சை நீங்கள் சாப்பிட்டதுக்கான கட்டணங்களில 60% பொருள்- மற்ற சமையற் செலவுகளை உள்ளடக்கும். 10% முதல் போட்ட ஆக்களுக்கான லாபம். 10% பணியாளர்களின்ரை பேரிலை வங்கியில சேமிப்பில இடப்பட்டு, குறிப்பிட்ட காலப் பகுதியை அவையள் பூர்த்தி செய்த பிறகு மாதாமாதம் வழங்கப்படும். மிச்சம் 20% எங்கட பிரதேசங்களிலை இருந்து கிடைக்கக்கூடியவைகளை வைத்து ஆரோக்கியமான உணவுவகைகளை தயாரிக்கிறது பற்றின ஆராய்ச்சி- மற்றும் பயிற்சிகளுக்கு ஒதுக்கிறம்". "கேட்க சத்தியமா சந்தோசமா இருக்கிது தம்பி. நல்ல திட்டம் தான் ! என்னமாதிரி வேலைசெய்யிற ஆக்கள் எல்லாரும் நல்ல மாதிரி ஒத்துழைப்பு தருகினமோ? ". "ஓமோம்! அவையளுக்கு மாதச்சம்பளம் எண்டிருந்தாலும், கடைக்கு வர்ற லாபத்திலை 10% பென்சனாகப் போடப் படிறதாலை, ஊக்கமா கூட effective (செயற்றிறன்) ஆக வேலை செய்யினம். கிழமைக்கு ஒவ்வொருத்தரும் 45 மணித்தியாலம் வேலை செய்யோணும். சமையல், வரவேற்பு, கழுவல், பரிமாறுதல் எண்டு எல்லா வேலையும் மாறிமாறி எல்லாரும் செய்வினம். மற்றது கட்டாய வகுப்புகளும் நடக்கிறது, அதிலையும் எல்லாரும் பங்கெடுக்கோணும்". "நீர் சொல்லிறது நல்ல விசயம் தான். எல்லாரும் கடையில எல்லாத்தையும் செய்யத்தெரிஞ்சிருந்தால் அந்தந்த விசயஞானமும் கூடும், ஒண்டிரண்டு பேருக்கு வருத்தம் துன்பம் எண்டாலும் பாதிப்பில்லை. மற்றது தொழில்லை ஏற்றத்தாழ்வுகள் பார்க்கிறதும் குறையும். அதுசரி என்ன கட்டாய வகுப்புகள் நடக்கிறதெண்டு சொன்னனீர் ? ". "அதுவோ ஓமோம் ! உணவியல் : ஒவ்வொரு உணவிலையும் இருந்து எங்களுக்குக் கிடைக்கிற போசாக்குகள், நோயெதிர்ப்புச்சக்தி, நன்மைகள் பற்றினது. ஆங்கிலம் : இதிலை இங்க்லிஷ் பாடம் நடக்கிறது. வேற வேற நாட்டுச்சமையல் வகையள் மற்றது எங்கட பிரதேசங்களிலை அப்பப்பை என்ன வகையான மரக்கறிகள், இறைச்சிகளை பெற்றுக் கொள்ள முடியிது, அதெல்லாத்தையும் ஆங்கிலத்தில எப்பிடிச்சொல்லிறது எண்டெல்லாம் கதைச்சுப் பழகிறோம். இந்த வகுப்பில தமிழில கதைக்கத்தடை.

ஆனால் பம்பலாகவும், பிரயோசனமாகவும் போகுது. மற்றது சுவைத் தமிழ் : பள்ளிக்கூடத்திலை படிக்கேக்கிள்ளை ஏதோ பாஸ் பண்ணோணும் எண்ட நோக்கத்திலை தானே படிச்சனாங்கள். இந்த வகுப்பில பணியாளர்களின்ரை தமிழறிவையும், அதற்கான ஆர்வத்தையும் வளர்க்கிற வகையில சிறுகதை, கவிதை, விமர்சனம், பொதுஅறிவு எண்டு கனவிசயங்களும் கையாளப்படும். உண்மையைச் சொல்லப்போனால் எனக்குப் படிக்கிற காலத்திலை இலக்கியம் எண்டால் இருட்டுத்தான். இப்பை அதை ரசிக்கிறது எப்பிடியெண்டு விள்ங்கியிருக்கு ! மனசுக்கிள்ளை தேடல் அதிகரிச்சிருக்கு ! இந்த வகுப்பு கிழமையில ஒரே விசயம் 2 தரம் திரும்பத்திரும்ப நடத்தப்படிறதாலை எல்லாரும் மாறி மாறி நிண்டுகொண்டு பிரயோசனமடையிறோம். ஓ. . அப்பு ! மன்னிக்கோணும் ஆட்கள் கூட வருகினம். கவனிச்சிட்டு வாறன். உங்களுக்கென்ன கொண்டு வாறது ?". "ஐயோ தம்பி ! என்ரை வயிறு, மனமெல்லாம் நீர் சொன்ன விசயத்திலையே நிறைஞ்சிட்டிது. சே ! நான் வெளியால போற நேரம் பார்த்து இப்பிடியொரு கடையை விட்டிட்டு போகவேண்டி வந்திட்டிது. தம்பி இருந்த பசியெல்லாம் எங்கை போனதெண்டே தெரியேல்லை.




(20 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தன் டேவிற் கலாவுடன்

# கவிதை குறித்து கதையாடல்

இன்று மனிதனால் உருவாக்கப்பட்ட எல்லாமே அவனுக்கு எதிரானதாக மாறியுள்ளது. சிந்தனை மனித வாழ்க்கையை இலகுபடுத்துவதற்குப்பதிலாக மேலும் மேலும் வாழ்க்கையை நெருக்கடிக்குள்ளாக்கிவருகின்றது. பிரபஞ்சத்தின் புதிர்களை வெற்றிகொள்ளும் ஒவ்வொரு கணத்திலும் வாழ்க்கை மேம்பாடடையும் என்பது பொதுவிதி. வாழ்வைக்கண்டறியும் கண்ணாக சிந்தனையே இருக்கிறது.

மனிதமனம் எப்போதும் தவித்துக்கொண்டேயிருக்கிறது. அது எல்லாவற்றையும் அறியவேண்டும் என்ற முனைப்புடையது. இந்த அறிதல் வேட்கையே மனிதனை எப்போதும் முன்னகர்த்திக்கொண்டிருப்பது. மனித வளர்ச்சியின் அடிப்படையும் இதுதான்.

இப்போது இந்த வளர்ச்சி விதிக்கு நிகராக எதிராக மனிதச் சிந்தனை நெருக்கடிக்குள்ளாகிவருகிறது.

எதிரும் புதிருமான சிந்தனையும் வாழ்க்கையும் மனித வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே தொடர்ந்துவிடுகிறது என்றாலும் இப்போது அது அதிகமாகிவிட்டது.

எப்போதும் அதனதன் காலப்பகுதிக்கேற்ற மாதிரியும் வளர்ச்சி விகிதத்திற்கு ஏற்றமாதிரியும் நேர் எதிர்த்தன்மைகளும் இருக்கின்றனதான். ஆனால் இந்த நேர் எதிர்நிலை இப்போது வரவரக்கூடுகிறது. அப்படிக்கூடிவரும் இந்த நிலையில் ஏற்படும் உராய்வு பெரும் விபரீத விளைவுகளையே தரப்போகிறது. சிந்தனையின் விரிவும் வேகமும் வரவரக்கூடுகிறது. அதேபோல எதிர்த்தளமும் வலிமையாக அதிகரித்தே செல்கிறது. ஒன்றின் வேகத்திற்கேற்ப விளைவு இருப்பதைப்போலத்தான் இங்கும் இதிலும் நிலைமை.

அறிவு எல்லாவற்றையும் இலகுபடுத்துவதற்குப்பதிலாக, சுகப்படுத்துவதற்குப்பதிலாக எல்லாவற்றையும் முடிச்சுகளாக்கி இறுக்கிப் பின்னிவைத்துள்ளது.

மனப்பிறழ்ச்சியும் உளவியல் நெருக்கடியும் வரவரக்கூடுகிறது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவை எதனால் ஏற்படுகின்றன. எல்லா அறிவும்+சிந்தனையும் அதிகாரத்தை வளர்ப்பதில்தான் முடிவுறுகின்றன.

அதிகாரம் நான் முன்னரே சொன்னது போல குருட்டுத்தனம் நிரம்பியது. இதைத்தான் ∴ பூக்கோவும் சொல்கிறார். தெளிவாகவும் விளக்குகிறார்.

ஒருபக்கம் அதிகாரத்தைக் குவிப்பதற்கான முயற்சி. மறுபக்கத்தில் அதிகாரத்தை உடைப்பதற்கான - பகிர்வதற்கான பிரயத்தனம் என்று வாழ்க்கை நகர்ந்து வரலாறாகிறது.

மனிதன் வரவர நிம்மதியிழப்பது போல பாதுகாப்பற்றவனாகவும் ஆகியுள்ளான்.

அறிவும் பண்பாடும் நீதியும் தோற்றுவிட்டன என்பதற்காதாரமாகவே சட்டம், ஒழுங்கு, உரிமை, நலன், பாதுகாப்பு என்பதற்கான பல அமைப்புகளும் விதிமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

எல்லா வலையமைப்பையும் விடவும் இந்த விதிமுறைகளினதும் அமைப்புக்களினதும் வலையமைப்பு மிகப் பயங்கரமானது.

எல்லாவற்றை விடவும் அதிகம் தோற்றுப்போனவை போதனைகளே. மனித வரலாற்றில் அதிகம் தோல்வியைச் சந்தித்தவை மதங்களே.

மதங்களின் போதனைகளுக்கு எதிராக அவை முன்மொழிகிற நெறிமுறை களுக்கெதிராகவே மனித நடத்தை களும் மனமும் இருக்கின்றன.

வன்முறையாலான உலகை மதங்களே பல சந்தர்ப்பங்களில் படைத்திருக்கின்றன. சிலுவையுத்தம் முதல் பாபர் மசூதி-ராமஜென்ம பூமி வரையில் இதற்கு நிறைய எடுத்துக் காட்டுகளுண்டு.

மதங்களின் போதனையை விடவும் நெறிமுறைகளைவிடவும் கூடுதலான கல்வி வேறென்ன என்று வாதிடுவோர் கூட பின்னாளிப் போதனைகளின் வெளிறலைக்கண்டு விம்மியிருக்கிறார்கள்.

ஏன், பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவோ விசயங்களைப் போதிக்கின்றார்கள். அன்பு, கண்ணியம், நேர்மை, இரக்கம், ஒழுக்கம், புரிந்துணர்வு, நியாயம், அறம், விட்டுக்கொடுத்தல், சகித்தல், கருணை காட்டுதல் எனப்பலவற்றைப் போதிக்கிறார்கள் தங்களின் பிள்ளைகளிற்கு.

எந்தப்பெற்றோராவது தங்கள் பிள்ளைகளைத் தவறான வழிகளை நோக்கித் தள்ளும் வழிமுறைக்குத் தள்ளுவார்களா? இல்லையே.

இதேமாதிரி பள்ளிகளில் ஆசிரியர்கள் நற்போதனைகளை-+நல்லறிவுகளையே சொல்லிக்கொடுக்கிறார்கள்.

எல்லாப் பாடநூல்களிலும் கூட நல்ல மனதையும் பண்பையும் வளர்க்கும் வியூகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இப்படியாக நற்போதனை+நல்லறிவுச் சூழலுக்குள்ளால் வளர்க்கப்படும் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது எப்படி பின்னாளில் மாறி எதிர் நிலைக்காரியங்களில் ஈடுபடுவோராக இருக்கின்றார்கள்?

பின்னாளில் சூழ்ச்சி, தந்திரம், கபடம், ஏமாற்றுதல், பறித்தல், அதிகாரம் செய்தல், அத்துமீறல், அபகரித்தல், பாகுபாடு பார்த்தல், ஒதுக்குதல் என எதிர்நிலையங்களை நோக்கித் திரும்புவதென்ன?

உண்மையில் சகல போதனைகளும் ஒருபக்கம் நடக்கபோதிப்பவர்களின் வாழ்க்கை வேறுவிதமாக-போதனைக்கு எதிரானதாக இருக்கின்றது.

சொல்லைவிட செயலே எப்போதும் வலிமையென்பதால் போதனைக்குள்ளால் கற்பதை விடவும் வாழ்க்கைக்குள்ளால் கற்பதே அதிகமாகிறது.

போதிக்கும் பெற்றோரும் ஆசிரியர்களும் எப்படி வாழ்கிறார்கள்? எத்தகைய மனப்பாங்குகளோடு இயங்குகின்றார்கள்? என்பதையே பிள்ளைகள் அவதானிக்கின்றார்கள். அப்படி அவர்கள் அவதானிப்பவற்றிலிருந்தே தங்களுக்குரிய வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொள்கின்றார்கள். அது பாரபட்சமானதாகவும் கருணையற்றதாகவும் அழகில்லாததாகவும் தொடர்கிறது. பாகுபாடும், குரோதங்களும் நீதியின்மைகளும் கருணையற்றதுமான வாழ்க்கையை அழகியமாதிரி வடிவமைத்து மேல்நிலையாக்கியிருக்கிறார்கள். இந்த மேல்நிலை குறுகிய வழியான ஆதிக்க நிலை.

இயல்பில்லாமல்-பாவனை பண்ணப்படும் வாழ்க்கையும் பாவனை செய்யப்படும் உறவுகளும் அதற்குரிய உத்திகளும் இன்று பெருகிவிட்டன.

இவற்றையே நமது கவிதைகள் விமர்சித்து வந்திருக்கின்றன. தொடர்ந்த எங்களுடைய கவிதையின் கவனமும் இந்தப்போலிகள் அயோக்கியத் தனங்களின் மீதும் தான் குவிகின்றது.

இதனால் படைப்பின் சிந்தனைத் தளம் ஒடுங்கி மிகச்சாதாரண லௌகீக நடவடிக்கைகளில் வீழ்கிறது. இது கவிதையைப் புலம்பல் நிலைக்குத் தள்ளி விடுகிறது.

படைப்பினுள் விரியவேண்டிய சிந்தனை, அழகியல் மேன்மை, எதிர்காலம் குறித்த கனவு போன்றவை புறந்தள்ளப்பட்டு நடைமுறை வாழ்வை ஒழுங்குபடுத்தவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுகிறது. படைப்பு மனம் என்னுடைய கவிதைகளில் பாதிக்கு மேலானவை நடைமுறைவாழ்வின் விமர்சனங்களாகவும் பதிவுகளாகவும், வெளிப்பாடுகளாகவுமே இருக்கின்றன. இது கூர்மையான வாசகர்களுக்கு எரிச்சலை ஊட்டுகின்றது. மேலும் மேலும் அழுகிக் கொண்டிருக்கிற ஒரு பண்டத்தின் மீது ஏன் உனக்கு அதிக கவலை என்று ஒரு நண்பர் ஒருதடவை கேட்டார். அவர் சொன்ன அழுகிக் கொண்டிருக்கும் பண்டமென்பது இன்றைய எங்கள் வாழ்க்கையையே.

இந்த வாழ்க்கை இவ்வளவுக்குச் சீரழிந்து கொண்டிருக்கிறது என்று தெரி

**கருணாகரன்**

யாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தனிமைப்படல் இதில் முக்கியமான கோளாறாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தனிமைப்படுகிறார்கள்.

நீங்களும் தனிமைப்பட்டேயிருக்கிறீங்கள். நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டே இருக்கின்றீர்கள். உங்களை விட மற்றவர்களை குறைத்து மதிப்பிடும்போதும் கூட்டி மேலாக்கிப் பார்க்கும் போதும் தனிமைப்படல் நிகழ்கிறது. மற்றவர் களிலிருந்து தனிமைப்படும் போதுதான் உங்களுக் குரிய தனியிடம் அடையாளம் சித்திக்கும் என்று நம்புகிறீர்கள்.

இதேபோல மற்றவர்கள் ஏனையோரைத் தனிமைப்படுத்துகிறார்கள். அதனால் தாங்களும் தனிமைப்பட்டே போகிறார்கள்.

தனிமைப்படப்பட குரோதமும் வன்முறையும் போட்டியும் ஏற்படுகின்றன. அது முடிவுற்ற போட்டி.குழிகளும் அழிப்புகளும் நிறைந்த காரியங்கள் உத்திகளாகவும் தந்திரங்களாகவும் வளர்கின்றன.

இதுவரையான எந்த மகத்தான படைப்பாலும் வாழ்வை முழுதாக ஒழுங்குபடுத்தமுடியவில்லை. இது அவநம்பிக்கை சார்ந்த பார்வையில்லை உண்மை நிலை. ஏன் மகத்தான வாழ்க்கையை எதனாலும் உருவாக்க முடியாமலிருக்கிறது.



# ஞாபகங்களும் கனவும்

---

(2ஆம் பக்கம் தொடர்ச்சி)

இவ.ர் போட்ட அதட்டலில் கேள்விக்கு உட்பட்டவர்கள். மட்டுமல்ல வெளியே நின்றவர்களும அருண்டார்கள். " கொண்டா" என வெடுக்கெனக் கோப்பை வாங்கி "எப்பகுடி வந்தனி"

"எழுவத்தேழில"

"ஆர்காணி தந்த"

"நம்பதான் வெட்டினோம்"

"நம்ப எண்டா ஆர்?"

என்ர புருசனும் நானும்

"ஆர் வெட்டச்சொன்ன"

"ஆர்டியெஸகக் காறங்ககிட்ட......

" அவங்களுக்கு காணி குடுக்கிற அதிகாரமில்லை. நீ போகலாம்....... மற்றாள் ஐயா! அவுங்க குடுக்கல நம்ப வெட்டி இருந்தும் அவுங்களும் இருக்க......"

"கதை வேண்டாம் வெளியால போ.....ஆர் மற்றாள்"

"ஆற்றகாணி"

"அரசாங்கத்தோட காணி"

"அப்பயேன் வெட்டினாய்"

"இருக்க எடமில்ல..."

"எப்ப வெட்டினது"

"அப்பா இருக்கையில"

"அவர் எங்க?"

"செத்துட்டார்?"

" உனக்கு அவர் எழுதின துண்டக் கொண்டா? போ போ.... மற்றாள்......"

ஏதோ அரசாங்க நிலம் முழுவதும் அவனுக்கே பட்டயம் செய்ததுபோல மக்களை ஏசி அதட்டி நானே ராஜா என நிறுவிக்கொண்டிருந்தார் அவர். இடையிடையே" காணிச்சட்டம் தெரியுமோ காணிச் சட்டம்" என்றும் அதட்டும் இவர் போன்றோர்கள் ஆண்டாண்டுகாலமாக வேலைமாற்றல் கிடைத்துப் போகுமிடமெல்லாம் காணிகளைச் சேர்த்து வைத்திருப்பது உலகப் பிரசித்தம். இப்படிப்பட்டவர்கள் மக்கள் மீது காட்டும் அதிகாரத்தால் உண்மையிலேயே நியாயமாகக் கிடைத்த காணிகளைக் கூட மாற்றிக்கொள்ள முடியாமல் கச்சேரிக்கு அலைவதைக் காணக்கூடியதாக உள்ளது. நியாயமான மக்கள் குடியிருப்புக்களையே அமசடக்கமாக பணம் படைத்தோருக்கு மாற்றி விடும் அரச நிர்வாகிகள் ஏழைமக்களிடம் காணிச்சட்டம் பேசுவதுதான் பெரும் வேடிக்கை. எல்லோரும் இந்நாட்டு மன்னர்தான் மன்னர்கள் கோவணத்துடனும் சேவகர்கள் கொண்டாக்களுடனும் திரியும் காலமிது சாதுமிரண்டால் காடு கொள்ளாது அவ்வளவுதான்.




விளை பயிர்களில் உச்ச பயனைப்பெற நிலத்துக்கு பசளை இடல் வழமையானது தான். எனினும் பாவிப்பது இரசாயனப் பசளையாக இருந்தால் மண் எவ்வாறு நாசம் அடைகின்றது என்பது பல்வேறு தரப்புகளாலும் விளக்கப்பட்டே வருகின்றது.

என்றாலும் எங்கள் மக்களில் கணிசமானோர். இரசாயனப்பசளை பாவிப்பதில் சிறிதளவேனும் கவனம் கொண்டவர்களாக இல்லை.

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

குறிப்பாக நெற்பயிர் செய்வோர் உச்ச விளைச்சலைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு தேவையான அளவுக்கு மேலதிகமாக இரசாயனப் பசளையைப் பாவித்து தமது பயிர்களின் விளைச்சலைப் பாதிப்படையச் செய்வதோடு மட்டுமல்லாது மண்ணையும் பாழ் படுத்தி விடுகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவு "யூரியா" அதிகளவு "நைதரசன்" பசளைப் பாவனையால் தற்போதைய பெரும்போக விளைச்சல் பாதிப்படைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கூறுவதை விவசாயப் பெருமக்கள் உற்றுக் கவனிக்க வேண்டும்.

விவசாயிகள் பயிர் செய்கையினை மேற்கொள்ளும் போது சேதனப் பசளையை அவசியம் பயிரிடப்படும் நிலத்திற்கு-போடவேண்டிய தேவை உண்டு. பல வருடங்களாக தொடர்ச்சியான உற்பத்திகளை மேற்கொண்டு வருவதாலும் நிலத்திலுள்ள பயிருக்கான போசனைகள் யாவும் குறைந்து போய் உள்ளது.

ப்யிருக்கான போசனைகள் போதுமான அளவு கிடைக்காவிடின் "யூரியா" நைதரசன் உரத்தின் தாக்கத்தினால் பயிர்கள் அதிகம் வளர்ச்சி அடையும். இதனால் பயிர் சாய்வதாலும், பச்சயம் அதிகரிப்பதாலும் பூச்சிநோய் தாக்கலுக்கு உள்ளாகும் பயிர்கள் விளைச்சலில் பெருமளவு பாதிப்பு ஏற்படும்.

எனவே பயிர் உற்பத்தியின்போது விவசாயிகள் அதிக கவனம் செலுத்தவேண்டுமென உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளமையை நாங்கள் அதிக அக்கறையுடன் கருத்தில் கொள்ளவேண்டும்.

# பூக்கோவாச் செய்கை

கோவாக்களில் முட்டைக் கோவா, இலைக்கோவா, பூக்கோவா என மூன்று விதமான கோவாக்கள் பயிரிடப்படுகின்றன. முட்டைக் கோவா உருண்டை வடிவமாக திரண்டு கட்டிபோல் இருக்கும். இலைக்கோவா முட்டைவடிவமாகவும் இருகாது. இலை மட்டும் இருக்கும். பூக்கோவா வட்டமானதும் அழகானது மான பூக்களைப் பூக்கும். இது மிகவும் சுவையானது. இதன் இலைகளையும் உணவுக்குப் பயன்படுத்தலாம்.

பூக்கோவாச் செய்கை பற்றிப் பார்ப்போம். பூக்கோவாவுக்கு சந்தையில் நல்ல கிராக்கி இருக்கிறது. பூக் கோவாச் செய்கையில் விவசாயிகள் வன்னி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பயிரிடுவது குறைவு என்று தான் சொல்ல வேண்டும். யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பூக் கோவாச் செய்கை பண்ணப்படுகிறது. மலை நாட்டுப்பகுதியில் பூக்கோவா செய்கை பெருமளவில் செய்யப படுகிறது.

பூக்கோவா பயிரிடுவதற்கு ஏற்ற தரை நீர்வழிந்தோடக்கூடியதாக இருக்கவேண்டும். தரையை நன்கு ஆழமாக உழுது பண்படுத்த வேண்டும். நடுகை நிலத்தை தயார் செய்ய 1ஆவது உழவுடன் உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு போட்டு நன்கு மண்ணுடன் கலக்கும்படி உழுது பண்படுத்துதல் வேண்டும்.

1ஏக்கர் கோவா நாற்று பெற 125 கிராம் விதைகள் போதுமானதாகும். மேடை தயாரித்து உக்கிய மாட்டெரு, அல்லது கூட்டெரு போட்டு தொற்று நீக்கம் செய்யப்பட்ட மேடைகளில் வரிசை மூலமோ அல்லது பரவல் முறையிலோ நாற்றுகளைப் போடலாம். நாற்றுக்கள் போட்டு மூன்று நான்கு வாரத்தின் பின் பிடுங்கி நடலாம்.

## நடுகைக்கு

நடுகைக்கு ஏற்ற நிலத்தை தயார்ப்படுத்தும் போது நன்கு உழுது பண்படுத்திய தரையில் 40x50செ.மீ. இடைவெளியில் நடுகையை ஆரம்பிக்கலாம். நாற்றுக்களை நல்லமுறையில் பராமரித்து வளர்க்க வேண்டும்.

## பூச்சிகளும் நோய்களும்

வெட்டுப் புழுக்களின் தாக்கம் காணப்படுமாயின் நடுகைக்கான நாற்றுக்களைத் தொற்று நீக்கம் செய்யவேண்டும். புழுக்கள் நிலத்தில் காணப்படும் பட்சத்தில் புழுக்களை கையால் பொறுக்கி எடுத்துவிடலாம். இலையரி புழுக்கள் டயமண்ட் முதுகு அந்து போன்றவற்றைக்கட்டுப்படுத்த உரிய நாசினிகளை அந்தந்தக் காலங்களில் பயன்படுத்தவேண்டும்.

## கரிய அழுகல்நோய்

கறுப்பழுகல் கோவா, பூக் கொவா போன்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களைப் பீடிக்கும் ஒரு பக்டீரியா நோயாகும். இந்தப் பக்டீரியா "சார்தோமோனாஸ் காம்பெஸ்ரிஸ் என அழைக்கப்படுகிறது.

## நோயின் அறிகுறி

முதலில் கோவா நாற்றின் தண்டில் சிறிய கடுமையான ஓர் நிறமாற்றம் ஏற்படும். இதனைத் தொடர்ந்து இலைகள் மஞ்சள் நிறமாகி இலை ஓரத்து நரம்புகள் கருமையாகி, பயிர் கட்டையாகி வாடும். ஆகவே இளம் நாற்றுக்கள் முதலில் வாடி பின்னர் இறந்து விடுகின்றன. முதிர்ந்த இலைகளில் வடிவமைப்பில் தண்டினை நோக்கி இலை வெளிறிக்காணப்படும். வெளிறிய இலைப்பகுதி மஞ்சள் நிறமாக மாறி கருகி உதிரும். அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சுழற்சி முறைப்பயிர்ச்செய்கை மூலம் பயிரிடவேண்டும். கோவா மஞ்சள் நோயானது நாற்றுமேடைப் பருவம் முதல் அறுவடைவரை எந்தக்காலத்திலும் தோன்றக்கூடும். வளர்ச்சி குன்றல் தாவரத்தின் பக்க இலைகள் மஞ்சள் நிறமடைதல் காய்ந்திருத்தல் போன்ற இந்த நோயின் அறிகுறியாகும். தாக்கப்பட்ட பயிர்களை உடனடியாகப் பிடுங்கி அழிக்க வேண்டும்.

## அறுவடை

பூ உண்டாகி அறுவடை மேற்கொள்வதற்கு 4-5 கிழமைகள் செல்லும். பால்நிறமான இறுக்கமான பூக்களை அறுவடை செய்யலாம். இந்தப் பூக்களுக்கு சந்தையில் நல்ல மதிப்பு உண்டு.

பூக்களில் நேரடியாக சூரிய வெளிச்சம் படும்போது மஞ்சள் நிறமாக மாறும் மஞ்சள் நிறமடையாமல் இருப்பதற்கு பூவிற்குள் கீழுள்ள இலைகளை ஒன்றிணைத்துக்கட்டிவிடலாம். பூக்களை சந்தைப் படுத்துவதற்கு கொண்டுசெல்லும் போது பூக்கள் உதிராமல் இருப்பதற்கு பாதுகாப்பாக இருக்க சில இலைகளுடன் பூக்களை அறுவடை செய்யவேண்டும்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு . . . இந்த ஒடியற்கூழ் மற்றது இதென்ன பசுங்கலவை ?" "அது சலாட் இற்குத் தமிழ். இந்த வெய்யிலுக்கு குளிர்மையானதும், ஆரோக்கியமானதும் கூட ! தக்காளி, கடலை, வெள்ளரிக்காய், பாகற்காய், பூக்கோவா, தயிர் எல்லாம் தாழியம் சேர்த்து மரக்கறிகளோடை கொஞ்ச சோறும் சேர்த்திருக்கு. இந்த பட்டிய லேட்டில பார்த்தால் ஒவ்வொண்டிலையும் இருந்து கிடைக்கிற போசாக்குப்பெறுமானங்களை அறிஞ்சுகொள்ள முடியும்". "தம்பி எல்லாம் நல்லாத் தான் கிடக்கிது. யோசனை இல்லாமல் போசாக்கில்லாத அரைகுறைச் சாப்பாடுகளைப் போட்டு வயித்தை நிரப்பி, எங்கட பெரிசுகளில இருந்து சின்னன்சிறுசுகள் வரைக்கும் குள்ளப்பரம்பரையாகப் போவிடுமோ எண்டு யோசித்துக்கொண்டிருந்த எனக்கு . . "ஆனந்தக்கண்ணீர் வடிஞ்சிது.

பத்து நிமிசத்தில ரெண்டு விசயமும் வந்திச்சிது. நல்ல ருசியாய்த்தான் இருந்திச்சிது. பசி தீர்ந்தாலும், வழக்கமா சாப்பிட்ட உடன வாற பஞ்சிமயக்கம் ஒண்டும் இல்லாமல் கிடந்திச்சிது. "என்ன மாதிரி அப்பு ! சாப்பாடு எப்பிடி இருந்திச்சிது?" அதால போன தம்பி வந்து கேட்டார். "அந்தமாதிரி இருந்திச்சு. எனக்கு சாகிற நேரம் வாய்க்கரிசி போடக்கூடாது. உங்கட கடைச்சாப்பாடு தான் வேணும்". "அப்பிடியெல்லாம் சொல்லாங்கோ ! எங்கட சாப்பாடு உங்களை இன்னும் 10 வருசம் கூட வாழவைக்கும்". "அதெண்டால் உண்மைதான் தம்பி, எண்டைக்கும் இல்லாத மனம் நிறைஞ்ச சந்தோசம் எனக்கு. ஒண்டு மட்டும் எனக்குப் பிடிக்கேல்லை. நல்ல வடிவா எல்லாம் செய்திருக்கிறீயள், கடையின்ரை பேரை மட்டும் ஏன் தமிழில வைக்கேல்லை? ". "ஓமோம் உங்கட ஆதங்கம் விளங்கிது. எங்களுக்கும் தமிழில வைக்கத்தான் விருப்பம். ஆனால் இருந்த தமிழ்ப்பெயர்களை எல்லாம் ஒண்டும் மிச்சம் விடாமல் மற்றக்கடையள் வைச்சிட்டினம். அதுதான் வேறவழியில்லாமல் . .." "தம்பி! மற்றக்கடையள் அவையள் தாங்கள் விக்கிற சாப்பாட் டுக்கேற்ற மாதிரி சிங் சோங் பீக்கிங், ஜேம்ஸ் ரெளண் றெஸ்ரோறன்ற், அல்பேர்ட்டோ இத்தாலியோ, ஷேத்ரி பட்டேல் பொம்பே ஹவுஸ் எண்டேதாவது வைச்சிட்டுப் போகட்டும்". "என்ன இருந்தாலும் சரியில்லை அப்பு. பேரை எண்டாலும் தமிழில வைச்சிருக்க சில கடையள் விரும்பினம் ... " "ம் . . அப்ப 'தாய்மடி' எண்டு வைச்சா எப்பிடியிருக்கும் ? தாயக உணவுகளைத் தரம் குன்றாமல் பெற்றிட தாய்மடி-உணவகம் எண்டால் நல்லா இருக்குமெல்லோ? மற்றது சாதாரணமா வீடுகளுக்கு விருந்துக்குப் போற ஆக்களை விருந்தோம்பிற தமிழ்ப்பண்பு தனித்துவமானது. ஆனால் எங்கட கடை வழியிலை அந்தப் பண்பைக் காண முடியிறேல்லை. இஞ்சை நீங்கள் விருந்தோம்பிற விதம் மனநிறைவைத் தருகிது". "நன்றி! பேர் நல்லாத் தான் இருக்கு. நான் முதலாளி வந்தவுடன கட்டாயம் இதைச் சொல்லுவன். என்னமாதிரி கொஞ்சம் கூழ் இன்னும் விடட்டோ?" "ஓமோம் . . அந்தமாதிரி இருந்தது. ஊத்துங்கோ! நல்லா ஊத்துங்கோ ! யோசிக்க வேண்டாம்! ஊத்துங்கோ!" . . . "சும்மா மூக்கு முட்ட சாப்பிட்டுவிட்டு, திண்ணையில படுத்திருந்து கொண்டு ஊத்தச் சொல்லிப் பிதற்றினால், வாளியோடை தண்ணிதான் வரும் இப்பை..." இருந்தாப்போல கேட்ட புதுக் குரலைக் கேட்டு எழும்பிப் பார்த்தால் வீட்டில படுத்திருக்கிறன். கடைவாயால ஊத்த ஊத்த நல்ல நித்திரை தான் கொண்டிருக்கிறன். அப்பிடியெண்டால் இவ்வளவு நேரமும் கண்டது வெறும் கனவோ???

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாகும்.

இது போன்ற முக்கிய ஆவணங்கள் றோவின் இயக்குனர் பிரதமர் பாதுகாப்புச் செயலர் போன்றவர்களைத் தவிர வேறு எவரது பார்வைக்கும் போகாது. இப்படிப்பட்ட தகவல்களை எல்லாம் அந்த அதிகாரி சி.ஐ.ஏக்கு வழங்கி வந்திருக்கிறார். இவ் விடயம் றோவின் இயக்குனரின் காதுக்கு கசியவே அந்த அதிகாரிமீது சந்தேகப் பார்வை விழுந்தது. உடனடியாகவே அந்த அதிகாரியின் எல்லா போன்களும் ஒட்டுக் கேட்கப்பட்டது. யார் யாரை சந்திக்கின்றார் என்று கண்காணிக்கப்பட்டது. ஆனால் எந்தத் தகவலும் சிக்கவில்லை. அவர் ஏதோ தப்புச் செய்கின்றார் என்பதனை உணர்ந்தது றோவின் மேலிடம்.

உடனடியாகவே ஐ.பி அதிகாரிகளிடம் இந்த நடவடிக்கையினை கையளித்து ஐ.பி (உள் நாட்டு புலனாய்வு சேவை) அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வந்தனர். இவர் முக்கிய தகவல்களை பிரதி எடுப்பதனை வீடியோ படமாக எடுத்து றோவின் இயக்குனர் சகாய்க்கு காண்பித்தார்கள். சகாய் அனைவரையும் வீடு போகும் போது சோதனை செய்யுமாறு பணித்தார். இந்த விடயம் ஏதோ வகையில் முன் கூட்டியே அந்த அதிகாரிக்கு தெரிய வந்து விட்டது. அவர் சாமர்த்தியமாக நடந்து கொண்டார். சோதனை செய்தனர். அவரது காரில் தண்ணீர் போத்தலும் வெற்று சாப்பாட்டு பெட்டியுமே காணப்பட்டது. இயக்குனருக்கு வியப்பானது.

அதிகாரி உடனடியாக தான் ஆபத்தான வலைக்குள் சிக்கிவிட்டேன் என்பதனை உணர்ந் தார். தன்னை தீவிரமாக கண் காணிக்கின்றனர் என்பது அவருக்கு விளங்கிவிடவே தான் எந்த நேரத்திலும் கைது செய்யப் படலாம் என்பதனை உணர்ந்து தப்புவதற்கு திட்டத்தினை தீட்டினார். ஐ.பி அதிகாரிகள் அவரது வீட்டுக்கு முன்னால் கண்காணிப்பில் ஈடுபட்டனர். இதனை உணர்ந்த அதிகாரி தனது மனைவியையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு பின்பக்கமாக உள்ள பாதை வழியாக சென்று தயாராக இருந்த தனது மைத்துனரின் காரில் ஏறி நேபாளத்தின் எல்லைக்கு இரவோடு இரவாகச் சென்றார். இவருக்காக நேபாளத்தின் எல்லையில் காத்து நின்ற சி.ஐ.ஏ உளவாளியினால் அமெரிக்கா செல்வதற்கான பாஸ் போட்டும் விசாவும் வழங்கப் படவே அமெரிக்காவுக்கு தப்பி ஓடிவிட்டார். மறுநாள் இவ் விடயம் தெரியவரவே இந்தியாவின் உளவு நிறுவனம் அதிர்ச்சியில் உறைந்து போய் விட்டது.


தாயின் மடியில்
01-11-1939



இறைவன் அடியில்
27-03-2004

அமரர்
மிக்கேல் செங்கோல்
(செங்கோல் பல்பொருள் வாணிப உரிமையாளர்)
அடம்பன்

முதலாம் ஆண்டு நினைவில்

எங்கள் அன்புத் தெய்வமே.
ஆண்டொன்று போனதோ-உங்கள்
அன்பு முகம் மறைந்து
ஒற்றை மனிதனாய்-நின்று
ஊண் உறக்கம் மறந்து-எம்மை
உயிராய் வளர்த்த எங்கள் குலவிளக்கே!
உங்கள் நினைவினில் உருகி
நிற்கின்றோம் அப்பா
நீங்கள் உடல் மறைந்து, உயிர்துறந்து
போனாலும்
உங்கள் ஆன்மா எம்மோடு அப்பா!
நிம்மதியாய் உறங்குங்கள்.

உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: செ.மெசியாஸ் (மகன்) அடம்பன்.

(சி-11579)



# காலத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்...

**எஸ். ஜெயா**

மனித மேம்பாட்டிற்கும் ஒருமைப் பாட்டிற்கும் அதன் சமூக வாழ்வியலுக்கும் உளநலம் இன்றியமையாத ஒன்று என்பதுடன் உள நலத்தின் ஆரோக்கியமான முன்னகர் வுகளே உடல் நலத்தின் அடிப்படையும் உறுதியானதுமான ஒன்றுதிரண்ட வலுவாகும்.

இத்தகைய ஒன்று கூட்டிய வலுவே சிறந்த உடல் வலுவையும் அதற்கான மிடுக்கான அழகிய தோற்றத்தினையும் மனிதனுக்குக் கொடுக்கும் போது அது அவன் வாழ்வில் புறக்கவர்ச்சியினை உருவாக்கு கின்றது.

இத்தகைய புறக்கவர்ச்சி கொண்ட ஒருவனுக்கு அகக் கவர்ச்சியினைக் கொடுக்கக் கூடிய அன்புள்ளம் கொண்ட புரிந்துணர்வு மிக்க, மனித நேயம் நிறைந்த மன நிலை தேவைப்படுகின்றது.

ஆனால் அகம் - புறம் என்ற இரு கவர்ச்சிகளும் ஒருவரிடம் இணைந்திருப்பது அரிதாகவே காணப்படுவதோடு இவ் இரு பண்புகளும் ஒன்றுடன் ஒன்று இணையும் போது அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிநிலை அடையும் போது குறுக்கீடுகள் தோன்றுகின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அதன் வாழ்வியல் சூழலைப் பொறுத்தமட்டில் உடல் உள வளப் பயன்பாட்டில் அதன் ஆரோக்கியத்தில் பல்வேறு குறுக்கீடுகளும், அதில் காணப்படக்கூடிய இயல்பு ஒவ்வா மையுமே அதிகமாகத் தென்படுகின்றன. இதற்கு பல்வேறு காரணங்கள் பின்புலமாகத் தெரிந்தபோதும் பின் வருவனவற்றை முதன்மைப்படுத்த லாம்.

1. நாட்டில் தோன்றிய தொடர்ச்சியான யுத்த நடவடிக்கைகளும் அமைதி இன்மையும்.

2. நாட்டில் உள்ள பொருளாதார கோட்பாடுகளும் அதன் அரசியல் தளமாற்றமும்.

03. நாட்டில் இனங்காணப்பட்டுள்ள பொருத்த ம்ற்ற கல்விக்கொள்கையும் நாட்டுப் பற்றின்மையும்

04 சுனாமி பேரழிவும் இயற்கை அனர்த் தங்களும்.

05. சிறந்த உளநிலை (அகநிலை) ஆய்வுகளும் அதன் தீர்வுகளும் உறுதிப்படுத் தப்படாமை.

இத்தகைய நிலையிலும் சிறந்த உள வலுக் கொண்ட சமூகம் ஒன்று உருப் பெற பல்வேறு காரணிகள் பக்க பலமாக இருந்தபோதும் அண்மைக் காலத்தில் சுனாமியால் ஏற்பட்ட இயற்கை பேரழிவே எல்லோரையும் ஒட்டு மொத்தமாக உள நலம் பற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது போல் தெரிகின்றது.

இயற்கை (சுனாமி) அழிவுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கரையோரவாழ் மக்களாக இருப்பதனால் உள நலப் பணிகளும் அவர்களை மையமாக வைத்தே நகர்த்தப்படுகின்றன. ஆனால் இப்பாதிப்பானது இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் உள நிலை சார்பாகப் பாதித்துள்ளது என்பதே உண்மையானதாகும்.

இதனால் உள நலப் பணிகள் நாட்டின் கரையோரப் பகுதிகளிலிருந்து படிப்படியாக ஏனைய பகுதிகள் நோக்கி நகர்த்தப்படுவதே சிறந்ததும் பொருத்தமானது மான முடிவாகும்.

இதனால் தான் உள நலம் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் உரியதல்ல அவை தொடர்ச்சியாக நீட்சிய டைந்து சமூகங்களிடையே பரவல் அடைய வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பணிகளின் போது பல்வேறு குறுக்கீடுகளைச் சந்திக்க வேண்டிய இடர்பாடுகளும் உண்டு. அத்தோடு மனித வாழ்வியலில் தோன்றுகின்ற குறுக்கீடுகளே பல்வேறு பரிமானங்களில் வளர்ச்சி கண்டு உள நிலைத் தடுமாற்றங்களை உண்டு பண்ணி விடுகின்றன.

இவை பணம், பொருள், அழிவு, அமைதியின்மை, வெற்றி, தோல்வி, பாலியல் தேவையென நீண்டு கொண்டே செல்கின்றன. இத்தகைய தேவைகளில், மனிதனுக்கு வேண்டிய ஒவ்வொரு தேவைகளும் அவ னுக்கு ஆளுக்காள் வேறுபடலாம். இத்தகைய வேறுபாட்டு விகிதங்கள் அவனுக்கு நிறைவு செய்யப்படாத போது அவை இழப்பாகக் கருதி உள நிலை மாற்றத்திற்கு ஆட்படுகின்றான்.

இத்தகைய பிரச்சினைகளால் குடும்பங்களிடையே ஏற்படும் விரிசலானது படிப்படியாக விரிவுகண்டு சமூகத்தினைச் சென்றடைகின்றது. இவை காலப் போக்கில் குழுக்கள் அல்லது கட்சிகளாக மாற்றங் காண்பதோடு சமூக அமைதியின்மையை ஏற்படுத்தி வன்முறைக்களங்களை உருவாக்கி விடுகின்றன.

இவை காலப் போக்கில் ஒரு நாட்டின் எதிர்காலத்தினையே கேள்விக் குறியாக்கி விடலாம். இதற்கு சிறந்த உதாரணமாக ஈராக் நாட்டினைக் குறிப்பிடலாம். இதே போன்றே இலங்கையும் ஒரு பொறி நிலைக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இப்படிப்பட்ட ஒரு நிலை தோன்ற என்ன காரணம்? இதன் உள நிலைக் குறுக்கீடுகள் தான் என்ன? இவை அதிகார வலுப் போட்டியால் ஏற்பட்ட பின்விளைவுகளா? என்பனவே திருத்தமாக விடைகாணப்பட வேண்டிய வினாக்களாகும் இது முடியுமா? என்பதே அடுத்த வினாவாகும்.

ஏனெனில் இவை காலங்காலமாக ஈடு செய்யப்படாது வளர்ந்து விட்ட பிரச்சினை என்பதுடன் பொருளாதார ரீதியான உளத் தேவையுடன் முக்கியமாகப் போட்டியிட வேண்டிய தொன்றாகும். இத்தகைய பிரச்சினைகளை மூளைச் சலவை மூலம் அரும்பிலே கிள்ளி எறிவது உளப் பணிகள் மூலமே முடியும்.

ஆனால், இவை இன்று அறுகம்புல் போல் பல இடமும் பற்றிப் படர்ந்து ஆலமரம் போன்று உறுதியாக வளர்ந்து விட்டது போல் தெரிகிறது. இவை இனவாதம், படுகொலை, வன்முறை, களவு எனத் தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஆனால் இவற்றினை இப்படியே விட்டுவிட முடியாததொன்றாகும்.

இதற்காக இவர்களை முதலில் பின்வருமாறு வகைப்படுத்தி உளப்பணி ஆய்வுகளையும் அதன் முடிவுகளையும் தெரிந்து சிகிச்சை அளித்தல் வேண்டும்.

1.சிறுவர்கள்

2.இளைஞர்கள்

3.முதியவர்கள்

இவ்வாறு பெரும்படியாக்கம் செய்யப் பட்ட இப்பகுதியினரிடையே குறுக்கீடுகளை ஆராய்ந்து மேலும் அவர்களின் தேவை தெரிவு என்பவற்றுக்கு ஏற்ப சிறுபடியாக்கம் மேற் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு மேற் கொண்டு போகையில் இவர்கள் சிறு குழுக் களாக ஒன்று சேர்த்து அவர்களின் தேவை களை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும்.

இன்று கொலைக் குற்றவாழிகளும் பாதாள உலக கும்பல்களும் திருடர்களும் பெருகவழி அமைத்துக்கொடுத்ததில் உள நிலைக் குறுக்கீடுகளும் ஒரு காரணம் இதனை உரியகாலத்தில் இனங்கண்டு தகுந்த சிகிச்சை முறைகள் மேற்கொண்டால் இத்தகைய நிலை நாட்டில் ஏற்படுவதை பெரிதும் குறைக்கலாம்.

நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான யுத்தம் அதனால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரம் இந்நிலைமையால் வேலையற்றோர் படை கிடுகிடுவென அதிகரித்தமை போன்றவையும் சுய தொழிலை ஊக்குவிக்கக் கூடிய கல்விமேம்பாடோ அல்லது பொருத்தமான கல்விக் கொள்கையோ இடம்பெறாமை என்பனவும் ஒன்றுகூடி நாட்டு மக்களின் வாழ்வில் பல நிலைக்கு குறுக்கீடுகளாக தோற்றம் பெறலாயின.

இவை காலப்போக்கில் குடும்ப உறவுகள் மற்றும் உறுப்பினர்களிடையே விரிசல் போக்கினை ஏற்படுத்தி தவறான வழிநடத்தலுக்கு இட்டுச் சென்றன. இவையே காலப் போக்கில் வளர்ச்சி கண்டு இன்றைய நாட்டு நிலைமை யினை உருவாக்கியுள்ளன. அதாவது ஒரு குடும்பம் சார்பாக பின் வரும் நிலைகள் அதன் வாழ்வியல் சூழலில் குறுக்கீடுகளை ஏற்ப டுத்தியுள்ளன.

1. யுத்த அல்லது இயற்கை அனர்த்த நிலைமையால் இடம் பெயர்ந்தமை அல்லது உயிர் இழப்புக்களை சந்தித்தமை.

2. பொருளாதார வறுமை, வேலை வாய்ப்பின்மை.

3. வெளிநாட்டு மோகமும் அதன் வருவாயும், இழப்புக்களும்.

4. கிராம நகர வாழ்வியலுக்கிடையிலான முரண்பாடுகளும் ஈடுசெய்ய முடியாத்தன்மை யும்.

5. நவீன தகவல் தொழில் நுட்ப உலகோடு போட்டியிட வேண்டி ஒரு கட்டாய தேவை ஏற்பட்டமை.

இவைகள் எல்லாவற்றினையும் எல்லாக் குடும்பங்களாலும் உள்வாங்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாத்தன்மை ஒன்று தோன்றியமை. இதன் தாக்க விளைவுகள் படிப்படியாக குடும்பங்கள் மத்தியில் தென்படத் தொடங்கி அவை பின் தவறான பாதைகளில் நகர்ந்து செல்ல முற்பட்டன.

இவை காலத்தின் தேவையும் அதனால் எழுந்த தேடலுமாக காரணம் தெரியாது நகர்த்தப்பட்டமையால் இதன் புரிதலில் தவறுகள் நியாயப்பாடுகளாக பின்பற்று வோர் அணியில் வலுவாக்கப்பட்டது. எனவே தான் இன்று ஏற்பட்ட பாதிப்பு நாளை எமது சமூகத்தினை"பதர்கள்" போன்று ஆக்கி விடக்கூடாது இதற்காக நாம் எல்லோரும் "முடி யும்" என்ற முனைப்புடன் செயல்பட வேண்டும்.

வீட்டில் விளக்கு அணைந்தால்
வீடே இருண்டு விடும்
வீதியில் விளக்கு அணைந்தால்
வீதியே இருண்டு போய் விடும்
வானத்தில் சூரியன் மறைந்தால் நாடே இருண்டு விடும்.

இது ரசித்துப் பிடித்த கவிதை. ஆனால் இது சிறந்த உளத்தத்துவம், இதன் மூலம் உங்கள் உள நலத்தினை ஆற்றுப் படுத்த முடியும்.



## நெஞ்சு... பொறுக்குதில்லை...!

கிளிநொச்சியிலுள்ள பிரபல தொழில் அலுவலகம் ஒன்றில் அந்த யுவதி பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

தனது வீட்டில் இருந்து வேலைத் தளத் திற்கு தினமும் துவிச்சக்கரவண்டியில் போய் வரு வார். பெரும்பாலும் அவர் அவருடன் பணிபுரியும் ஏனையோருடன் சேர்ந்தே பணிக்குச் சென்று வருபவர்.

அன்றைய தினம் யுவதியுடன் பணிக்கு வரும் ஏனையவர்கள் பணிக்கு வரவில்லை. இவர் தனியாகத் துவிச்சக்கரவண்டியில் கிளிநொச்சி நகரப்பகுதியில் இருக்கும் அந்த வீதியால் வந்து கொண்டிருந்தார்.

சமாதானம் ஏற்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் மிகமுக்கியமான வீதியாகவும் பெருமளவானோர் பயணம்செய்யும் வீதியாகவும் இருக்கும் அந்த குறிப்பிட்ட வீதி மிகவும் குன்றும் குழியுமாகவும் அங்காங்கே மணல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

பெரும் சிரமங்களின் மத்தியிலேயே இவ் வீதியால் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போரும் ஏனைய வாகனங்களில் பயணிப்போரும் பயணங் களை மேற்கொள்ள வேண்டும்.

போக்குவரவின் போது மிகமிகக் கவனமாக அப்பாதையூடாகப் பயணம் செய்யாது விட்டால் மறுகணம் வைத் தியசாலைக்குச் செல்வது உறுதி. அன்றைய தினமும் இவர் அப்பாதை யூடாகத் தனியாக வரும் போது மிகவும் அவதான மாகவும் எச்சரிக்கையு டனும் துவிச்சக்கரவண் டியைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென இவருக்குப் பின்னால் இருந்து வந்த உந்துருளி இவரது துவிச்சக்கர வண்டியின் கைபிடிப்பகுதியில் பலமாக அடித்துத் தள்ளியது. அந்த யுவதி நிலை தடுமாறி அருகில் இருந்த பள்ளத்தில் வீழ்ந்து விட்டார்.

ஆனால் பிழை யாரில் ஏற்பட்டிருக்கும் என்று அவா ஊகிப்பதற்கிடையில் அந்த உந்துருளியில் வந்த இரண்டு இளைஞர்களும் இவரைத் திரும் பிப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டு சென்றனர்.

அந்த விபத்து நடந்த கணம் அப் பகுதியில் வீதியால் யாருமே வரவில்லை. உதவிசெய்ய வேண்டியவர்களே உபத்திரவத்தை ஏற்படுத்தி விட்டு சாதாரணமாகச் சென்றுகொண்டிருந்தனர்.

இவர் விபத்தினால் ஏற்பட்ட வேதனையையும் தாங்கிக் கொண்டு துவிச்சக்கரவண்டியில் உடைந்த பகுதிகளையும் சரிசெய்துகொண்டு தனது பயணத்தை தொடர்ந்தார்.

விபத்து நடந்த இடத்தைப் பார்க்கும் போது விபத்து நடப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. வீதியால் தனது பக்கத்தாலேயே அவர் சென்று கொண்டிருந்தார். இவருக்குப் பின்னாலிருந்து பேருந்து வந்திருந்தால் கூட இவரை விலக்கிச் செல்வதற்குப் போதுமான இடவசதி இருந்தது. அத்துடன் பின்னால் இருந்து வந்தவர்கள் தாம் இவரை முந்திச் செல்வதற்காக ஆகக் குறைந்த சமிக்ஞைகளான அலாரம் கூடச் செய்யவில்லை. அப்படி அலாரம் செய்திருந்தால் கூட அந்த யுவதி மேலும் வழிவிட்டுக் கொடுத்திருப்பார்.

ஆக இந்த விபத்து பொழுதுபோக்கிற்காகவும். ஏனைவர்களைச் சீண்டும் நோக்குடனும் நடத்தப் பட்டுள்ளது. "பூனைக்கு விளையாட்டு சுண் டெலிக்குச் சீவன் போகின்றது" என்பதுபோல இவர்களின் பகிடி விளையாட்டு மற்றவர்களை எவ்வளவு தூரம் உடல் உளப் பாதிப்பிற்குள்ளாக் கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால் இவ்வளவுக்கும் இடையில் அந்த உந்துருளியில் வந்த இளைஞர்களின் வீடு இருக்குமிடம் அந்த யுவதிக்குத் தெரியும். அந்த வீட்டுக்குச் சென்று அவர்களது தாயாரிடமோ அல்லது பெரியவர்களிடமோ முறையிடுவோம் என நினைத்தார். ஆயினும் அவர் அவ்வாறு முறை யிடாதுசென்று விட்டார்.

"திருடனாய்ப்பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பது போல அவர் களாலேயே புரிந்துகொண்டு திருந்தி நடந்தாலேயே தவிர அவர்களைத் திருத்த முடியாது. ஆனாலும் அவர்கள் திருந்தி நல்ல மனிதர்களாக மற்றவர் களுக்கு இடையூறற்றவர்களாக இருப்பார்கள் என்று நம்புவோமாக.

- சிவியா




## அத்தியாயம்- 07

### பகுதி -40

ஒலிநாடா மீள சுற்றுவிக்கப்பட்டிருந்தது. டிப்ஸ் அப்போது கூறியவை இருந்த பகுதிகள் ஒலிப்பதை நாங்கள் அவதானமாகக் கேட்டோம். "என்னமாதிரியான பிள்ளை இவன்" என்று அவதானிப்பாளர்களில் ஒருவர் சொன்னார்.

என்ன ஒரு யதார்த்தமான உளப்பதிவு என்று நான் அதைக் கேட்டு எண்ணிக் கொண்டேன்.

"விறைச்சுப் போய் நேராய் நிற்கிறீங்கள்.... பழைய வேலியில குத்திக்கொண்டு நிற்கிற தண்டவாளம் மாதிரித்தான் நீங்கள்'' இப்படித்தான் டிப்ஸ் சொல்லியிருந்தான். "அப்பாவை இன்னும் ஒரு வாரத்துக்கு மணலில் புதைத்து வைத்திருக்கவேண்டும் என்று எனக்கே தோன்றியது. அந்த பிள்ளை சொல்வதை அந்த மனிதன் பொறுமையாகக் கேட்டிருக்கவில்லை. டிப்ஸ் அவரோடு உரையாடத்தான் முயன்றான். ஆனால் அவரோ அவற்றை விசர்த்தனமான கதைகள் என்று ஒதுக்கித் தள்ளியிருந்தார். தனது ஆளுமை மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான தாக்குதல்களை மீறி, அவனுடையதைப் போன்ற பயன்விளைவுள்ள ஆளுமையைப் பேணுவதற்கு, பிரமாண்டமான அளவிலான அக வலுவை டிப்ஸ் கொண்டிருக்கவேண்டும்.


பெற்றோர்கள் செய்யும் செயல்களுக்கும் காரணங்கள் இருக்கக்கூடும் என திடமாக மனதில் இருத்திக் கொள்வது சில சமயங்களிலே கடினமானதாக இருக்கும். தங்கள் பிள்ளைகளை நேசிக்க, அவர்களைப் புரிந்துகொள்ள, அல்லது தங்களை அவர்களுக்கென அர்ப்பணிக்க அவர்களுக்கிருக்கும் இயலாமைக்கான காரணங்கள், அவர்களது ஆளுமைகளின் ஆழங்களிலே புதையுண்டிருக்கலாம்.

## அத்தியாயம்- 08

அடுத்த நாள் காலையில், டிப்ஸ்ஸின் தாயிடமிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என்னை சந்திப்பதற்கு தனக்கு ஒரு நேரம் ஒதுக்கித்தரமுடியுமா என்று அவர் கேட்டார். இந்த வேண்டுகோளை விடுத்த அவரின் குரலில் மன்னிப்புக் கேட்கும் தொனியொன்று கலந்திருந்தது. எனக்கு வசதியில்லாவிட்டால் தன்னால் அதை புரிந்துகொள்ள முடியும் என்று அவசர அவசரமாக சேர்த்துச் சொன்னார். நான் எனது நாட்காட்டியைப் பார்த்துவிட்டு சாத்தியமான பல வேளைகளை அவருக்குச் சொன்னேன். அன்று காலையில் அல்லது மாலையில் அல்லது திங்கள், செவ்வாய், புதன் மாலைகள் என்று அவை அமைந்திருந்தன. அவருடைய தெரிவை மேற்கொள்வதற்கு வசதியாக பல நேரங்களை நான் கொடுத்திருந்தேன். அவர் சிறிது தயங்கினார். பின் எனக்கு எந்த நேரம் வசதியாக இருக்கும் என்று கேட்டுவிட்டு என்னையே ஒரு நேரத்தை கூறும்படி கேட்டுக்கொண்டார். எனக்கு எந்த நேரமும் ஒரே மாதிரியானவைதான் என்று கூறினேன். என்னைப் பொறுத்தவரை எந்த நேரம் அவருக்கு வசதியாக இருக்குமோ அந்த நேரத்திலேயே சந்திக்கலாம் என்று நான் சொன்னேன். நான் குறிப்பிட்ட வேளைகளில் எல்லாம் நான் மையத்தில் இருப்பேன் என்பதால் அவருக்கு விருப்பமான நேரம் ஒன்றை தெரிவு செய்யும்படி கூறினேன். மீண்டும் அவர் தயங்குவதை உணர்ந்தேன். பிறகு குறிப்பிடத்தக்களவு நேரம் யோசித்த பின் அவர் தனது முடிவைத் தெரிவித்தார்.

" இன்று காலை பத்து மணிக்கே வருகிறேன்." என்றவர் மீண்டும், " உங்களுக்கு எனது நன்றி. உங்களுடைய இந்த உதவியை நான் மறக்கமாட்டேன்'' என்றார்.

என்னை சந்திக்கும்படி கேட்க அவரை எது தூண்டியிருக்கலாம் என்று யோசித்தேன். டிப்ஸ் குறித்து அவள் மகிழ்ச்சியடைந்திருக்கிறாளா அல்லது.... அதிருப்தியுற்றிருக்



கிறாளா? முந்த நாள் டிபஸை அழைத்துச் செல்ல அவர் மையத்துக்கு வந்திருந்த குறுகிய நேரம் குறித்த பாதகமான எதிர்வினையை அவரது கணவர் காட்டினாரோ? இன்னும் ஒருமணித்தியாலத்துக்குள் அவர் மையத்துக்கு வந்துவிடுவார். சில வேளை.... அவர் வந்த பின் நிலைமை என்ன என்பது பற்றி சிறிது அதிகமாக அறிந்துகொள்ள முடியும்.

இவ்வாறான ஒரு சந்திப்பு எப்படிப் போகும் என்று எதிர்வு கூறுவது கடினமானதாக இருக்கும். அந்தத் தாய் இறுகிக்கொண்டு, முன்பு சொன்னதைவிட ஆழமாக எதையும் சொல்ல முடியாமல் போகலாம். ஆனால் அவள் அதில் ஒரு பகுதியையாவது யாருடனாவது பகிர்ந்து கொள்ள விரும்பும் அளவுக்கு அவளில் மகிழ்ச்சியின்மை,விரக்தி, சுயநிறைவில்லாமை உணர்வு மற்றும் தோல்வி முதலியவை நிறைந்திருக்கலாம். இந்தச் சந்திப்பின் போது அவளுக்கு விடுக்கப்படக் கூடிய அச்சுறுத்தல்களை முடிந்தளவுக்குக் குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ள முயல்வதும் அந்தரங்கங்கள் பாதுகாக்கப்படும் என்ற உணர்வை அவளுக்கு பெற்றுத் தருவதற்கு முயற்சி செய்வதும் மிக மிக முக்கியமானதாகும். எனக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது.அவர் இந்தச் சந்திப்பை எப்படிப் பயன்படுத்தப் போகிறார் என்பது.... மௌனமாக இருந்தோ....பாதுகாப்பான பொருத்தமில்லாத விடயங்களைப் பற்றிக் கதைத்துக்




கொண்டோ அல்லது கேள்விகளை கேட்டுக் கொண்டோ அல்லது தான் நெருக்கமாக பாதுகாக்கும் தனது சொந்தக் கதையில் சிறிதளவை வெளியிட்டுக்கொண்டு என எப்படிப் பயன்படுத்தினாலும் இந்தச் சந்திப்பானது அந்தத் தாய்க்கு மிகவும் கடினமானதும் உணர்வு ரீதியாகக் களைப்பூட்டுவதுமாக இருக்கப்போகிறது. அவளுடைய பிரத்தியேகமான தனிப்பட்ட உலகானது அவளுக்குத்தான் சொந்தம் என்பதையும், அதனுடைய பூட்டுகளைத் திறந்து அதில் ஒரு பகுதியை என்னுடன் பகிர்ந்து கொள்ளும் முடிவை அவள் தான் எடுக்கமுடியும் என்பதையும் முதலில் எனது மனப் போக்குகள் மற்றும் தனிப்பட்ட தத்துவங்கள் மூலம் என்னால் முடிந்தளவுக்கு பயன் விளைவோடு அவளுக்கு உணர்விப்பது எனது பொறுப்பாக இருக்கப் போகிறது. என்னுடன் பகிர்ந்து கொள்ளும் முடிவை அவள் எடுத்தால், உளவியல் ரீதியாக அவள் மீது பாய்ந்து விழுந்து அவள் தானே விரும்பி முன்வந்தும் இன்னொருவருடன் தனது அக உலகை பகிர்ந்து கொள்வதற்கான தனது இயலுமையில் நம்பிக்கையுட்னும் தெரிவிக்காத எதையும் நான் இழுத்தெடுக்கப் போவதில்லை. அவள் அந்தக் கதவைத் திறப்பதில்லை என்று முடிவுசெய்தால் உள்நோக்குடன் துருவி ஆராய்ந்து அதனை வலிந்து திறக்கும் வேலையை நான் செய்யப் போவதில்லை. குறைந்த பட்சம் அந்தக் கதவில் தட்டுவதைக்கூடச் செய்யப்போவதில்லை. அவள்டிப்ஸைப் பற்றியோ அல்லது தன்னைப் பற்றியோ அவள் சொல்லக்கூடியவற்றைக் கேட்பது ஆர்வமூட்டுவதாகத்தான் இருக்கும். ஆனால் தான் ஒரு மகிமையான நபர், தனது ஆழமான தனிப்பட்ட வாழ்க்கையின் மீது முழுமையான உரிமை கொண்ட தனி நபர் என்ற வகையில் தான் மதிக்கப்படுகிறேன்; ஏற்றுக்கொள்ளப்படுகிறேன் என்ற உணர்வுகளை அவளுக்கு ஏற்படுத்துவது அதைவிட முக்கியமானதாக இருந்தது.

குறித்த நேரத்துக்கு அவள் மையத்துக்கு வந்து சேர்ந்தாள். உடனடியாகவே எனது அலுவலகத்துக்குள் இருவரும் சென்றோம். வரவேற்பறையில் காத்துக்கொண்டிருப்பது தனக்கு மிகவும் அசௌகரியமாக இருக்கும் என்பதை அவள் முன்கூட்டியே தெரிவித்திருந்தாள். குறித்த நேரத்துக்கு அவள் சந்திப்புக்கு வந்துவிட்டதால், அவசியமில்லாமல் அவளைக் காத்திருக்க வைப்பதை விட்டு, உடனடியாகவே அவளை சந்திப்பது முக்கியமானது என்று தோன்றியது.

எனது மேசைக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் என்னைப் பார்த்தபடி அமர்ந்து கொண்டாள். மிகவும் வெளிறிப்போயிருந்தாள். அவளது கைகள் இறுகக் கோர்க்கப்பட்டிருந்தன. விளையாட்டறையின் முதன் முதலாக நான் டிப்ஸைக் கண்டபோது அவன் செய்தது போல், அவளது கண்கள் என்னைப் பார்ப்பதும் உடனடியாக வேறு எங்காவது பார்ப்பதுமாக அலை பாய்ந்தன.

நான் அவளுக்கு ஒரு சிகரெட்டை நீட்டினேன். "வேண்டாம். நன்றி " என்றாள். நான் சிகரெட் பக்கெட்டை மேசை மீது வைத்து விட்டேன். அவள் அதை நோக்கி கைகளைக் காட்டிக்கொண்டே," நான் புகைப்பதில்லை நீங்கள் விரும்பினால் தயவுசெய்து புகையுங்கள்" ''நானும் புகைப்பதில்லை'' என்று நான் கூறினேன். அந்த சிகரெட் பக்கட்டை மேசை லாச்சியினுள் போட்டுவிட்டேன். அந்த முதல் சில நிமிடங்களில் ஏற்பட்டுவிட்ட அழுத்தத்தை தணிப்பதற்காகவே அப்படிச் செய்தேன். வேறு நோக்கம் எதுவும் இருக்கவில்லை. மிக ஆறுதலாக அதைச் செய்தேன். பின்பு அவளைப் பார்த்தேன். அவளுடைய் கண்களில் ஏக்க உணர்வும் பீதியும் தெரிந்தன. அவளுடைய பிரச்சினைகளைப் பற்றிய எந்தவொரு கலந்துரையாடலுக்குள்ளும் அவளை வலிந்து தள்ளாமல் இருப்பது முக்கியமானதா இருந்தது. கேள்விகளைக் கேட்பதன் மூலம் (வழிநடத்தாமல் ) இருப்பது முக்கியமானதாக இருந்தது. அற்ப விடயங்களைப் பற்றி ஆராயும் கலந்துரையாடலாக இந்த அமர்வை மாற்றாமலிருப்பது முக்கியமானதாக இருந்தது. இதில் ஏதாவதொன்றை அவளே செய்ய விரும்பினாள் அது முழுமையாகவே வேறு விடயமாக இருக்கும். நான் அதைச் செய்ய முனைவதென்பது இந்த சந்திப்பினுடைய நோக்கத்தை முறியடிப்பதாக இருக்கும். இந்தச் சந்திப்பை அவள்தான் கோரியிருந்தாள். அப்படிச் செய்வதற்கு ஏதோ ஒரு காரணம் இருந்தது. இந்தச் சந்திப்புக்கு வரும்படி நான் கேட்டிருந்தால் இந்த நேர்காணலை நகர்த்தும் பொறுப்பு என்னுடையதாக இருந்திருக்கும்.

(தொடரும்....)

---

(17பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த கோவூரின் தாயாரும், விஹார் ஜென்ரலின் மனைவி என்ற முறையில் மிகமிகப் புனிதமானவராக மதிக்கப்பட்டார். இதனால் இவர் இறந்தவுடன் சிறியன் கிறிஸ்தவர்கள் அவரை தெய்வீகம் கொண்ட புனிதமானவர் என்ற நம்பிக்கையில் இறுதிக் கிரியைகளை செய்தனர்.

இது இப்படியிருக்க தேவர்கள் சொர்க்கத்திற்குக் கொண்டு செல்லப்படுவார்கள் என்றும், தீயவர்கள் சாத்தான்களால் நகரத்துக்குக் கொண்டுசெல்லப்படுவார்கள் என்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் போதிக்கப்படுவது வழக்கம்.

ஆனுக்கும் குழந்தைப் பிராயம் முதல் இதுவே போதிக்கப் பட்டிருந்தது.

புனிதமான தனது பாட்டி தேவதைகளால் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார் என்ற தீவிரமான நம்பிக்கையும், கல்சியம் குறைவு காரணமாக ஏற்பட்டிருந்த 'பரதை றொஸ்ட் கிளான்சும் ' ஆனுக்கு இக் காட்சிகளைத் தோற்றிவித்தன.

இந்த உண்மைகளை கோவூர் உணர்ந்த பின்னர் ஆனுக்கு கல்சியம் மருந்து ஊசிகளைச் செலுத்தி வந்தார்.

இருவார கல்சிய சிகிச்சைக்குப் பின்பு 'ஆன்' வானத்தை நோக்கும் போது எந்த ஆவியுமே தென்படவில்லை. இதுவே கோவூர் தெரிவித்த கருத்துக்கள்.

இவ்வாறு பல்வேறு உண்மைச் சம்பவங்கள் மூலம் பல்வேறு விடயங்களை கோவூர் வெளிப்படுத்துகின்றார்.

உண்மையில் எல்லாப் பலங்களையும் விட ஒவ்வொரு மனிதனும் அறிவியல் ரீதியாக பலம் பெற வேண்டும். பிறர் சொல்லும் கருத்துக்களை அல்லது தாம் காணும் காட்சிகளை அப்படியே உள்வாங்கி குழம்பிப் போகாமல் அவற்றினைச் சரியாகப் புரிந்து பகுத்தறிந்து உண்மைத் தன்மையை அறிந்து தெளிவு பெற வேண்டும். அதனையே "மனக் கோலம்" வெளிப்படுத்துகின்றது.

---

(12பக்கத் தொடர்ச்சி)

அந்த மிச்சப் பலகாரங்களைக்கூட அலை கொண்டு போட்டுது. சிலவேளையில நத்தார் பலகாரங்கள் வீட்டில இருந்தா அதையும் றெக்சி கொண்டுவருவா. அதைத் திண்டு கொண்டு கதைக்கலாம். முதல் நாள் எண்டதால பாடங்களும் பெரிசா நடக்காது. எப்ப நித்திரையாய் போனன் எண்டு தெரிலேல்லை அம்மா எழுப்பேக்கதான் நல்லா விடிஞ்சிட்டு தெண்டு விளங்கிச்சு. பட.படவெண்டு குளிச்சுப்போட்டு. வெள்ளைச் சட்டையை போட்டுக்கொண்டு வந்தன்.

அம்மா தலையைச் சீவி. பவுடர் போட்டு. வடிவா நடுநெத்தியில பொட்டு வைச்சுவிட்டா. பிறகு இடியப்பமும் சொதியும் குழைச்சுத் தீத்திவிட்டா.

சாப்பிட்டு முடிய அப்பா சைக்கிளோட ஆயித்தமாய் நிண்டார். ஓடிப்போய் நான் ஏறியிருக்க அப்பா உழக்கத்துடங்கினார். பள்ளிக்கூடம் வந்திட்டுது. அலை பள்ளிக்கூடப்பக்கம் வரேலை! ஒரு சேதமுமில்லாமல் கிடந்திச்சுது.

என்னைப் பிறகு ஏத்தவாறதெண்டிட்டு அப்பா போட்டார். நான் வகுப்புக்குள்ள போனன் எல்லாரும் என்னைக் கண்ட சந்தோசத்தில சிரிச்சினம். என்னமாதிரி அவையின்ர முகத்திலையும் ஒரு கவலை தெரிஞ்சமாதிரி கிடந்துது. நானும் சிரிச்சன்.

றெக்சியைத் தேடினன் காணேலை! அவையின்ர வீடு தூரத்தானே. கொஞ்சம் பிந்தித்தான் வருவா.

'பிறேயர்' முடிஞ்சு வகுப்புக்குள்ள வந்திருந்தம்.

எங்கட பழைய கிளாஸ் ரீச்சர்தான் இந்தமுறையும்! வந்தவுடன டாப்புப் பதியத்துவங்கினா.

ஒவ்வொரு பேராக் கூப்பிட்டுக் கொண்டு வந்தா. என்ர முறை வந்தது.

"சௌமியா"

"பிறசன்ட் ரீச்சர்"

அடுத்து றெக்சியின்ர முறை

ஆனா றெக்சியின்ர பேரை ரீச்சர் கூப்பிடேலை. றெக்சியும் வரேலை!

கிளாஸ் முடிஞ்சவுடன ரீச்சரிட்டப் போனன்.

"என்ன சௌமியா"

ரீச்சர் நீங்கள் றெக்சியின்ர பேரை கூப்பிட மறந்திட்டியள். அவா இண்டைக்கு அப்சென்ற்!"

ரீச்சர் என்னை ஒரு மாதிரி பாத்தா அவான்ர கண்கலங்கிற மாதிரிக் கிடந்திது. ரீச்சரும் அழுவாவோ! எனக்கு இதுவும் ஒரு புது விசயமாத் தெரிஞ்சுது. இதையும் றெக்சியிட்ட சொல்லோணும்.

"சௌமி! றெக்சி அலையில இழுபட்டு..." ரீச்சரால கதைக்கேலாமல் போட்டுது. அவா போட்டா.

ரீச்சருக்கு ஒண்டுந்தெரியாது படிப்பிக்கிறது மட்டும்தான் அவாக்குத் தெரியும்.

றெக்சியின்ர வீட்டை அலைகொண்டு போகாது. அவையின்ர வீட்டுக்குக் கிட்ட கடல் இருந்தாலும் அவை வேற ஊர் அதோட அவையின்ர சுத்துமதில் உயரமாக் கட்டின வீடு.


"எங்களை ஆண்டவர் காப்பாத்துவார்'' எண்டு றெக்சி அடிக்கடி சொல்லி அவையின்ர கடவுளைக் கும்பிடுவா. அலை வந்திருந்தாலும் என்னை எங்கட கடவுள் காப்பாத்தின மாதிரி அவாவை அவையின்ர கடவுள் காப்பாத்தியிருப்பார். பிறகென்னெண்டு அவாவை அலை கொண்டு போகேலும்?

பாவம்! ரீச்சருக்கு இதொண்டுந்தெரியாது போல. நான் அண்டைக்கு நடந்ததை மனசுக்க ஒருக்காச் சொல்லிப்பார்தான். சரிய இருந்திது.

நாளைக்கு றெக்சி வந்தவுடன கட்டாயம் சொல்லவேணும். அடுத்த நாளுக் காண்டி றெக்சிக்காண்டி காத்திருக்கத் துவங்கினன். மணிக்கூட்டைப் பாத்தன் காலமை 10 மணி அடுத்தநாள் வாறதுக்கு கன நேரமிருக்குது. ச்சீய்க்! இந்த நேரம் இண்டைக்கெண்டுமெல்ல ஓடுது.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



*பாவலா!*

*மன்னிக்கமுடியாதது?*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்.*

இனத்துரோகத்தை- தேசத்துரோகத்தை- சாதிவெறியை, மதவெறியை... இவையனைத்தும் மனிதத்தை குழிதோண்டிப் புதைப்பவை!

*பாவலா!*

*இலங்கையின் தற்போதைய கல்வித்திட்டம் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*சுபாசினி,*
*புதுக்குடியிருப்பு.*

நாட்டின் எதிர்காலத்தை, மனிதகுல முன்னேற்றத்தை கருத்தில் கொண்டதாக இல்லை... தனிமனித வளர்ச்சிக்கு வழிகாட்டுவதாகவே உள்ளது.

*பாவலா!*

*பல நாடுகளில் பலவாறாக வரி அறவிடுகின்றார்கள். ஆனால் எமது பகுதியில் நம்பிக்கையோடும் பாதுகாப்போடும் சரிவரச் செய்கின்றனர். இதனைப் பற்றி அறியாதவர்களுக்கு பிளீஸ் உமது கருத்து?*

*ஆ.லூசியாமேரி,*
*புளியங்குளம்.*

இது தேசத்திற்கான வரி- அது அரசுக்கான வரி என்பதை அறியாதோர்.

*பாவலா!*

*சனாதிபதி இனப்பிரச்சினையைவிட தனது பிரச்சினையை தீர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றார்.*

*சதீஸ்குமார்,*
*வட்டக்கச்சி.*

தனது பதவியைக் காப்பாற்றுவதே பெரிய பிரச்சினையாக இருக்கையில் இனப்பிரச்சினையாவது... மண்ணாங்கட்டியாவது.

*பாவலா!*

*விடுதலைப்புலிகளின் விமானம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் கூறியது பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

*விக்னேஸ்வரி,*
*ஸ்கந்தபுரம்.*

தள்ளாத வயதில் தடுமாறும் வார்த்தை... புலிகளின் விமானம் தனது தலைக்கு மேலாகப் பறப்பதாக நினைத்து புலம்பியுள்ளார்.

*பாவலா!*

*விமல்வீரவன்ச சனாதிபதியாக வந்தால் இலங்கையின் நிலைபற்றி?*

*திருநாவுக்கரசு,*
*கிளிநொச்சி.*

பாவம்... பரிதாபம்... அவ்வளவுதான்.

*பாவலா!*

*நாசா நிறுவனத்திலும் ஈழத்தமிழர்கள் வேலைசெய்கின்றார்கள் என்று கூறுகின்றனர் உண்மையா?*

*ராஜன்,*
*உருத்திரபுரம்.*

ஈழத்தமிழன் இல்லாத இடமில்லை அவனுக்கு என்று இருக்க ஓர் இடமில்லை.

*பாவலா!*

*எதிர்காலத்தில் சீனா அமெரிக்காவை மிஞ்சிவிடும் என்று கூறுகின்றார்கள் நீர் என்ன சொல்கின்றீர்.*

*சுஜீபன்,*
*கோணாவில்.*

அதிகாரப் போர் அணு யுத்தத்திற்கும் வழிவகுக்கலாம்.

*பாவலா!*

*நாகரிகம் அவசியமா? அநாவசியமா?*

*நகுலேஸ்வரன்,*
*முல்லைத்தீவு.*

நாகரிகம் என்பது மனிதப்பண்பை, கலாசாரத்தை மீறாத வகையில் அவசியமானதே...

*பாவலா!*

*விதி உங்கள் வாழ்க்கையில் விளையாடியதுண்டா?*

*தாட்சாயினி,*
*வவுனியா.*

வீதிவழியாகச் செல்லும் போது விளையாடிவிடும் அபாயம் ஏற்பட்டதுண்டு.

*பாவலரே!*

*இனியொரு தேர்தல் நடந்தால் ஈ.பி.டி.பி சாதிக்குமா? சாய்ந்துவிடுமா?*

*குமாரி,*
*பரந்தன்.*

இதற்கு முன்னர் எப்போதாவது எதனையாவது சாதித்ததாக வரலாறுண்டா?

*பாவலா!*

*சண்டை துவங்கட்டும் உங்களுக்கெல்லாம் என யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் சிலரை பார்த்துக் கூறுகின்றார்களாம் அப்படி என்ன செய்யப்போகின்றார்கள்?*

*ரவி,*
*சிவநகர்.*

முன்னரை விடவும் வேகமாக பின்வாங்கி ஓடப்போகிறார்கள் அவ்வளவுதான்.

*பாவலா!*

*மக்களின் அழிவிலும் அரசியல் நடத்தும் மனித நேயமற்றவர்களை என்ன செய்யலாம்.?*

*வசந்தி,*
*இராமநாதபுரம்.*

மனித மனநோயாளிகள்... நீரோ மன்னனின் வாரிசுகள்.

*பாவலா!*

*வெலிக்கந்தை வாழ் மக்களும் ஆயுதம் கேட்கின்றார்களே கொடுத்தால்...?*

*சிவானி,*
*திருவையாறு.*

தீவுச்சேனை முகாம் போன்றவை சிதறுண்டு போய்விடும.




"இந்தா எத்தனைமாசமா அலையுறம். இந்த வெதானை இன்னுந்தான் எங்களுக்கு மீளக்குடியமர்ற காசு வாங்கித் தர்லயே"

"ஏன் அவதிப்படுகிறாய் இருவத்தையாயிரம் வாங்கினவைக்கெல்லாம் கூப்பன் முத்திரை பறிமுதலாம்" "எட நல்லாருக்[illegible] உது தூண்டிப் போட்டு [illegible]க்கிறவேலை தானே"

"அப்ப எனக்குந்த இருபத்தையாயிரம் வேண்டாம். உது என்னத்துக்குக்காணும்." "அப்பிடியில்லை பத்தாயிரம் வீடு கட்டவும் பதினையாயிரம் ஏதும் தொழில் துவங்கவும் எண்டு தந்து போட்டு ஆறுமாதமானிய மாகத்தான் உணவு முத்திரையாம். ஆறு மாதகாலத்துக்குள்ள தொழில வளர்த்து அங்கால அதில சாப்பிட வேணுமாம். அவ்வளவுதான்.

"நால்போட்டு சுறாப்பிடிக்கினம்" " என்னப்பா இப்பிடிச் சொல்லுறாய்" "பின்ன என்ன ஒருமாதம் ஆயிரத்து முப்பது ரூபாய்க்கூப்பன் வருடம் பன்னீராயிரத்து முந்நூற்றறுவது ரெண்டு வருசம் ஏறக்குறைய இருபத்தையாயிரம். முதலே காசெடுத்தவைக்கு இது நட்டம். இன்னுங்கொஞ்ச நாளைக்கு முத்திரைய வச்சிருப்பம். அவை தாற நேரம் காசு தரட்டும்" "சரிதான். இப்ப உள்ள விலைவாசியில இன்னும் பத்தாயிரத்துக்குப் பத்திக்கப்பும் வாங்கேலாது. பதினையாயிரமும் சேர்த்தாக்கூட வீட்டுக்குக் கிடுகு வாங்கேலா" "ம்... ஆனைப் பசிக்குச் சோளப்பொரி"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 112



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 112

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

பெயர் : ......................................................

முகவரி : ......................................................

......................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 111



**திருமதி. சந்தோசம்,**
**பருத்தித்துறை.**

### பரிசுக்குரிய வரிகள்

*நான் வளர்த்த நாய் என்னை மறக்கவில்லை*
*என்னை வளர்த்த மண்ணை நான் மறப்பேனா*
*அன்று தம்பி தலைமை கிடைத்திருந்தால்*
*இன்று தமிழ் மண்ணில் நின்றிருப்பேன்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*நான் பசித்திருந்து பாசத்தோடு ஆளாக்கிய பிள்ளைகள்*
*நடுத்தெருவில் விட்டனர் நீன்றி கெட்டவர்களாகி - ஆனால்*
*நான் உண்ட எச்சியை உண்ட நாய் நன்றிமறவாமல்*
*நன்மகனாய் என் காலடியில் காவலாய் காத்துக்கிடக்கிறது.*

சிவாஜினி சுரேஸ்குமார்,
புதுக்குடியிருப்பு.

*ஆடிப்பாடி வாழ்ந்த ஊரிழந்தும்- ஆறுதல் தந்த*
*உறவிழந்தும்- ஆழ்மனதில் ஆற்ற முடியா*
*துயர் சுமந்தும்- ஆசைப்பிராணியுடன்*
*ஆணித்தரமான உன் இருப்பு; விடியலின் வரவேற்பு.*

ராஜசெல்வி,
கிளிநொச்சி.

*வீட்டுக்காவலளோடு சேர்ந்து- எமது*
*நாட்டைக் காக்கும் எண்ணமோ?*
*வயதான காலத்திலும் உங்கள்*
*உயர்வான எண்ணத்திற்கு உண்டோ ஈடு.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*உறவுகளையும் இழந்து விட்டேன்*
*ஊர்மனையினையும் இழந்து விட்டேன்*
*"தமிழீழம்" மலர்ந்ததனைக் கண்டபின்பே*
*எந்தனுயிர் நான் துறப்பேன்.*

வ.வசந்தராஜ்,
புளியங்குளம்.

*அந்நாளில் போராடியிருந்தால் ஐயா*
*இந்நாளில் இந்(ழி) நிலை எமக்கேன் -இன்று*
*போராளியாய் உன் பேரன் வாழ- நீ*
*ஈழதேச, வரவிற்காய் காத்திருக்கிறாயா?*


சு.செல்வி,
பரந்தன்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குமரகுரு புடைவை அழகு பொருள் வாணிபத்தினரால் கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடாத்தப்பட்ட மாபெரும் பரிசளிப்பு விழாவும், வாடிக்கையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும்.



பொதுச் சுடர் ஏற்றும் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள்



அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்படுகின்றது.



குமரகுரு புடைவை அழகு பொருள் வாணிபத்தினரால் வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்திற்கான அன்பளிப்புப் புடைவை வகைகள் கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் அவர்களிடம் வழங்கப்படுகின்றது.



தெரிவு செய்யப்பட்ட குமரகுரு வாடிக்கையாளர் ஒருவருக்கு தங்கப்பரிசு வழங்கப்பட்ட பின்னர்.



குமரகுரு புடைவை அழகு பொருள் வாணிபத்தின் வாடிக்கையாளர் ஒருவருக்குப் பரிசு வழங்கப்படுகின்றது.



குமரகுரு புடைவை அழகு பொருள் வாணிபத்தினரால் வெள்ளிநாதத்தின் அனுசரனையுடன் நடத்தப்பட்ட பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு சேலை பரிசாக வழங்கப்படுகின்றது.

(சி-11468)

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ம் ஆண்டு எப்ரல் மாதம் 25 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.